வ.உ.சி. அறக்கட்டளை



# தமிழ் தந்த வ.உ.சி.

டாக்டர். தி. லீலாவதி
இராணிமேரி கல்லூரி

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# தமிழ் தந்த வ. உ. சி.

டாக்டர் தி. லீலாவதி
இராணி மேரி கல்லூரி.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
**International Institute of Tamil Studies**
டி. டி. டி. ஐ., தரமணி, சென்னை - 600 113.

அறக்கட்டளைப்பொழிவு வரிசை.

**Bibliographical Data**



| | | |
|---|---|---|
| Title of the book | : | Thamizh Thantha V. O. C. |
| Author | : | Dr. T. LEELAVATHI<br>Queen Mary's College<br>Madras. |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>T.T.T.I., Tharamani, Madras-600 113. |
| Publication Number | : | 127 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | December 1986 |
| Paper used | : | 14.6. T. |
| Size of the book | : | 21 x 14 cms |
| Printing Type used | : | 10 Point |
| Number of Copies | : | 1200 |
| Number of Pages | : | VII + 118 |
| Price | : | Rs. 15/- |
| Printers | : | Aarthi Printing House,<br>416-A, Mount Road, Nandanam,<br>Madras-600 035. |
| Binding | : | Card Board |
| Artist | : | Mr. Sigamani |
| Subject | : | A Study on V. O. C |

# பதிப்புரை

டாக்டர் அ. நா. பெருமாள்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

மக்கள் வாழ்க்கைக்குப் பயன்தரும் அரிய சிந்தனைகளைத் தாங்கிய செந்நூல்கள் பலவற்றை ஆக்கித் தருவதை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பெருங்கடமையாகக் கொண்டு செயல்செய்து வருகின்றது. இந்நூல் வெளியீட்டு முயற்சியில் அறக்கட்டளைகளின் பங்கு சிறப்பிடம் பெறத்தக்கது. தமிழுக்கும் தமிழர்க்கும் உழைத்த சான்றோர்கள், தலைவர்கள் பெயரில் அமைந்த பல அறக்கட்டளைகளின் சார்பில் ஆண்டுதோறும் நூல்கள் பல வெளிவந்து கொண்டுள்ளன. உலகத்தமிழராய்ச்சி நிறுவனம் தன்பெயருக்கேற்ற வகையில் இவ் அறக்கட்டளைப் பொழிவுகளைப் உலகின் பல நாடுகளிலும் பரந்து நிறைந்து வாழும் தமிழர்களின் மொழி, கலை, பண்பாடு, வாழ்வு பற்றியெல்லாம் சொற்பொழிவு நிகழ்த்தி நூல்கள் பல வெளியிடும் திட்டத்தைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் பெயரில் நிறுவனம் அமைத்துள்ள அறக்கட்டளையின் சார்பில் இப்பொழுது வெளிவரும் பொழிவுநூல் இரண்டாவதாகும். 'செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார்' என்னும் பெயரில் சென்ற ஆண்டு முதற் பொழிவு நூல் வந்தது.

நாட்டு விடுதலைப் போரில் முன்னணித் தலைமை பூண்ட வ. உ. சிதம்பரனார் என்னும் தியாக சீலரின் மொழித் தொண்டுகளை இப்பொழிவு நூல் மையமாகக் கொண்டு ஆய்ந்துரைக்கின்றது. இராணி மேரி கல்லூரியில் நற்புலமையுடன் பணியாற்றும் டாக்டர் தி. லீலாவதி அவர்களின் அரிய உழைப்பால் உருவான இந்நூல் தியாக சீலரின் அருமை

பெருமைகளை நாம் வியக்கும் வண்ணம் படம் பிடித்துக் காட்டும் மாட்சியுடன் திகழ்கின்றது. இத்தகு சிறப்புமிக்க நூலை ஆக்கித்தந்த அம்மையார் அவர்களுக்கு என் பாராட்டு களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சீரிய முறையில் முடுக்கமான பணிகள் பலவற்றை மேற்கொள்ள நல்வழி காட்டி வரும் தமிழ் நாட்டரசின் கல்வி, சட்ட அமைச்சர் மாண்புமிகு சி. பொன்னையன் அவர்களுக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழையும் தேசியத்தையும் ஒருங்குவைத்தெண்ணும் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி. அவர்கள் தமிழ்வளர்ச்சி உயர் நிலைக் குழுவின் தலைவராகப் பொறுப்பேற்றபின் நிறுவனம் வெளியிடும் இந்நூலும் தமிழையும் தேசியத்தையும் இணைத்துப் பாடுபட்ட வ. உ. சி பற்றியதாக இருப்பதை இவ்வேளையில் எண்ணிப் பார்க்கிறேன்.

நிறுவனம் மேற்கொள்ளும் ஆய்வுத் திட்டங்களையெல்லாம் கண்டு நெறிப்படுத்தி வரும் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் ஔவை. நடராசன் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதைப் பெருங் கடமையாகக் கருதுகிறேன்

மிகக் குறைந்த காலத்தில் அழகு மிளிர இந்நூலை அச்சிட்டுத் தந்த ஆர்த்தி அச்சக உரிமையாளர் திரு. க. செயகுமார் அவர்களுக்கும் சிறந்த முறையில் அட்டை ஓவியம் உருவாக்கித் தந்த ஓவியர் சிகாமணி அவர்களுக்கும் மெய்ப்புத் திருத்தப் பணிகளை நன்முறையில் ஏற்றுச் செய்து தந்த டாக்டர் கு. இராசேந்திரன் அவர்களுக்கும் சிறப்புச் சொல்லகராதி உருவாக்கிக் கொடுத்த திரு அ. திருநாவுக்கரசு அவர்களுக்கும் என் இனிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை
27 - 12 - 86

அன்புடன்,
அ. நா. பெருமாள்

# முன்னுரை

வ. உ. சி என்ற மகத்தான சுதந்திரப் போராட்ட வீரரைச் செந்தமிழ் நலங் கனிந்த தமிழ் அறிஞராய்க் காணும் வாய்ப்புக் கிடைத்தபோது நான் மேற்கொண்ட அறிவு உழவின் விளைச்சல் இந்நூல். தயக்கமுடன்தான் பணியுள் புகுந்தேன். கிடைத்த மூலங்களைத் திரட்டிப் பார்த்தபோதுதான் வ. உ. சி. என்ற வீரக்கனல், தண்ணார் தமிழ் அளித்த தண்புனல் என்பதுணர்ந்தேன். இதுவரை வெளிச்சம் காணாத உண்மைகள் ஒளிவீசக் கண்டு மெய்சிலிர்த்தேன். வ. உ. சி. என்ற மாமனிதரின் ஆன்ம தரிசனம் கிடைத்த போது அவர்தம் பயன்கருதா மொழித் தொண்டின் முழுப் பரிமாணத்தையும் கண்டு வியக்காமல் இருக்க முடியவில்லை. அவர்தம் தமிழ் ஆளுமைத் திறனில் உரைத் திறன் பற்றியே இங்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இனியும் வ. உ. சி. ஆய்வு தொடரவேண்டும்.

வ. உ. சி. என்ற தமிழறிஞரின் மொழித் தொண்டினை முழுதும் அளந்து காட்டிவிட்டேன் என்று சொல்ல மாட்டேன் அவரைத் தமிழறிஞர் வரிசையில் வைத்து இனங்கண்டு போற்ற மேற்கொண்டமுதல் முயற்சி, அச்சமும் பக்தியும், நேர்மையுமாய் அவரை அணுகித் தரிசித்த தமிழ் முயற்சி என்றுதான் பணிவுடன் சொல்வேன். என் அறிவுப் பாதையில் புதிய ஒளி வீச்சுப் பெற்றதே இம்முயற்சியின் முழுமையான பயன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்துடன் நெருங்கிய நட்புக் கொண்டவள் நான். இந் நட்பினைப் பாராட்டித்தான் போலும் மதிப்பிற்குரிய டாக்டர். எஸ். வி. சுப்பிரமணியம் அவர்கள், இத்துறையில் என்னைப் பணிக் கொண்டார். அவருக்கு நன்றி கூறுவேன்.

நிறுவன இயக்குநர் டாக்டர். ஏ. என். பெருமாள் அவர்கள் என் வளர்ச்சியில் பெரிதும் கருத்துடையவர். அவர் தலைமைப் பொறுப்பில் இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழவிருக்கும் பொருத்தம் நினைந்து மகிழ்கின்றேன். பெருமையுடன் அவரை மதித்து நன்றி பாராட்டுவேன்.

நான் பணியாற்றும் இராணிமேரி கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் & முதல்வர் டாக்டர். பு. பா. இராஜ இராஜேஸ்வரி அவர்கள் என்னிடம் நட்பும், அன்பும் பாராட்டி இலக்கியப் பணிகளில் என்னை ஊக்குவிக்கும் அருளுள்ளம் கொண்ட வர்கள். அவர்களை நன்றியுடன் நினைப்பதில் பெருமை ஏற்படுகிறது.

என் தொழில் வாழ்விற்கு நிரந்தர வழிகாட்டி, ஆசான், நண்பன் எல்லாம் டாக்டர். ம. ரா. போ. குருசாமி அவர்கள் தாம். மாமா என்ற உறவு முறைக்கும் அப்பால் அவரை என் ஆய்வு வாழ்வின் வழிகாட்டியாகவே மதித்து வருகிறேன். வ. உ. சி. பற்றிய கருத்துரைகள் வழங்கினார்கள். கோவை யிலிருந்து நூல்களைச் சுமந்து வந்து தந்தார்கள். அந்த எளிவந்த தன்மைக்கு நன்றி பாராட்டுதல் இயலாது.

வ. உ. சி. ஆய்வாளர் திரு. ம. ரா. அரசு அவர்கள், தாம் திரட்டிய மூலத்தரவுச் செல்வங்களை எல்லாம் தடையேயின்றி வழங்கிய பெருந்தன்மையைப் பாராட்டச் சொல்லேது? என்பால் கொண்ட அன்பினால் உவந்து அளித்து தம் உயர்வினைக் காட்டிவிட்டார் அரசு. "தம்பியை உடையான் ஆய்விற்கு அஞ்சான் என்ற புதுமொழி படைத்த இளவலுக்கு என் அன்பும், வாழ்த்தும், நன்றியும்.

என் ஆய்வு மாணவர் செல்வி. திலகவதி, நிழலாய்த் தொடர்ந்து நினைப்பதைச் செயற்படுத்துவார். அவர் அமைதித் தொண்டு வ. உ. சி. தமிழ்ப்பணியிலும் சிறந்தது. அவரை வாழ்த்துவதும் நன்றி பாராட்டுவதும் என் உரிமை.

இந் நூல் உருவாவதற்கு உறுதுணையாயிருந்த சான்றோர் களையும் என் குடும்பத்தாரையும் தோன்றாத்துணையாயிருந்து என்னை இயக்கும் இறையருளையும் இவ்வேளையில் ஒருசேர நினைந்து கசிந்து நிற்கின்றேன்.

சென்னை
25-12-86

தி. லீலாவதி

# உள்ளுறை


| | பக்கம் |
| --- | --- |
| பதிப்புரை | |
| முன்னுரை | |
| 1. படைப்புச் சூழல் | 1 |
| 2. படைப்புகள் | 26 |
| 3. உரைநடைத்திறன் | 81 |
| துணை நின்ற நூல்கள் | 108 |
| சிறப்புச் சொல்லகராதி | 115 |

# 1. படைப்புச் சூழல்

## சமுதாய நிலை

"தமிழால் சிதம்பரனார் வளர்ந்ததும், சிதம்பரனாரால் தமிழ் வளர்ந்ததும் காலத்தின் கட்டாயம்...அரசியல் மாற்றமோ, சமுதாய மாற்றமோ மக்கள் பங்கின்றி நிகழ்ந்ததாக வரலாறு இல்லை. இந்த மாற்றத்துக்கு மக்களைத் திரட்டிய வ. உ. சி. தமிழில் பேச வேண்டிய கட்டாயம் இருந்ததும் உள்ளத்தின் உண்மை ஒளி வாக்கினிலே பிரகாசித்ததும் அன்றிருந்த சரித்திர வளர்ச்சிக் கட்டமாகும்" என்று வ. உ. சி. யின் பேரனார் ஆ. சண்முகசுந்தரம் தம் பாட்டனார் தமிழ் வளர்த்த அருமையைக் குறிப்பிட்டுத் தமிழ்ச் சமுதாயத்தின் தேவை யாகவும், காலத்தின் வேண்டுதலாகவும், தலைவர்கள் தோன்றி மொழியையும், நாட்டையும் ஒருங்கு வளம்பெறச் செய்ய முனைந்த வரலாற்றினை நினைவு கூர்கின்றார். [1] அரசியல், சமூகம், இலக்கியம் என்ற மூன்று துறைகளிலும் எழுச்சியையும், உணர்ச்சியையும் ஊட்டிய தலைவர்கள் வரிசையில் சமகாலச் சான்றோர்களாய் விளங்கியவர்கள் மூவர். கவிதைத் துறையில் தமிழை மறுபடியும் மலரச் செய்தவர் பாரதி; மேடைத் தமிழுக்கு ஆக்கம் நல்கியவர் சுப்பிரமணிய சிவா; உரைநடைத் தமிழுக்கு உரம் ஊட்டியவர் வ. உ. சி. மூவரும் அடிமை மண்ணில் விடு தலையை வேட்கையுடன், நாட்டு உரிமை வேண்டிப் போராடி யவர்கள். அரசியல் விடுதலையுடன், சமுதாயவிடுதலை வேண்டி நின்றவர்கள். மொழிக்கும் விடுதலைதந்த முனைவர்கள். பண்டிதர்கள், ஆங்கில மோகத்தில் தமிழ் பேசவும் கூசியவர்கள் ஆகியோரிடமிருந்து மொழியைக்காத்து மக்கள் மொழியாய், பழகு தமிழாய் வளரவும் வாழவும் வழி வகுத்தவர்கள். அடிமை இந்தியாவில், தமிழகம், வ. உ. சி., பாரதி, சிவா போன்ற தலைவர்கள் வருகை நோக்கிக் காத்திருந்தது எனலாம்.

---

1. ஆ. சண்முகசுந்தரம்; வ. உ. சி. வளர்த்த தமிழ்; தீக்கதிர் மலர்; ப. 85.

"ஆரம்பத்தில் ஆங்கிலம் படித்த வழக்கறிஞர்கள் தங்களுடைய கோரிக்கைக்காக நடத்திய பிரச்சார இயக்கத்தை ஆங்கில மொழியின் மூலமாகத்தான் நடத்தினர். ஆங்கிலேயரை விட ஆங்கில மொழியைத் திறமையாகப் பேசுபவர்கள், எழுதுபவர்கள் இந்நாட்டில் இருந்தனர் என்பதையே பெருமையாகப் பேசிக் கொண்டிருந்தனர். உதாரணமாக, மகாகனம், வி. எஸ். ஸ்ரீ னிவாச சாஸ்திரி ஆங்கில மொழியை வெகு லாவகமாகவும், திறமையாகவும் இலக்கணப் பிழையின்றியும் பேசுபவர் என்று பெருமைப்பட்டுக் கொண்டவர்கள் எத்தனையோ பேர்" என்று இந்திய நாட்டு விடுதலைப் போர்க்கால மொழிநிலை பற்றிக் குறிப்பிடுவார் பி. ராமமூர்த்தி[2]. ஆயின் தேசிய உணர்ச்சிப் பெருக்கில், மொழி உணர்ச்சியும் கிளர்ந்து எழுந்து வளரத் தொடங்கியது சரித்திரம் கூறும் உண்மை. ஆங்கில ஆட்சியால் இந்திய மண்ணிற்கே உரிய பல்வேறு இனத்தினரின் தாய்மொழி வளர்ச்சி தடைப்பட்டது. அதே நேரத்தில் உரிமைக் குரல் உயர உயர, தளர்ந்த தாய்மொழிக் குடும்பங்கள் வீறுகொண்டு எழுந்து பல்துறை வளர்ச்சிகளில் சிறந்தன.

"உயர்தரக் கல்வி நமது பாஷை மூலமாகக் கொடுக்க வேண்டுமென்றும், அப்படிக் கொடுத்தால் மாத்திரமே அக்கல்வியால் நமது நாட்டுக்குப் பயனுண்டாகுமென்றும் சொல்லக் கூட நமக்கு இன்னும் தைரியம் பிறக்கவில்லை. நாம் இங்கிலீஷ் பாஷையும் படிக்க வேண்டும் என்று கூறுதல் மிகை. அதுவும் கேவலம் ஜீவனார்த்தமாக மாத்திரம் செய்யக் கூடாது. இங்கிலீஷ் மாத்திரமேன்? பிரெஞ்சு பாஷையும், ஜெர்மன் பாஷையும் படித்தால் இன்னும் விசேஷம்" என்று வேதனையுடனும் சற்று வெறுப்புடனும் ரவீந்திரநாத் தாகூர் 'மாடர்ன் ரெவியூ' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் எழுதினார். பாரதியார் இதனைச் சுதேசமித்திரன் இதழில் மொழி பெயர்த்துத் தந்தார். இப்பகுதி அன்றைய இந்திய மொழிகளின் இருட்டு நிலையை எடுத்துக்காட்டும்.

---

2. மேற்படி மலர், பி. ராமமூர்த்தி; இந்திய நாட்டின் விடுதலை இயக்கமும் தமிழ் மொழியின் வளர்ச்சியும்; ப. 15.

"இனி வ. உ. சி. வாழ்ந்த காலத்துத் தமிழகத்தின் மொழிநிலை பற்றி அறிதல் பொருந்தும். ஆங்கிலப் பற்று ஒரு புறம். வடமொழிக் கலப்பு இயல்பாகத் தமிழில் இணைந்து காணப்பட்ட திறம் மற்றொரு புறம். இதற்கிடையில் தமிழின் பழமையையும், சிறப்பினையும் மீட்டுணரச் செய்யும் முயற்சிகள் சிலவும் மேற்கொள்ளப்பட்டன. இத்தகு தெளிவற்ற மொழி நிலைப் போக்கினைப் பாரதியின் கூற்றுக்களும் அன்றைய பத்திரிகைகளும் எடுத்துக்காட்டித் தாய்மொழி வளர்ச்சியில் கருத்தினைச் செலுத்த வேண்டுமென வற்புறுத்தக் காண்கிறோம்.

## அடிமைத் தமிழகத்தில் பாரதிவழி

## தாய்மொழி நிலை

பாரதியின் கட்டுரைகளிலும் அன்றைய தமிழின் நிலை பற்றிய பலகுறிப்புகளைக் காணலாம். "நமது ஜனத் தலைவர்கள் இங்கிலீஷில் யோசிப்பதையும் பேசுவதையும் நிறுத்தினாலொழிய நமது பாஷை மேன்மைப்பட இடமில்லை" என 'ஹிந்து' வில் வாசகர் ஒருவர் எழுதியுள்ளதைக் குறிப்பிடுகிறார் பாரதி[3]. இப்படி எழுதியவர் தமிழ்ப் பத்திரிகைகளில் இதனைத் தமிழில் எழுதி வெளிப்படுத்தியிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்றும் சுட்டிக் காட்டுகிறார் பாரதி. ஆங்கிலம் படித்த வழக்கறிஞர்களும், ஆசிரியர்களும், தமிழ் படித்து, தமிழில் பேசி மொழியை வளர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றார். எனவே அந்நாளில், கற்றவர் கூட்டம் ஆங்கிலமே கற்ற கூட்டமாய் அமைந்திருந்ததும் நினைக்கத் தக்கது.

## படைப்பு இலக்கியங்கள்

"உண்மையான கவிதைக்குத் தமிழ் நாட்டில் தக்க மதிப்பில்லை. இங்கிலீஷ் பாஷையிலிருந்து கதைகள் மொழி பெயர்த்துப் போட்டால் பலர் வாங்கி வாசிக்கிறார்கள் அல்லது இங்கிலீஷ் முறையைத் தழுவி மிகவும் தாழ்ந்த தரத்தில் புலர் புது நாவல்கள் எழுதுகிறார்கள். அவர்களுக்குக் கொஞ்சம் லாபமேற்படுகிறது. தமிழில் உண்மையான இலக்கியத்

---

3. பாரதியார் கட்டுரைகள், ப. 202.

திறமையும் தெய்வ அருளும் பொருந்திய நூல்கள் எழுதுவோர் ஒரு சிலர் தோன்றியிருக்கிறார்கள்; இவர்களுடைய தொழிலை அச்சடிப்பாரில்லை; அச்சிட்டால் வாங்குவாரில்லை"[4] என்று வருந்தும் பாரதி அன்றைய படைப்பிலக்கியப் போக்குகளின் புன்மையைச் சுட்டிக் காட்டுவதும் எண்ணத் தக்கது. காலஞ்சென்ற ராஜமையர் புதிதாகத் தமிழ்க் கதை எழுதுவதில் உண்மையான திறமை காட்டியிருக்கிறார். "அவருக்குத் தகுந்த ஸம்மானமில்லை. ஆதலால் அவர் அந்தத் திறமையை மேன்மேலும் வளர்த்துக் கொண்டு போக இடமில்லாமல் ஆரம்பத்திலேயே கைவிட்டு இங்கிலீஷ் மாதப் பத்திரிகை நடத்தப் போய்விட்டார்" என இராஜமையரின் திறமை சமகாலத் தமிழகத்தில் வரவேற்பின்றி ஒடுங்கியது என்ற வரலாற்று உண்மை ஒன்றினை வெளிப்படுத்துகின்றார் பாரதி.

## பத்திரிகைகள்

இனித் தமிழ்ப் பத்திரிகைகளின் நிலை பற்றிப் பாரதி குறிப்பிடுகையில், அவற்றிற்கு அரசின் ஆதரவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுகின்றார். "தமிழ் நாட்டில் இப்போது நடைபெறும் ராஜாங்கம் தமிழ்ப்பாஷையில் தேர்ச்சியுடையதன்று. தமிழ்ப் பாஷையை முதலாக மதிப்பதன்று. "தமிழ் முழு நாகரிகம் உடையதா; இல்லையா" என்பதைப் பற்றியே சந்தேகங்களுடையது; ஆதலால் தமிழ்ப் படிப்பில்லாமலும், தமிழ் மணமில்லாமலும் சந்தோஷமடைந்திருக்கும் இயல்புடையது" என்று அன்றைய அரசியல் போக்கினைத் தெளிவுபடுத்துவார். இந்தச் சூழலில் வெளிவந்த பத்திரிகைகளும் "American women" "அமெரிக்க ஸ்திரி" "Our Madathipathis" "நமது மடாதிபதிகள்" என்பது போல "ஒவ்வொரு வியாசத்துக்கும் தமிழ் மகுடத்துக்கு மேல் இங்கிலீஷ் மகுடமொன்று சூட்டியிருக்கிறது" எனக் காட்டி, தமிழில் வெளிவந்த பத்திரிகைகளிலும் ஆங்கிலம் முதன்மைப் படுத்தப்பட்ட நிலையைக் கண்டு மனம் வருந்துகிறார்[5].

---

4. மேலது, ப. 204.
5. மேலது, ப. 207

## மொழி பெயர்ப்பு

இனி, பத்திரிகைகளில் அறிஞர்கள் பேச்சுக்களைப் பிற மொழியினின்றும் மொழிபெயர்க்கையில், தாய் மொழியின் சொல் அமைவுகளையும், தொடர் அமைவுகளையும் பயன்படுத்தாமல் பிறமொழி அமைப்பினை அப்படியே பின் பற்றும் போக்கினையும் கடிந்துரைக்கின்றார் பாரதி. "தமிழ் நாட்டிலோ முழுதும் தமிழ் நடையை விட்டு இங்கிலீஷ் நடையில் தமிழை எழுதும் விநோதமான பழக்கம் நமது பத்திராதிபர்களிடம் காணப்படுகிறது"[6] என்று மொழி பெயர்ப்புத் துறையிலும் பொருள் புரியா அந்நிய மொழி ஆதிக்கத்தின் அவலத்தை எடுத்துரைப்பார்.

தமிழில் அறிவியல் செய்திகளை மொழிபெயர்க்கும் பணி வளர வேண்டும், இதனை வளர்க்கச் சங்கம் ஏற்பட வேண்டும். "நமது இராஜாக்களுக்கும் ஜமீன்தார்களுக்கும், செட்டிகளுக்கும் நல்ல புத்தியுண்டாகித் தமிழில் நவீன சாஸ்திரம் சேர்ப்பதாகிய காரியத்தை அவர்கள் தக்க பண்டிதர்களின் உதவி கொண்டு விரைவில் நிறைவேற்றி மேன்மை பெறக் கூடும்" என அறிவியல் தமிழ் வளர்தற்கான மொழித்திறன் உருவாக வேண்டிய கட்டாயத்தினை ஓர் எதிர்பார்ப்பாய்ப் பெற வைக்கின்றார் கவிஞர்.

மொழிபெயர்ப்புப் பணிக்குத் துணைநிற்கும்வண்ணம், 'கலைச் சொல்லாகப் பணி' சிறக்க வேண்டும் என்றும் அதற்காக அந்நாளில் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் சேலத்தில் "தமிழ் - சாஸ்திர பரிபாஷை சங்கத்தாரின் பத்திரிகை" என்ற பத்திரிகை ஒன்றினைத் தொடங்கியது பற்றிக் குறிப்பிடுவார் பாரதியார். "ஆரம்பத்திலே தமிழில் எழுதாமல் தமிழருக்கு வேண்டிய இக்காரியத்தை இங்கிலீஷ் பாஷையிலே தொடங்கும்படி நேரிட்டதற்கு ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் சொல்லும் முகாந்திரங்கள் எனக்கு முழு நியாயமாகத் தோன்ற வில்லை. ஆனால் கூடிய சீக்கிரத்தில் தமிழ்ப் பகுதியொன்று அப்பத்திரிகையில் சேருமென்று தெரிகிறது" என்று பாரதி சொல்வதினின்றும் அன்றைய தாய்மொழி வளர்ச்சி என்பது ஆங்கிலவழிப்பட்டதாய் நின்ற முரண்படு போக்கினை உணர முடிகின்றது.

---

6. மேலது, ப. 208

## தமிழிசை

அடுத்து, அடிமைப்பட்ட தமிழகத்தில் ஆங்கில மொழி ஆதிக்கம் ஒருபுறம் இருக்க, மக்கள் மனதிற்கு இன்பம் தரும் இசையிலும், தமிழுக்கு இடம் இல்லை. கர்நாடக சங்கீதம் என்ற வகையில் தெலுங்கிலும், ஸம்ஸ்கிருதத்திலும் உருவாக்கப் பட்ட கீர்த்தனைகளின் செல்வாக்கில், மக்கள் மன்றில் தமிழிசை பேணுவாரற்று மங்கிக் கிடந்தது. "தமிழ்ச் சபைகளிலே எப்போதும் அர்த்தந் தெரியாத பிற பாஷைகளில் பழம் பாட்டுகளை மீண்டும் சொல்லுதல் நியாயமில்லை. அதனால் நமது ஜாதி சங்கீத ஞானத்தை இழந்து போகும்படி நேரிடும்"[7] என, பாரதி வருந்துவது இன்றுவரை பொருந்திய செய்தியாய் அமைவது தமிழ் இனத்தின் உணர்வுக் குறைபாடா? மொழிப் பற்றில் காணும் குறையா? கலை வளர்ப்பதில் காட்டும் அலட்சிய மனப்பான்மையா? என்ற கேள்விகளுக்கு விடை காண்பது வேறு துறை பற்றிய ஆய்வாக விரிவடையும். அது இங்கு வேண்டா. ஆயின் பாரதி காலத் தமிழ்ச் சமூகம் மரபுவழி வந்த தேவார திருவாசகப் பிரபந்த பக்திப் பாடல்களையோ கோபால கிருஷ்ண பாரதியார், அருணாசலக் கவிராயர் போன்றோரின் தமிழ்க் கீர்த்தனைகளையோ பெரிதும் மதிக்கவில்லை; தெலுங்கு, வடமொழிக் கீர்த்தனைகளைத் தமிழ் மேடைகளில் பரப்பி வந்தது என்பது புலனாகிறது.

பாரதியின் வாக்குகள் அன்றைய தமிழ்ச் சமுதாயத்தின் போலித் தன்மையை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன. தாய் மொழி, பேச்சில், எழுத்தில், இசையில் என்று பல துறைகளில் புறக்கணிக்கப்பட்டுப் பேணுவாரின்றிப் பாரதி போன்ற கவிஞனையும், வ. உ. சி., சுப்பிரமணிய சிவா போன்ற தலைவர்களையும், உ. வே. சாமிநாதையர் போன்ற தமிழ் அறிஞர்களையும் எதிர்நோக்கித் தவம் கிடந்தது என்றே சொல்ல வேண்டும்.

---

7. மேலது. ப. 217

## அன்றைய தமிழ் இதழ்கள்வழி

தமிழுக்காக வாழ்ந்து மறைந்த பாரதிக்குப் பின்னும் இருபதுகளிலும், முப்பதுகளிலும் கூடத் தமிழ் உயர்ந்துவிட வில்லை. அமிர்தகுணபோதினி என்ற தமிழ் இதழ் காட்டும் குறிப்புகள் சில அன்றைய தமிழின் தளர்ச்சியினைக் காட்டும் சான்றுகளாகி நிற்பதை இங்கு எடுத்துக்காட்ட வேண்டும்.

"அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான ஓர் உயர்ந்த செந்தமிழ் மாதப் பத்திரிகை" என்று குறிப்பிட்டு வெளிவந்த ஆநந்த குண போதினி 1926 செப்டம்பர் இதழில் 'பத்திரிகா சாரம்' என்ற பகுதியில் சமகாலப் பத்திரிகைகளிலிருந்து எடுக்கப்பட்ட செய்திச் சுருக்கங்களைத் தருகிறது. அதில் ஒன்று, 'இந்து சாதனம்' என்ற பத்திரிகை யில் வெளி வந்த குறிப்பு இங்கு நோக்கத்தக்கது.

## தமிழ்மொழி படும்பாடு

"ஐயோ, அருந்தமிழே, செந்தமிழே, மூவேந்தரால் முச்சங் கத்தால் வளர்க்கப்பட்ட தமிழே; இப்பொழுது உன் பிள்ளை களாற் கைவிடப்பட்ட தமிழே; நூலிழந்த தமிழே, இப்பொழுது உன்னைப் பரிபாலிப்போர் காலத்தில் நீ இன்னமும் என்னென்ன அவமானங்கட்கு ஆளாகப் போகின்றனையோ யாமறியோம். இக்காலத்தில் உன்னைத் தண்ணீருக்குப் பதிலாக வெந்நீர் வார்த்து வளர்க்க முயலுகின்றனர்". இப்பகுதி அன்றைய தாய்மொழியின் நிலையினைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டுகின்றது. அந்நிய மொழி பயிலும் ஆர்வத்தில் பிறந்த மண்ணிற்குரிய பண்பாட்டு விளக்கமான தாய்மொழிக் கல்வி புறக்கணிக்கப் பட்டு வேற்றுமொழிப் பயிற்சியும், பண்பாட்டுக் கலப்பும் தமிழினத்தின் ஆன்மாவினைச் சீர்குலைத்து மாற்றிய தன்மை யினையும் இவற்றால் புரிந்து கொள்ள முடிகிறது.

1926 அக்டோபர் இதழில் மேற்குறித்த தலைப்பில் வெளி வந்த இரு செய்திகள் கருதத்தக்கன. லோகோபகாரி இதழில், "காலஞ்சென்ற பாரதியார் தமது தாய் நாட்டில் விடுதலைப் போருக்குத் தமது பாடல்கள் வாயிலாகப் பெரியதோர் துணை புரிந்திருக்கிறார். அதன் அருமையை நம் தலைவர்கள் என்ப

வர்கள் சரியாக அறியவில்லை. தமிழ் அருமை அறியாத ஆங்கிலத் தலைவர்களாக இருப்பதே அதற்குக் காரணம்'' என்று எழுதுகிறது. பாரதி மறைந்த ஐந்து ஆண்டுகளிலேயே அவர் பாடல்களைப் பொருட்படுத்தாத தமிழ்ச் சமுதாயத்தின் மொழிப்பற்றினைக் கண்டறியமுடிகின்றது.

'திருச்சி நேசன்' இதழ் ''தமிழ்நாட்டில் தமிழ்பேசும் தாய் வயிற்றில் பிறந்த ஒருவர் தமிழ்படித்தல் அகௌரவமெனக் கருதுவது அன்னோரின் மனோபாவம் எவ்வளவு கீழ்நோக்கிச் சென்றிருக்கிறதென்பதையே விளக்குகிறது. ஐயோ! எந்த நாட்டிலும் இத்தகைய பரிதாப நிலைமை இருக்காது'' என வேதனைப்படுகிறது. எனவே விடுதலைக்கு முன் தமிழ்வளர்ச் சிக்குப் புதிய பாதை வகுக்க முற்பட்ட அறிஞர்கள் தொண்டு ஒருபுறம் இருக்கப் பரவலாகத் தாய்மொழி அறிவு, தாய்மொழிக் கல்வி, தாய்மொழி மேன்மை ஆகிய இவை மறுபுறம் இழிவு படுத்தப்பட்டும் ஒதுக்கப்பட்டும் தளர்ச்சியடைந்த போக்கினை வரலாறு காட்டுகின்றது.

1927 ஜனவரி ஆநந்தகுணபோதினி இதழ் தரும் சில செய்திகள் தமிழர்தம் மனப்போக்கினை வெளிப்படுத்துகின்றன. 'பிரபஞ்ச தரிசனம்' என்ற தலைப்பில் ஆசிரியர் சில அறிவுரை களைத் தமிழர் மனங்கொள்ளுமாறு எடுத்துரைக்கின்றார். ''தமிழ்ப்பாஷை தமிழர்களுடைய அருந்தனமாகும். தமிழ்ப்பாஷை அழியாவண்ணம் காப்பது நமது கடமையாகும்'' என்று குறிப் பிட்டு, 'தமிழ்ப் பாஷையிலே இலக்கியபஞ்சம் இப்பொழுது இருக்கின்றது. இந்தச் செற்கள் சிலரைத் திடுக்கிடச் செய்யலாம். எனினும் இது உண்மை. பண்டைக்காலத்து, எளிதிலே அர்த்த மாகாத சங்கத்து நூல்கள் தவிர, மனதைக் கவரக்கூடிய தமிழ்நூல்கள் இப்பொழுதில்லை. சுதந்திர தாகத்தை வளர்க்கக் கூடிய நூல்கள் இப்பொழுதில்லை. பாரதியார் நூல்கள் இருக் கின்றனவேயென்று சொல்லலாம். அதுகூடச் சரியானபடி முழுதும் வெளியாகவில்லையே. இனி வெளிவரினும் தனிமரம் தோப்பாகுமா? பாரதியாரைப் போல் அநேக பாரதிகள் தோன்றி னன்றோ சுதந்திர இயக்கம் வலிவு கொள்ளும்'' என்பார்.

எனவே சி. வை. தாமோதரம் பிள்ளை போன்றவர்கள் பழந்தமிழ்ச் செல்வங்களைப் பதிப்பித்து வெளிப்படுத்தினாலும்

பரவலாக மக்களிடையே அவை செல்வாக்குப் பெறவில்லை என்பது புரிகிறது. அந்நாளில் "சைவப் புராணங்களை வைஷ்ணவர்கள் படிப்பதில்லை. திருவாய்மொழியைச் சைவர்கள் வாசிப்பதில்லை. அருத்தமாகாத சொற்றொடருள்ள கவிகளைப் புனைந்து பண்டிதர்கள் மனக்கோட்டை கட்டிக்கொண்டு தமிழ்ப் பாதையின் வளர்ச்சிக்கான பிரதான விஷயத்தைச் செய்யாது போய்விட்டனர். அவர்கள் பேரில் குறை சொல்லிப் பயனில்லை. பழங்காலத்து மரபையே பின் பற்றிச் சென்றுவிட்டனர். அதனால் நல்ல உணர்ச்சி கொடுக்கும் இயக்கத்துக்குத் தக்க இலக்கியம் தோன்றவில்லை. இயக்கமும் முன்பு இல்லை. இலக்கியமும் பிறக்கவில்லை" என்று ஆசிரியர் கூறுவதிலிருந்து புதிய இலக்கிய வரவு நோக்கித் தமிழகம் காத்துக் கொண்டிருந்தது என்பது புலனாகின்றது.

ஆந்திரர், வங்காளிகள், குஜராத்தியர், மஹாராஷ்டிரர்கள் எல்லாம் முப்பதாண்டுகளுக்கு முன்பே மொழியை வளர்க்கத் தொடங்கியதால் அதன்வழி அரசியல் உணர்வூட்டும் பணியை எளிதாகச் செய்துவிட்டனர். ரவீந்திரர் வங்காளிகளுக்கு அவர் தம் மதிப்பினை உணரச் செய்துவிட்டார். பாரதி தமிழ் உணர்வு ஊட்டினார். ஜி. சுப்பிரமணிய ஐயர் தமிழ்மொழியைக் கொண்டு அரசியல் ஞானம் பெறுவதற்கான வழியினைக் காட்டிச் சென்றார். அவர்களை நாம் பெருமைப்படுத்த வேண்டியதில்லை. அவர்கள் தமிழையும் தமிழரையும் பெருமைப்படுத்தி விட்டுச் சென்றனர். "அந்தப் பெருமையை நாம் பெருக்கிக் கொள்வது கடமையாகும்......தமிழ்ப் பாஷையின் மதிப்பைக்காக்கும் தமிழ்ச் சத்தியாக்கிரகிகள் தேவை" என்று ஆனந்தகுணபோதினி ஆசிரியர் வற்புறுத்துகின்றார்.

"தமிழ்நாட்டில் காமவிகாரங்கள் கொண்ட நவீனங்கள் மலிந்து வருகின்றன. 'ஆநந்த மடம்' போன்ற நல்ல நவீனங்களை எழுத வேண்டும். எழுதுவனவெல்லாம் எளிய நடையில் இருத்தல் வேண்டும். பொது ஜனங்கள் உபயோகப்படுத்தும் சொற்களை இலக்கியத்தில் எடுத்தாள வேண்டும். ஜீவதாது கொண்ட இலக்கியத்திலேதான் அழகு உண்டு. பொது ஜனங்களுக்கு அர்த்தமாகும் இலக்கியத்திலேதான் உயிர் உண்டு" என்று ஆசிரியர் "பண்டிதர் தமிழ்" பொதுமக்களைச்

சென்றடையும் 'மக்கள் தமிழாய்' மாற வேண்டியதன் இன்றியமையாமையினை வலியுறுத்துகிறார்.

தனிமனித வாழ்விற்கு அடிப்படை கல்வியாதல் போல நாட்டின் நலவாழ்விற்குத் தாய்மொழி வளர்ச்சி அடிப்படையாகிறது. மக்கள் உயர மொழியும் உயர்கின்றது. அவர்கள் தாழ்வு அதனையும் பாதிக்கின்றது. அடிமைப்பட்ட நாளில் தமிழர்கள் தாம் உயர வேண்டும் என்று உழைத்த அளவிற்கு மொழியும் வளர்ந்து உயர வேண்டும் என்று எண்ணவில்லை. சுதந்திர வாழ்வு பெறத் தாய்மொழி உயர்வு பெறல் மிகத் தேவையாகும் [என உணர்ந்த நிலையில் அன்றைய தமிழ் இதழ்கள் தாய்மொழி உயர்விற்காகப் போர்க்குரல் கொடுத்தன என்பதை முன்குறிப்பிட்ட செய்திக் குறிப்புகள் விளக்குகின்றன. பாரதியார், வ. உ. சி. போன்ற விடுதலைப் போராட்ட வீரர்கள், அரசியல் பணிகளுக்கிடையில் மொழிப்பணி ஆற்றியதன் நோக்கமும் !இங்குத் தெளிவாகிறது.

வ. உ. சி. யின் தமிழ்ப்பணி பற்றிய ஆய்வினைத் தொடங்குவதற்கு முன் அவர் வாழ்ந்த தமிழகத்தின் மொழிச் சூழலைப் புரிந்து கொண்டால்தான், அவர்தம் தமிழ்த்தொண்டின் சீர்மையினைத் தெளிந்தறிய முடியும் என்ற நிலையில் மேற்குறித்த தமிழ்ச் சமுதாய வரலாற்றுச் சமூகப் பின்னணி சுட்டிக் காட்டப் பெற்றது. இதன்வழி வ. உ. சி. காலத் தமிழ்ச் சமுதாயத்தின் புற, அகநிலை நோக்குகளைக் கீழ்க்கண்டவாறு முறைப்படுத்திக் கொள்ளலாம்.

1. விடுதலை வேட்கை கொண்ட தமிழர்கள், இந்திய உரிமைப் போரில் பங்கு கொள்ளத் துடித்து நின்றனர். பாரதி, வ. உ. சி., சுப்பிரமணியசிவா, ராஜாஜி, பெரியார் போன்ற தன்னலமற்ற பெருந்தலைவர்கள் கூட்டம் ஒன்று உருவாகியது.

2. அரசியல் துறையில் ஆர்வங் கொண்ட தலைவர்கள் மொழிப்பற்றுடையவராய் விளங்கினர். பேச்சு, எழுத்து ஆகிய இருவழிகளிலும் மொழியை வளர்க்க முன்வந்தனர்.

3. தமிழ்நாட்டில் ஆங்கிலமொழி வரவு இருவகை விளைவுகளைத் தந்தது. உரைநடைத் தமிழ் வளர ஆங்கிலப் பாதிப்புப்

பெரிதும் காரணமாயிற்று. அதேசமயம் அந்நியமொழி ஆர்வம், சொந்தமொழி வளர்ச்சியினைப் பாதிக்கவும் காரணமாயிற்று.

4. அந்நாளைய பத்திரிக்கைகள் மொழி வளரவேண்டும் என்பது பற்றிப் பெரிதும் முயற்சி எடுத்தன. தமிழர் தம் மொழிப்பற்றின்மையை எதிர்த்துப் பல பத்திரிகைகள் போர்க் குரல் கொடுத்தன.

5. பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்தல், உரை காணல், புதினங்கள் படைத்தல், மொழி பெயர்த்தல், பேச்சுத் தமிழ் வளர்த்தல், பண்டைய இலக்கியங்களை அறிமுகப்படுத்தல், புதிய உரைநடை வகைகளை உருவாக்குதல், புதிய கவிதை வகைகளைப் படைத்தல் என்ற பன்முக வளர்நிலைப் போக்கு களைப் பரவலாகக் காணமுடிகிறது.

6. வளர்ச்சிக்கு இணையாக மொழியைப் புறக்கணித்து ஆங்கில மொழிக்கு அடிமைப்பட்டுத் தாய்மொழியில் எழுதவும், பேசவும் தயங்கிய கற்றவர் கூட்டம் ஒன்றும் உருவாகி வந்தது.

7. இன உணர்ச்சி, நாட்டுணர்ச்சி இவற்றிற்கு அடிப் படையாவது மொழி உணர்ச்சியே என்ற அடிப்படை உணர் வினைப் பரவலாக இந்தியா முழுவதும் காணமுடிந்தது. ஆகையால்தான், ஏறக்குறைய சமகால எல்லைக்குள் இந்திய மொழிகள் பெரும்பாலானவற்றில் கவிதை, உரைநடை ஆகிய இருவகை இலக்கிய வகைகளும் புதுவது காணும் புத்திலக்கிய மறுமலர்ச்சிப் போக்குகளும் உருவாயின. திலகர், காந்தி, வ. உ. சி., நேரு, ராஜாஜி என்று வரிசைப்படுத்தும் அரசியல் தலைவர்கள் எல்லாரும் தாய்மொழி வல்லுநர்களாய் நூல்கள் எழுதியமை பத்திரிக்கைகள் நடத்தியமை கருதத்தக்கது. பாரதி, தாகூர், சரோஜினிதேவி என்று வரிசைப்படுத்தப் பெறும் கவிஞர்கள் எல்லோரும், மொழிவழிச் சுதந்திர தாகம் ஊட்டும் எழுச்சி மிகு கவிதைப் படைப்புகளை உருவாக்கினர். எனவே தாய்மொழிப்பற்று என்ற அடிப்படையில் நாட்டுப்பற்று வளர்ந்தது. "தன் மொழிப்பற்றும், தன் பண்பாட்டு ஊற்றமும் இல்லாதவர்கள் நாட்டுப்பற்று உடையவர்களாக இருக்க முடி யாது. எதையும் எதற்காகவும் அடகு வைக்கும் இயல்புடைய வர்களுக்கு மொழிப்பற்று இராது, பண்பாட்டு ஊற்றமும் இராது... அரசியல் தலைமை இரு வகையினரிடம் உள்ளது. ஒரு

வகையினர் நாட்டுப் பற்றுள்ளவர்கள்; இவர்களிடம் தாய்மொழிப் பற்றும், தாயகப் பண்பாட்டு ஊற்றமும் இருக்கும்'' என்பார் ம. ரா. போ. குருசாமி.8

ஆக வ. உ. சி. என்ற சுதந்திரப் போராட்ட வீரர், தமிழ் வளர்க்க அவர் காலச் சூழல் பெரிதும் துணை நின்றது என்பதை அறிகிறோம்.

## வ. உ. சி. வாழ்வுநிலை

இனி வ. உ. சி. வளர்க்கப்பட்ட அகச்சூழல் பற்றி அறிதல் நலம். வ. உ. சி. இளமையில் தமிழும் ஆங்கிலமும் கற்றுத் தேர்ந்த நிலை, தொழில் வாழ்வினின்றும் அரசியல் வாழ்விற்குப் புகுந்த காலைத் தமிழ்வழி தேசிய உணர்வினை எழுப்ப வேண்டிய தேவை, சிறைவாழ்வு அமைதியாக நூல்களைக் கற்க வழி வகுத்தமை, விடுதலைக்குப் பின் அரசியல் துறவு பூண்டமையால் முழுதும் தமிழ்பால் சிந்தனையைத் திருப்ப வாய்ப்புக் கிடைத்தமை, தமிழறிஞர்கள் நட்பு ஆகியவை சிதம்பரனாரின் தமிழ்த் தொண்டிற்காக காரணிகளாகிய பின்புலம் இங்கு விளக்கப் பெறுகிறது. தமிழும், சைவமும் வளர்க்கும் திருநெல்வேலிச் சைவ வேளாண் மரபில் தோன்றிய வ. உ. சி. க்கு மொழிப்புலமை இயல்பாக அமைந்திருந்தது. இவர் பாட்டனார் சிதம்பரக் கவிராயர் புலமை சான்றவர். மரபு வழியாகத் தமிழ்ப்புலமையும் இவருக்குக் கிடைத்த செல்வமாகும். சுயசரிதையில் தம் கல்வி வாழ்வு பற்றிக் குறிக்கையில்,

> 'செந்தமிழ் நூலெல்லாம் சிறக்கக் கற்றவை
> தந்தமிழ் தெனக்கொளச் சாற்றும் திறலோன்'

வீரப்பெருமாள் அண்ணாவி என்பார் ''அடியிணை சார்ந்து பன்னாட் கேட்கும் பாக்கியம்'' பெறாவிடினும் அறிவரிச்சுவடி, ஆத்திசூடி, உலகநீதி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை,

8. ம. ரா. போ. குருசாமி, 'ஒரு பழைய காலத்து மனிதர்,' வ. உ. சி. நூற்றாண்டு விழாச் சிறப்புமலர், கோவை, ப. 70.

நளவெண்பா, மூதுரை ஆகிய நூல்களைப் பொருளுடன் கற்கும் பேறு பெற்றதாகச் சொல்வார். தாலுகா ஆபீஸ் கிருஷ்ணய்யரிடம் ஆங்கிலம் படித்த வ. உ. சி. அம்மொழியில் மிகுபுலமை பெற அப்போது இயலாவிடினும், கேட்டதை மனத்தில் நிறுத்தி ஒவ்வொரு நாளும் மறக்காமல் முயன்று படித்து வந்ததாகக் குறிப்பார். பின்னர் கிருஷ்ணய்யர் மாற்றலாகிப் போனபின் பிள்ளையின் கல்வி தடைபடா வண்ணம் அவர் தந்தை எட்டயபுரத்திலிருந்து ‘அறம் வளர்த்த நாதன் எனும் ஆன்றோரை வரவழைத்துப் பள்ளி ஒன்றைக் கட்டி முடித்துப் பிள்ளைகள் கற்க வழிவகை செய்தாராம். தமிழும் ஆங்கிலமும் வல்ல அறம் வளர்த்த நாதனிடம் பிள்ளையவர்கள் மேலும் தம் அறிவை வளர்த்தற்கான வாய்ப்பு அமைந்தது. ஒரே ஆண்டில் இரண்டு வகுப்புக் கடந்து மேலே படிக்கும் உயர் தேர்வுநிலை பெற்றாராம் வ. உ. சி. ஆடம்ஸன் என்ற ஆங்கிலப் பாதிரியாரைக் கொண்டு விவிலியம் தவிர மற்ற பாடங்களைக் கற்றுத் தர அப்பள்ளியில் ஏற்பாடு செய்யப்பட்டதாம். சுவாமிநாதன், சண்முகம் பிள்ளை என வரிசையிட்டுக் குறிப்பிடும் ஆசிரியப் பெருமக்களால் மிகுந்த நன்மை பெற்றதாகக் குறிப்பிடும் வ. உ. சி. 14-ஆம் ஆண்டு வரைத் தம் ஊரிலேயே கற்றவர். பின்னர் தூத்துக்குடி சென்று மத்திய பள்ளியில் மதுரநாயகம் என்ற ஆசிரியர் நன்கு கற்றுக் கொடுத்தும் தேர்வில் தோற்றதைக் தம் சுயசரிதையில் குறிப்பிடுவார். பின்னர் அண்ணாத்துரை, கஸ்தூரி, எனக் குறிப்பிடப்படும் சிறந்த ஆசிரியர்களிடம் ஆங்கிலமும், “நாட்டினில் என்றும் நலம் தருந் தமிழைத், தவறிலாதுணர்ந்து தக்கோனான சவரிராயச் சான்றோனிடமும்” கற்றுத் தேர்ந்தாராம். குமாஸ்தா வேலையில் பணியினைத் தொடங்கிய பிள்ளை அவர்கள் பின்னர் சட்டம் படித்து வழக்கறிஞர் ஆன கதை அனைவரும் அறிவர்.

தமிழையும், ஆங்கிலத்தையும் முறையாகப் படித்து அம் மொழிகளில் ஆர்வம் மிகக் காட்டிய பிள்ளையவர்கள் இளம் வயதிலேயே துறவு மனப்பான்மை கொண்டவராயும் ஒட்டாத மனநிலை கொண்டும் இருந்தார். ஆனால் இவர் மேற் கொண்ட துறவு முயற்சி பாதியிலேயே தோல்வியடைந்தது, இங்குக் குறிக்கத்தக்க ஒன்று. வளமான சூழலில் வளர்க்கப்

பெற்ற பிள்ளையவர்கள் இருமொழிப் புலமை பெற்றார் என்பதுடன் அவர் மனத்தின் அடிதளத்தில் வாழ்வு பற்றிய தத்துவக் கண்ணோட்டமும் நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருந்தது என்ற உண்மை பின்னர் அவர் தம் படைப்பு களின் வழியாக வெளிப்படுவது இங்கு எண்ணத்தக்கது.

வழக்கறிஞராய் வாழ்வினைத் தொடங்கிய பிள்ளையவர் களுக்கு ஆங்கிலம் தொழில்மொழியாக அமைந்தது. அரசியல் வாழ்வில் தமிழ் அவரை வளர்த்தது. தமிழை அவர் வளர்த் தார். மக்களிடம் சுதந்திர வேட்கை ஊட்ட அவர்தம் தாய் மொழியில் சொற்பொழிவாற்றும் கட்டாயம் ஏற்பட்டது. தமிழ் நாட்டு அரசியல் தலைவர்கள் பலரும் அந்நிய ஆட்சியினை வெறுத்தாலும், அவர் மொழிக்கு அடிமைப்பட்டு எண்ணுறும் பொழுதும், எழுத்துறும்காலையும் பன்னிப் பேசிப் பழகும் இடத்தும் ஆங்கிலத்தைப் பெரிதும் மதித்தனர். அத்துடன் அம்மொழிப் புலமை காரணமாகத் தங்களைப் பிறரிடம் இருந்து பிரித்து உயர்த்திக் காட்டித் தருக்கியும் திரிந்தனர். இத்தகைய இரண்டாட்ட நிலையில்தான் பாரதி, வ. உ. சி., சிவா, அரவிந்தர், திலகர், காந்தி போன்ற இனஉணர்வும், நாட்டுணர்வும், மொழிஉணர்வும், கொண்ட தலைவர்கள் தங்கள் தாய்மொழி வழியாக நூல்களைப் படைத்தமையை இங்குக் கருதுதல் தகும். சுதந்திரப் போராட்டம் அவர்கள் நடத்திய புனிதவேள்வி. சுதந்திரம் என்பதே அதன்விளைவு. அன்னைபூமியே அவர் களின் தெய்வம். சுதந்திரப்போராட்டம், அரசியல் இயக்கமன்று. தேசியம் என்பதும் அரசியல் அன்று - அது ஒரு சமயம்; ஒரு கோட்பாடு; ஒரு நம்பிக்கை. தேசியப்பற்று என்பது சமயக் கோட்பாடே. இறைவனிடம் இருந்து வந்தது. அரவிந்தர், அரசியல் விடுதலை என்பது ஆன்ம விடுதலைக்கான வழி என்றும், சுயராஜ்யம் என்பது 'மோட்ச ராஜ்யத்திற்கான' வழி என்றும் வற்புறுத்தியதையும் இங்கு நினைவு கூரல் தகும். தேசிய உணர்வு எனும் சமயக் கோட்பாட்டினை வலியுறுத்தவும், பரப்பவும் மக்களை அதன்வழி மாற்றவும், அரசியல் தலை வர்கள் தாய்மொழிவழிக்கருத்துக்களைக் கூறவேண்டிய தேவையை உணர்ந்தனர். அந்நியமொழி பயிற்று மொழியாய், ஆட்சி மொழியாய், மேலாண்மை செலுத்திய நாளில், இந்தியர்கள் அரசியல், பொருளாதார நிலைகளில் மட்டுமின்றிப் பண்பாட்டு நிலையிலும் அந்நியநாட்டிற்கு அடிமைப்பட்டும்

ஆட்பட்டும், கிடந்ததையே பெருமையாகக் கொண்டாடிய போலி மயக்க வாழ்வில், தாய்மொழி உணர்வு ஊட்டல் என்பது சுதந்திர உணர்வு ஊட்டப் பணியாற்றிய பெருந்தலைவர்களின் அடிப்படைப் பணியாயிற்று. இதனால் ஒருவகையில் அந்தந்த மாநில மொழிகளும் வளரத்தொடங்கின என்பதை முன்னரும் கண்டோம். எனவே இத்தகு புறச்சூழல், வ. உ. சி. வளர்க்கப்பட்ட தமிழ்ப் பண்பாட்டுச் சூழலுடன் இணைந்து அவரைத் தன்னிகரில்லா நாட்டுத் தலைவராக உருவாக்கியதுடன், தமிழ்நாட்டில் அடிமை மண்ணில் மொழி வளர்த்த சான்றோர்கள் வரிசையில் குறிக்கத்தக்க அறிவாளராயும் எண்ண வைத்தது.

பிள்ளையவர்கள் மொழிப் புலமையின் பின்புலத்திற்கு ஆக்கம் தரும் கூறுகளில் இன்னொன்றும் சிறப்பாகச் சுட்டத் தக்கது. விடுதலை உணர்வால் கவரப்பட்ட நிலையில் ஒருங்கிணைந்த பாரதிக்கவிஞரின் நட்பு பிள்ளையவர்களின் அடங்கிக் கிடந்த கவித்துவ ஆற்றலுக்குத் தூண்டுகோலாய் விளங்கியது. சிவாவின் கேண்மை, மேடைத் தமிழ்ப்புலமைக்கு உரம் ஊட்டியது. சிறை வாழ்விற்குப் பின் பிள்ளையவர்கள் அரசியல் துறவு பூண்டு பொருள் வாழ்வில் போராடிய நாட்களில் சென்னையில் உள்ளத்திற்கு அமைதியும், புலமைக்கு விருந்தும் தரும் வகையில் திருமணம் செல்வக் கேசவராய முதலியார், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை போன்ற தமிழ்ச்சான்றோர்களின் உறவு அமைந்தது. மதுரைத் தமிழ்ச்சங்கம் இவரை உறுப்பினராய் ஏற்றுப் பெருமை கொண்டது.

12—5—1905 என நாளிட்ட கடிதத்தில் நான்காம் சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்த பாண்டித்துரைத் தேவரவர்கள்,

"தாங்கள் இச்சங்கத்தில் கல்வியங்கத்தினருள் ஒருவராயமர்ந்து செந்தமிழ் பாஷாபிவிர்த்திக்கு வேண்டுவனவற்றைப் புரிதற்கு மனமுவந்து வரவிடுத்த சம்மதப் பத்திரிக்கையைக் கண்ணுற்றுப் பெருமகிழ்வெய்தினேன். இவ்வாறு அன்புகூர்ந்து முன்வந்து வாக்குதவிய தங்கட்கு அநேக வந்தனம் அளிக்கின்றோம்" என்று பிள்ளையவர்களுக்கு எழுதிப் பாராட்டுகின்றார். வ. உ. சி. யின் அரசியல் வாழ்வின் உச்சகட்ட

காலத் தொடக்கமாகிய 1905 ஆம் ஆண்டிலேயே (1906 இல் வ. உ. சி. தூத்துக்குடி 'சுதேசிக் கப்பல் கப்பெனி' பதிவு செய்கிறார்) மதுரைத் தமிழ்ச்சங்கத் தொடர்பு அமைகிறது எனில் அவர்கள் அரசியல் வாழ்க்கையின் தொடக்க காலத்திலேயே தமிழுடன் உறவு கொண்டு அதன் வளர்ச்சியில் நாட்டம் கொண்டிருந்தார் என்பது உறுதியாகிறது.

1905 இல் வ. உ. சி. தூத்துக்குடியில் இருந்து மக்களுக்குத் தேச உணர்வு ஏற்பட 'விவேகபானு' என்ற பத்திரிக்கை நடத்தியதாகக் குறிப்பு உள்ளது.

'விவேகபானு விளங்குகிற எங்கும்
விவேகபானுவை வெளிவரச் செய்தேன்'

என்று சுயசரிதையில் குறிக்கின்றார். ஆனால் அதுபற்றி ஆழமான செய்திகள் கிடைக்கவில்லை. ஆயின், மதுரையிலிருந்து வெளிவந்த 'விவேகபானு' இதழ்களில் வ. உ. சி. யின் கவிதைகள் வெளிவந்துள்ளன. 'சுதேசமித்திரன்'. சுப்பிரமணிய சிவாவின் 'ஞானபானு' இதழ்களில் வ. உ. சி. யின் இலக்கியக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இவைபற்றிய விரிவு பின்னர் காணலாம் இங்கு மனங்கொள்ளத்தக்கது பிள்ளையவர்கள் தொழில்வாழ்வு, அரசியல் வாழ்வாக மலர்ந்த நிலையிலும், சிறை வாழ்விற்குப் பின் அரசியல் துறவு மேற்கொண்ட நிலையிலும் தொடர்ந்து அவர் தமிழ்த்தொண்டு ஆற்றிவந்துள்ளார். குறிப்பாகச் சிறைக் காலத்திலும், அரசியலிலிருந்து விடுபட்டு வாழ்ந்த காலங்களிலும், இறுதி மூச்சு உள்ள வரையிலும், பிள்ளையவர்கள் பணி தமிழ்ப்பணியே ஆயிற்று.

1933 ஆம் ஆண்டு தொடங்கிய தூத்துக்குடி கம்பன் கழகத்தின் மூல ஸ்தாபகர்களில் ஒருவர் வ. உ. சி. என்றும் கம்பன் பற்றிய ஆராய்ச்சிகள் நிகழ்ந்த ஏறக்குறைய 150 கூட்டங்களுக்கும் வ. உ. சி. வந்து கலந்து கொண்டார் என்றும் தமிழறிஞர் ஏ. சி. பால் நாடார் குறிப்பிடுகின்றார்[9]. "வள்ளுவரையும் கம்பனையும் தமிழர் அனைவரும் கற்க

---

9. ஏ. சி. பால் நாடார்., தென்னாட்டுத் திலகர், வ. உ. சி. மலர், பம்பாய்த் தமிழ்ச் சங்கம். ப. 60.

வேண்டுமென்று இவர் அந்த நாளில் அடிக்கடி நண்பர்களிடம் கூறுவதுண்டு. "அது தர்ம சாஸ்திரம் இது சகோதர தர்ம சாஸ்திரம். அதன் விளக்கம் இது என்று கூறுவார்" என பி. ஸ்ரீ. வ. உ. சி. யின் இருபெரும் இலக்கிய ஈடுபாட்டினைச் சுட்டிக் காட்டுகின்றார்[10].

தமிழ் இலக்கிய இலக்கணங்களின் சிறப்பியல்புகளை 1918-ஆம் ஆண்டில் சுதேசமித்திரன் அநுபந்தமாக வ. உ. சி. எழுதி வெளியிட்டிருக்கின்ற கட்டுரை அவர்தம் தமிழ்ப் புலமைக்குத் தகுந்த சான்றாகின்றது. பின்னர் வரும் படைப்புத்திறன் என்ற பகுதியில் அது பற்றி விளக்கம் இடம் பெறும்.

"வ. உ. சி. பன்மொழிப் புலவர். ஆங்கிலத்திலும் வட மொழியிலும் வல்லவர். மலையாள மொழியில் ஆங்கில நூல் ஒன்றை மொழிபெயர்த்திருக்கிறார். அவருக்குத் தெலுங்கும் தெரியும். தமிழ்ச்சங்கப் புலமையும் தேசியத் தலைமையும் ஒருங்கு திரண்டு விளங்கிய பெரியார் வ. உ. சி. ஒருவர் தானே"என்ற ப. ஜீவானந்தம்[11] கூற்று வழி பிள்ளையவர்களுக்குப் பன் மொழிப் புலமை இயல்பாகவே அமைந்திருந்தது என்பது தெளிவாகிறது.

பிள்ளையவர்களின் தமிழ்த் தொண்டு முனைப்புடன் செயற்படுத்தப் பட்ட காலம் அவர் சிறையில் இருந்த 1908இல் இருந்து 1912 வரையிலான முதற்கால கட்டம். விடுதலை பெற்றபின் அவர் அரசியல் வாழ்வு 1920இல் நடைபெற்ற கல்கத்தா காங்கிரஸிற்குப் பின் நிறைவு அடைகிறது. அவர் தமிழ் வாழ்வு முழு வீச்சுடன் தொடங்கி 1936 இல் அவர் மறையும் வரை தொடர் நிகழ்வாக அமைந்தது. இவ் இரண்டாவது காலகட்டம், வ. உ. சி. அவர்களின் தேசத் தொண்டு மொழித் தொண்டாகத் திசை திருப்பப் பெற்ற வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாகும். "தென்னாட்டுத் திலகர் என்று விடுதலைப் போர்க்காலத்திலேயே பாராட்டப் பெற்றவர். நம் நாட்டை ஆளும் மாற்றாரின் இன, நிற

---

10. மேற்படி ப. 60

11. ப. ஜீவானந்தம், கலையும் இலக்கியமும்.

வெறித்தனங்கள் நம்மவரால் எத்துணை நாள்கள் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்'' என்று முழங்கித் தேசிய உணர்வினைப் பரப்பிய வீரர்.

''தேச ஆட்சியின் மீட்சிக்கான முதல் வழி, வியாபாரம் செய்ய வந்த வெள்ளையர்களை வெருட்டி அடிக்க வேண்டும் என்பதுதான். வெள்ளையர்களை விரட்டுவதென்றால் நம்மவர்க்குக் கடல் ஆதிக்கம் வேண்டும்......... ஆங்கிலேயர் நம் அரசைப் பறித்தது பொருள் பறிக்கவேயாம். ஆகவே, பொருள் பறிக்கும் வாணிபக் கப்பலுக்கு வேட்டு வைத்தால் ஒழிய அவ் வாங்கிலேயர் இந்தியாவை விட்டு வெளியேறார்'' என்று 1906-இல் கப்பல் கம்பெனி தொடங்குவதற்கான காரணத்தைத் தெளிவுபடுத்தி உடைமைகளை எல்லாம் விற்றுக் கப்பல் ஓட்டிப் பொருள் இழக்கினும் மனம் தளராது போராடியவர் வ. உ. சி. 1907-இல் நடந்த சூரத் காங்கிரஸில் மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் நடந்த போராட்டத்திற்கு வ. உ. சி. யே மூலகாரணம் என்பதைக் காங்கிரஸ் வரலாறு எடுத்துக்காட்டும்.

''1907 ஆம் ஆண்டு சூரத் நகரில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் ஏற்பட்ட அமளிக்கும் பிளவுக்கும் செக்கிழுத்த செம்மலின் பங்கு கொஞ்ச நஞ்சமல்ல. ஏனோ அவரது பங்கைப் பத்திரிகையாளர்களும் வரலாற்று அறிஞர்களும் இருட்டடிப்புச் செய்துவிட்டனர். உண்மையாக - அவரது பங்கை ஆராய்ச்சி செய்து பார்த்தால் - தீவிரவாதிகளின் தீவிரச் செயலுக்கு வித்திட்டவரும் அவரே என்பது நன்கு புலப்படும். முதன் முதலாகக் காங்கிரஸ் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தி அதிலிருந்து ஒரு புதிய கட்சியையே தோற்றுவித்த பெருமை சிதம்பரனாரையே சேரும். சிதம்பரனார் தீவிரவாதியே தவிர பயங்கரவாதியல்லர்''[12] என்பார் டாக்டர் சி. அ. பெருமாள்.

---

12. டாக்டர் சி. அ. பெருமாள், சமூகச் சீர்திருத்தப் பணிகட்கு வ. உ. சி. யின் தொண்டு, தமிழாய்வு. ப. 160.

தூத்துக்குடி கோரல் மில் தொழிலாளர் வேலை நிறுத்தம் 1908இல் நடந்தது. இந்தியாவிலேயே முதன் முதலாக நடந்த அரசியல் சார்புடைய வேலை நிறுத்தம் இதுவாகும். நடத்தியவர் வ. உ. சி. பிபின் சந்திரபாலர் விடுதலை விழாவைத் தடையை மீறி நடத்தி 1908 ஆம் ஆண்டு சிதம்பரனாரும் சிவாவும் கைது செய்யப்பட்டதும் வ. உ. சி. அவர்கள் 40 ஆண்டு தண்டனை ஒரே சமயத்தில் அனுபவிக்கத் தீர்ப்பானதும் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் நினைக்கத் தக்க நிகழ்ச்சி.

'தேசாபிமானிகள் சங்கம் என்ற அமைப்பினை 1908 இல் நெல்லையில் ஏற்படுத்திச் சுதந்திரக் கனலைப் பற்ற வைத்தவர் பிள்ளையவர்கள். துணை நின்றவர் சுப்பிரமணிய சிவா. இருவரும் இணைபிரியாத் தோழராய்த் தொண்டாற்றியவர்கள்.

"ஒரே மேடையில் இருவரின் உரிமைக் குரல்களும் முழங்கின. சிவாவின் பேச்சில் நெருப்புப் பொறி பறக்கும்; சிதம்பரனார் பேச்சு சூறைக் காற்றுப்போல் சுழற்றியடிக்கும். ஏற்கனவே எரிந்து கொண்டிருக்கும் தீயுடன் காற்றும் சேர்ந்தால் கேட்க வேண்டுமா? ......... விடுதலை வெறி மக்களிடையே முறுகி எழுதற்கு இன்னாரின் வீரக்கனல் செறிந்த வாசகங்கள் தூண்டுகோலாயின. மக்கள் மனத்தில் நாட்டுப்பற்று கொழுந்து விட்டு எரியலாயிற்று" எனப் பிள்ளையவர்களின் விடுதலைப் போர் முழக்கத்தினைப் பாராட்டுவார் சி. ஈ. இராமச்சந்திரன்.[13]

விடுதலைப் போரில் சிறைப்பட்ட சிதம்பரனாரின் சிறை வாழ்வு வரலாற்றுச் சிறப்புடையது.

> 'மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
> நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ'

என்று பாரதி புலம்பிய வண்ணம் "நூலறி புலமை வாய்ந்த பிள்ளையவர்கள் செக்கிழுத்துத் துன்புற்ற கதை தமிழகம்

---

13. முன் தொகுதி, சி. ஈ. இராமச்சந்திரன், 'இந்திய விடுதலை இயக்கத்தில் வ. உ. சி. பங்கு', ப. 10.

அறிந்த ஒன்று. செக்கிழுத்த காலத்தில்தான் சிதம்பரனாரைச் செந்தமிழ் ஆட்கொண்டது. கோவை கண்ணனூர்ச் சிறையில் தம் தண்டனைக் காலத்தை அனுபவித்த பிள்ளையவர்கள் நாட்டு விடுதலைக்காக உடலை வருத்திக் கொடுமைகளை எதிர்கொண்டார். ஆன்ம உயர்விற்காய் அருந்தமிழ் நூல்களைக் கற்றுப் பரிபக்குவம் அடைந்தார். 1912 இல் சிறையிலிருந்து விடுதலைப் பெற்ற சிதம்பரனார் மாறிவரும் அரசியல் போக்கின் நுட்பத்தைத் தெரிந்தார். மக்களின் மனப் போக்கின் மாற்றங் கண்டு வியந்தார். ஐந்து ஆண்டுகள் நரகத்தில் உழன்றபின் அவர் வெளிவந்தபோது அவரை வரவேற்க யாருமில்லை. தோளோடு தோள் நின்று உழைத்த எவரையுங் காணோம். நாட்டிலே மயான அமைதி குடி கொண்டது.

1910 ஆம் ஆண்டு சிறைவீடு பெற்ற ஸ்ரீ அரவிந்தர் வங்கத்தில் கண்ட இருண்ட நிலையோடு தமிழ்நாட்டு நிலையையும் ஒப்பிட்டுக் காணலாம்.

"என்னைச் சுற்றிப் பார்த்தேன்; தேடினேன். ஆனால் அறிவுரை கூறவோ; உள்ளத்திற்கு உயிரூட்டவோ எனக்கு இருந்த பழைய நண்பர்கள் ஒருவரையும் காணவில்லை. இது மட்டுமா? நான் சிறைக்குப் போனபோது நாடு முழுவதிலும் 'வந்தே மாதரம்' என்ற மந்திரத்தின் உயிர்த்துடிப்பு துள்ளியது. அடிமையென்ற துச்ச நிலையிலிருந்து தலைதூக்கிய கோடிக் கணக்கான மக்களுடைய தீரத்தின் சங்கநாதம் எங்கும் விம்மியது. சிறையிலிருந்து வெளி வந்ததும் அந்தக் குரலைச் செவிமடுக்க ஆசையோடு திரும்பினேன். ஆனால் மோனமே என்னை எதிர் கொண்டது".[14] மீண்டும் போர்முரசு கேட்கும் என்ற நம்பிக்கையில் பிள்ளையவர்கள் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டு வாழத் தொடங்கிய போதுதான் காந்திஜி போர்க்களத்தில் சத்தியம், அஹிம்சை, ஒத்துழையாமை என்ற போர்க்கருவிகளுடன் இறங்கினார்.

அரவிந்தர், திலகர், இவர்களோடு புரட்சி, தேவையானால் வன்முறைப் புரட்சி என்ற தீவிர நெறிகளில் செயற்பட்ட வ. உ. சி. காந்திஜி கொள்கையுடன் பெரிதும் மாறுபட்டார்.

14. அ. சீ. ரா. தியாகச்சுடர்.

1920 ஆம் ஆண்டு கல்கத்தா காங்கிரஸிலும் தம் கொள்கைக்காகப் போராடித் தோற்றார். 1927 ஆம் ஆண்டு சேலம் மாநாட்டிலும் தம் கவலையை வெளியிட்டார். ஆயின் காந்திஜியின் செல்வாக்குக் கண்டு ஒரு முடிவுக்கு வந்தார். தம் செல்வாக்கு தனித்தலைமை, தியாகம் இவற்றை முதலீடாகக் கொண்டு புதுக்கட்சி தொடங்கி, உட்பூசல்களை வளர்க்க விரும்பவில்லை. விடுதலை என்ற முடிவு நோக்கிய பயணத்தில் பாதைகள் மாறினாலும் பயன் ஒன்றே எனக் கருதி குருட்டுச் செருக்கு' தற்பெருமை, தன்னலம் இவற்றிற்கு இடம் தராமல், புதிய சக்திக்குத் தலை வணங்கினார். தனி மனிதனைவிட நாடே பெரிது, என்ற உண்மை உணர்ந்த அறிஞர் வ. உ. சி. ஆவார்.

"மகாபாரதத்தின் முடிவில், காண்டீவத்தைத் துறந்து இமயத்தை நோக்கி நடந்த அருச்சுனனைப் போல தமது வீரம் பெரும் அரசியல் தலைமையைத் தாமே துறந்து மொழிப் பணியிலும், சமய வாழ்விலும் ஆழ்ந்தார். இதுவே அவருடைய தியாகத்திற்கெல்லாம் மணிமுடியாக அமைந்தது"[15] என்று வியந்து போற்றுவார் அ. சீனிவாசராகவன்.

பிள்ளையவர்கள் அரசியல் துறவு, தமிழுக்கு வரவாயிற்று. முன் குறிப்பிட்டது போல, சிதம்பரனார் சிறைவாழ்வினைப் பயனுடைய தமிழ் கற்கும் பொருண்மை உடையதாக்கினார். ஏ. சி. பால்நாடார் இது பற்றிக் குறிப்பிடுகையில் வ. உ. சி. சிறையில் இருந்தபோது தொல்காப்பியம் படிக்கத் தொடங்கினார் என்கிறார். இன்னும், "திருக்குறள் படிக்காத தமிழன் தமிழனல்லன் என்பது சிதம்பரம் பிள்ளையின் ஆன்ற மொழி. ஆயுட்காலம் வரையில் திருக்குறள் ஆராய்ச்சி அவர் மனதைக் கவர்ந்து கொண்டேயிருந்தது" என்கிறார்.[16] தொல்காப்பியம், திருக்குறள், சிவஞானபோதம் என்ற இலக்கண இலக்கிய தத்துவ சாத்திர நூல்களில் மிகுதியும் ஈடுபாடு பிள்ளை யவர்களுக்கு இருந்தது என்பது பின்னர் அவர் நிகழ்த்திய ஆய்வுகள் வழி நன்கு அறிய முடிகிறது.

---

15. மேற்படி, ப. 6.

16. ஏ. சி பால் நாடார், தென்னாட்டுத் திலகர்' ப. 77

வழக்கறிஞராக வாழ்வினைத் தொடங்கிச் செல்வச் செழுமையில் தன்னிகரற்றுப் பொருள் வாழ்வில் உயர்ந்திருக்கலாம். ஆயின் சுதந்திர வேட்கை மிகுந்த செயலாற்றலில் நம்பிக்கை கொண்டவராய்த் தீவிரவாதியாய்த் திகழ்ந்த வ. உ. சி. யின் வாழ்க்கையில் சிறைவாசம் ஒரு திருப்புமுனையாய் அமைந்தது. வளமான வாழ்வுச் சுகங்களை விட்டுத் தாங்கொணாக் கொடுமைகளை அனுபவித்த வ. உ. சி. யின் சிறைவாழ்வு ஒரு பெரும் மாற்றத்தை அவர் உள்ளத்தில் உண்டு பண்ணியது. தனிமை, சிறைக்கொடுமை இவற்றினின்றும் விடுபடத் தமிழ் கை கொடுத்தது. விடுதலை பெற்ற பின் தமிழே வாழ்வாயிற்று. இத் திருப்புமுனை பற்றி அறிஞர்கள் பலரும் பலவேறு விளக்கங்களைத் தருவர்.

''திரு. சிதம்பரம் பிள்ளையின் தமிழ்க்காதலையும் ஆராய்ச்சித் திறனையும் கூட லேசாக மதிப்பிடுவது சரியன்று. சிறையிலிருந்து விடுதலை பெற்றபின் இவர் வறுமைக்கு உட்பட்டிருந்தார். தமிழ்நாடு இவரது முயற்சிக்கும் ஆதரவு தரவில்லை. அப்படியிருந்தும் தமிழ்க்காதலிலே, தமிழ் ஆராய்ச்சியிலே தமது துயர்களை மறக்க முயன்றார்''[17] என்று பி. ஸ்ரீ நினைவுகூர்கின்றார். இதிலிருந்து அரசியல் மாற்றங்களும், வறுமைப்பட்ட வாழ்வும், ஒருவகையில் வ. உ.சி. அவர்களின் மனத்தைப் பெரிதும் தளரச் செய்தபோது, இலக்கிய ஈடுபாட்டில் தம்மை மறக்க முயன்றார் என்பது ஒரு குறிப்பாகக் கொள்ளத்தக்கது.

''நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் நெருங்கிய சம்பந்தமுடையன. மொழிப்பற்றிலே தொடங்கி அதிலேயே நான் வாழ்ந்து வருகிறேன். தேசப்பற்று மொழிப்பற்றின் அடுத்தபடியாகத்தான் என் உள்ளத்தில் நிலவுகிறது. நாட்டுப்பற்றில் வ. உ. சி. அவர்கள் முனைந்து நின்று, பிற்காலத்தில் மொழிப்பற்றில் அமைந்துவிட்டார்கள்''[18] என்று எஸ். வையாபுரிப்பிள்ளை

---

17. பி. ஸ்ரீ 'வ. உ. சி. சில நினைவுகள்', சுடர் வ. உ. சி. மலர். ப. 60.

18. எஸ். வையாபுரிப்பிள்ளை; சிறை வாழ்க்கைக்குப் பின் வ. உ. சி.

அவர்கள் கூற்றினின்றும் பிள்ளையவர்கள் நாட்டுப்பற்று, மொழிப் பற்று என்ற இரண்டன் நெருங்கிய உறவு காரணமாக இயல்பாக மொழித் தொண்டில் ஈடுபட்டார் என்பது பெறப்படும்.

''பொருளாதாரச் சுரண்டலால் மக்களை அடிமையாக்குவது கண்ணுக்குத் தெரிந்த செயல். ஆனால் அந்நிய மொழியின் வாயிலாக மக்களின் அறிவை அடிமையாக்குவது கண்ணுக்குத் தெரியாதது. அதையும் தடுக்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர் வ. உ. சி. தேசபக்தர்கள் ஆங்கிலத்திலேயே சொல் மாரி பொழிந்து மக்களோடு தொடர்பு இல்லாமல், தாய்மொழி யைப்பற்றி ஒன்றும் தெரியாமல் வாழ்ந்தகாலம் அது. அக்காலத்து இருளில் ஒரு மணிவிளக்காக இருந்து ஒளிவீசினார்.........புலவர் களே செய்யக்கூடிய தமிழ்த்தொண்டை ஒரு தேசபக்தர் செய்து முடித்தது வரலாற்றில் போற்றத்தக்க புதுமையாகும்'' என்பார் மு. வ. [19]

''வ. உ. சி. யின் இலக்கணப் பதிப்புப் பணி'' பற்றி மதிப்பீடு செய்யும் அறிஞர் க. ப. அறவாணன் வ. உ. சி. யின் தமிழ்த் தொண்டிற்கான காரணங்களாகக் கீழ்வருவனவற்றை முறைப் படுத்துவார்.

1. அரசியலிலும், பொதுப்பணியிலும் தமிழிரிடம் இருந்த செய்ந்நன்றி கொல்லும் செயற்பாட்டுத் துயரினின்றும் விலகி இருக்க விழைந்தவர், அவ் வருத்தத்தைப் போக்கி ஆற்றிக் கொள் ளும் துறையாக இலக்கியத் துறையைப் போற்றினார்.

2. ஆங்கிலேயருக்கு இணையாக இலக்கியத்துறையிலும் இந்தியர்கள் - தமிழர்கள், சிறப்புக் கொண்டவர்கள் என நிலை நாட்ட விரும்பினார்.

3. தமிழின் இலக்கியப் பழமையையும், வளமையையும், பதிப் புத் துறையின் மூலம் எடுத்துக்காட்டி, ஆங்கிலேயரினும் தமிழர் மேம்பட்டவர் என்ற உணர்வைத் தமிழருக்கு ஊட்டவேண்டும் என்று வ. உ. சி. எண்ணி இருத்தல் கூடும்.

---

19. டாக்டர். மு. வரதராசன்; செயற்கரிய செய்த பெரியார்; வ. உ. சிதம்பரம் பிள்ளை மலர். ப. 22.

இக்காரணங்கள், வ. உ. சி. காலச் சமுதாய, அரசியல் சூழல் அமைவுகளை ஆராயும்பொழுது பெரிதும் பொருந்துவனவாகவே அமைகின்றன.

சிதம்பரனாருடன் பழகியவர்களும், அவர்தம் தொண்டைப் போற்றிய அறிஞர்கள் பலரும் எடுத்துரைத்த குறிப்புகள் எல்லாம் மையமிட்டுக் காட்டும் கருத்து ஒன்றேயாகும். இயல்பாக நாட்டுப் பற்றுடையார், மொழியுணர்வுடையராய்த் திகழ்தல் ஒருதலை. வ. உ. சி. யைப் பொறுத்தவரை தமிழ் உணர்வு, தேசிய உணர்வுடன் நெடுகிலும் இரண்டறக் கலந்தே உறவாடி வந்துள்ளது. அரசியல் தொண்டு வழி, பேச்சுத் தமிழை வளர்த்தார்; அரசியல் துறவு வழி, இலக்கியத் தமிழை வளர்த்தார். தமிழறிவும், தத்துவ ஞானமும், சமய ஊற்றமும் ஒருங்கு கொண்ட வ. உ. சி. யின் அரசியல் நுழைவு, சுழன்றடித்த சூறாவளியாய் வீசி அடித்துச் சிறையில் அடங்கி ஓய்ந்தபோது, அடங்கி கிடந்த மொழி உணர்வு, ஞான உணர்வு இரண்டும் கிளர்ந் தெழுந்து, அவர்தம் செம்மைநலம் வாய்ந்த அறிவுப்புலமை வாழ் விற்கு வழி வகுத்தன. நிலையில்லா அரசியல் வாழ்வின் செயற்பாடுகளைக் காட்டிலும், நிலைத்த மொழித்தொண்டு, சமு தாய மனநல உயர்விற்கு வழி வகுக்கும் என்பதை வ. உ. சி. யின் ஆன்றவிந்தடங்கிய தூய தமிழ் உள்ளம் உணர்ந்தது எனலாம். அன்றியும், தமிழ்ச்சமுதாயம் அரசியல் பூசல்களில் நிலைதடுமாறிக் கிடந்தது. நல்லவர்களைப் போற்றும் நலம் இழந்து கிடந்தது. தமிழர்கள் மனநலம் வாய்க்கப் பெற்றவராய் இருப்பின், எதிர் காலத் தமிழகம் உயர்வாழ்வு பெற வழி ஏற்படும் என உணர்ந்த நிலையில் குறை களையும் அருள் தொண்டிற்கு, ஆன்ற தமிழ் நூல்கள் நெறி காட்டுவன என்பதை வ. உ. சி. உணர்ந்திருப்பார். எனவே அறவழி நாட்டம் கொண்ட பிள்ளையவர்கள் தமிழின் பழமை, மரபு நலங்கள், தமிழ்த் தத்துவ மேன்மைகள், உயர் செம்மொழியின் இலக்கணவளமைகள், அற இலக்கிய மேன்மை கள், ஆகியவற்றை மீட்டும் மக்கட்கு உணர்த்தி, எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும் தமிழ்ச்சமுதாயம் மறுமலர்ச்சி அடை தல் வேண்டும் என்ற உயர் நோக்கங்களைச் செயற்படுத்தத் தொடங்கினார். எனவே அவர்தம் தமிழ்த்தொண்டு, படைப்பிலக் கியப் பதிப்புப் பணி, உரைவிளக்கப் பணி, மொழிபெயர்ப்புப் பணி எனப் பல்துறை விரிவாக்கப் பணிகளாகப் பரிணமித்தன.

இங்கு வ. உ. சி. அவர்களின் பதிப்பு, உரை, மொழிபெயர்ப்பு ஆகிய முத்துறைப் பணிகளே ஆராயப்படுகின்றன. சிதம்பரனாரைக் கவிஞர் என்று கண்டு மகிழ்வதிலும், உரைநடைப் படைப்பாளர், திறனாய்வாளர் என மதிப்பீடு செய்வதே அவர்தம் தொண்டின் சிறப்பினை முழுமையாகப் புரிந்து கொள்ள வழி வகுப்பதாகும்.

சுயசரிதை, மெய்யறிவு, எனது பாடல் திரட்டு ஆகிய கவிதை நூல்கள் வ. உ. சி. யின் செய்யுள் படைப்பாகத் திறன் விளக்குபவை. எனினும் அவர் தமிழ் வாழ்வு பெரிதும் நூல்களைப் பதிப்பதிலும், உரைநலம் காண்பதிலும், பிறநாட்டு நல்லறிஞர் தத்துவங்களைத் தமிழுக்குப் பெயர்த்துத் தருவதிலுமே பெரிதும் ஈடுபட்டது. எனவே வ. உ. சி. என்ற தமிழறிஞர், தமிழ் உரைநடை இலக்கியத் துறைக்கு வளம் சேர்க்க வகை செய்த உரைத் திறப் பணிகளையே இவ்வாய்வு மையப்படுத்துகின்றது.

★★

# 2. படைப்புகள்

"வ. உ. சி. யின் அரசியல் தொண்டுகள் நாட்டு மக்களால் நினைவு கூறப்படுகின்ற அளவிற்கு அவர்தம் செந்தமிழ்ப் பணிகள் மக்களால் அறியப்பட முடியாமல் உள்ளது. காரணம் அவர்தம் செந்தமிழ்ப் பணியினையும் மீறி அவர்தம் நாட்டுப்பணி ஒளி மிகுந்த தாய் உளது எனலாம்" என்று சி.பாலசுப்பிரமணியம் வ.உ.சி.யின் செந்தமிழ்ப் பணியினைச் சிறக்க வெளிக் கொணர வேண்டும் என்ற தேவையைக் குறிப்பாகச் சுட்டுவார்.[1] தமிழ் ஆராய்ச்சி விரிவும், ஆழமும் அகலமும் கொண்டு வளர்ந்து வரும் இந்நாளில் தமிழுக்குத் தொண்டாற்றிய சான்றோர்கள் தம் புலமைத் திறனையும், பணி மேம்பாடுகளையும் விரித்துரைக்க வேண்டிய தேவை மிகுந்துள்ளது. டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், டாக்டர் எழில் முதல்வன், டாக்டர் க. ப. அறவாணன் ஆகிய தமிழறிஞர்கள் 'சிதம்பரனாரின் இலக்கியப் பணிகளையும், பதிப்புப் பணிகளையும் பற்றிக் கட்டுரைகள் வரைந்துள்ளனர். இங்கு அக்கட்டுரைகள் சுட்டும் மூலக்குறிப்புகளை மேலே விரிவுபடுத்திச்சான்றாதாரங்கள் காட்டி விளக்கியும், அவர்கள் குறிக்காது விட்ட பகுதிகளை எடுத்துரைத்தும், புதியனவாகக் கிடைத்த குறிப்புகளைக் தந்தும் மேல்நிலை ஆய்வுப் பார்வையில் வ. உ. சி. யின் தமிழ்ப் பணிகள் விரிவாக விளக்கம் பெறுகின்றன.

வ. உ. சி. யின் செந்தமிழ்ப் பணியினை இலக்கியப் பணி, இலக்கணப் பணி என இருபெரும் பிரிவுகளில் ஆராய்கையில், இலக்கணப்பணி, பெரிதும் பதிப்புப் பணியாய் அமைந்த திறம் வெளிப்படும். அடிமைப்பட்டுக் கிடந்த தமிழகத்தில், தாய் மொழிச் சிறப்புகளை எடுத்துரைக்க அதன் பழம்பெரும் இலக்கியக் கருவூலங்களை மக்கள் முன்றில் அறிமுகப்

---

1. டாக்டர் சி. பாலசுப்பிரமணியம்; தமிழ் இலக்கிய இலக்கணத் துறைகளுக்கு வ. உ. சி. யின் தொண்டு; ப. 42.

படுத்த வேண்டிய அடிப்படைத் தொண்டினை ஆற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. சுவடிகளில் பொதிந்து கிடந்த தமிழ்ச் செல்வங்களை, பெருமை அறியாப் பொது மக்களிடமிருந்தும், செல்லுக்கும், அந்துக்கும் இரையாகியும் ஆடிப்பெருக்கில் இரையாகியும், அழிந்த அவலக் கொடுமைகளிலிருந்தும் காத்து அச்சேற்றும் பதிப்புப் பணி, தமிழ் வளர்ச்சிக்கான ஆதாரப் பணியாக அமைந்தது. இத்துறையில் சி. வை. தாமோதரம் பிள்ளை, டாக்டர் உ. வே. சாமிநாதையர் என்ற பதிப்பாளர் வரிசையில் சிதம்பரனாரையும் இணைத்து வைத்துப் போற்றும் கடப்பாடு நமக்குண்டு.

## திருக்குறள் மணக்குடவர் உரை

"இளமையிலும் சிறைவாசத்தின்போதும் அவர் கற்ற நூல்கள் இப்போது அவரது "கவனத்தை ஈர்த்தன. தம்மை வளர்த்து இலட்சிய நெறிக்கு உயர்த்திய அந்த நூல்கள் காலத்துருவேறி உருமாறிக் கிடப்பதைக் கண்டு அவர் நெஞ்சம் பதைத்தது. அவைகளில் படிந்த அழுக்குகளை அகற்ற வேண்டுமென்று முடிவு செய்தார். ...தொல்காப்பியம், திருக்குறள் முதலிய தமிழரின் பெட்டகங்களைத் துலக்கிக் கொடுக்க வேண்டியதே அக்காலத்து வேண்டிய பணி என்று அவர் நெஞ்சம் கருதிற்று" [2] எனச் சாலை இளந்திரையன், வ. உ. சி. யின் பதிப்புப் பணிக்கான பின்புலத்தைச் சுட்டிக் காட்டுவார். மொழிப்பற்றுக் குறைந்த தமிழ்ச் சமுதாயத்திற்கு உணர்வூட்ட, அதன் பழம்பெரும் இலக்கியப் படைப்புகளை அச்சேற்றி உலவ விடுவதே அடிப்படைப் பணியாக அமைகிறது. பிள்ளையவர்கள், தம் இரு கண்களெனப் போற்றிப் பாராட்டி வந்த திருக்குறளையும், தொல்காப்பியத்தையும் பதிப்பிக்கின்ற பணியினை முதற்பணியாகக் கருதி மேற்கொண்டார்.

"நூலாசிரியர், உரையாசிரியர், விரிவுரையாசிரியர் ஆகியோருக்குள்ள மதிப்பு, பதிப்பாசிரியருக்கும் அளித்தல் வேண்டும் என்பது ஒப்புக் கொள்ளக் கூடியதொன்றே" அம்

---

2. சாலை இளந்திரையன்; புகழ் மணக்கும் வாழ்க்கை, சுடர், வ. உ. சி, மலர், ப. 24.

மூவருக்கும் உள்ள அறிவு பதிப்பாசிரியருக்கும் இன்றியமையாதது''[3] என்பார் டாக்டர் அ. சிதம்பரநாத செட்டியார்.

மூலநூலில் ஆழ்ந்த புலமையும், பொருள் உணர்ந்து உரைக்கும் திறனும், விரித்து விளக்கம் தரவல்ல பரந்துபட்ட நூலறிவும் பதிப்பாசிரியருக்கு வேண்டுவன என்பது தெளிவு. வ. உ. சி. தம் வாழ்க்கைக்கு ஒளியூட்டும் நூலாகவும், தமிழர் நலத்திற்கு அச்சாணியாகவும் கருதியது திருக்குறளைத்தான். எனவே அவர் காலத்து வெளிவந்த திருக்குறள் பதிப்புகள் பரிமேலழகர் உரையுடன் கூடியதாக அமைந்ததாகும். ஆயின், சிதம்பரனார் பதிப்பித்து வெளியிட்டது திருக்குறள் மணக்குடவர் உரை (அறத்துப்பாலுக்கு) மட்டும்.

இப் பதிப்பினை வெளியிடும் எண்ணம் பிள்ளையவர்களுக்கு ஏற்படக் காரணங்கள் சில இருக்க வேண்டும். அந்நியர் ஆட்சியையும், மொழியையும் வெறுத்த வ. உ. சி. தமிழ் மண்ணில் ஆரியர் ஆதிக்கத்தையும் உள்ளூர விரும்பவில்லை. வாய்ப்பு நேரிடும் இடங்களிலெல்லாம் இக் குறிப்பு இலைமறை காயாக வெளிப்படக் காணலாம். தொல்காப்பியம் 'தமிழ் மொழிக்குத் தலையாக விளங்கும் ஒப்புயர்வற்ற இலக்கணம்' என்று கொண்டாடி இளம்பூரணத்தைப் பதிப்பித்த வ. உ. சி. அவர்களே இளம்பூரண எழுத்ததிகாரப் பதிப்பு முன்னுரையில்,

''இவ்வகைத் தனிச்சிறப்புப் பொருந்திய இத்தமிழ் இலக்கணத்துள்ளும் ஆரிய மொழிகள் சிலவற்றையும், ஆரியர் பழக்க வழக்கங்கள் சிலவற்றையும், ஆரியர் கொள்கைகள் சிலவற்றையும் இந்நூலாசிரியன் நுழைத்திருத்தலை ஆங்காங்கு காணலாம்''[4] என்று கூறுவது எண்ணத்தக்கது.

இ. மு. சுப்பிரமணிய பிள்ளைக்கு 1936இல் வ. உ. சி. எழுதிய கடிதம் ஒன்றில் ஸ்ரீவைகுண்டம் காரனேடின் ஹைஸ்கூலுக்கு ஒரு பண்டிதர் தேவை எனக் குறிப்பிட்டு ''தங்களுக்குத் தெரிந்த பிராமணரல்லாதாரை'' 'மனுச் செய்யும்படித் தூண்டுக' [5] என எழுதுகிறார்.

---

3. டாக்டர். அ. சிதம்பரநாதனார்; தமிழோசை; ப. 126.
4. தொல் எழுத். இளம். பதிப்பாசிரியர் வ. உ. சி. முன்னுரை.
5. ஆ. ரா. வெங்கடாசலபதி, வ. உ. சி. கடிதங்கள், ப. 182

பெரியார் ஈ. வே. ரா. அவர்களுக்கு 1936இல் எழுதிய கடிதம் ஒன்றிலும், ''சர்வகட்சிப் பார்ப்பனரல்லாதார்களும் ஒன்று கூடுவதற்குத் தாங்கள் சொல்வதே சரியான உபாயம். அவ்வாறு சர்வகட்சிப் பார்ப்பனரல்லாதார்களின் மகாநாடு ஒன்று காஞ்சிபுரத்தில் வருகிற ஜூன் மாதத்தில் நடக்கப் போகும், 'தமிழர் மகாநாட்டுப் பந்தரிலேயே கூட்டுவிக்கும் படியாக நமது நண்பர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களுக்கு நான் இதனுடன் ஒரு கடிதம் பொறுத்து எழுதியிருக்கிறேன் [6] என்ற பிள்ளையவர்கள் குறிப்பும் நோக்கத்தக்கது. தேசிய உணர்வு என்ற நாடளாவிய பொது உணர்வு ஒருபுறம் இருக்கத் தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் ஆரியர், தமிழர் என்ற வேறுபாடு கொண்ட இனவுணர்வு கனன்று கொண்டேயிருந்திருக்கிறது. வ. உ. சி யிடத்தும் இவ்வுணர்வு தெறிப்பாக வெளிப்படுவது அவர்தம் மொழிப் பற்றோடு கலந்து ஒன்றிய இன உணர்வினைக் காட்டுகின்றது. இவ் அடிப்படையில் நோக்குகையில் வடமொழிச் சார்பில், ஆரிய மரபுக் கூறுகளை உள்ளடக்கிய பரிமேலழகர் உரை வ. உ. சி.யின் தாக்குதலுக்கு உள்ளாகியதில் வியப்பில்லை.

ஆகவே, ''பரிமேலழகர் உரையை மறுப்பவர்களும் அவரது கருத்தை ஏற்காதவர்களும் மணக்குடவர் உரையையே நோக்குவது பல ஆண்டுகளாக இருந்துவரும் வழக்கமாகும்...... தமிழ்ப் பண்பாடு தழுவி எழுதப்பட்ட தெளிவுரை என்று இவரது உரையைப் போற்றுவார். பிற உரையாசியர்களைப் போல வடநூற் கருத்தைத் தம் உரையில் புகுத்துவதில்லை [7] '' என்று மு. வை. அரவிந்தன் குறித்தப்படி எளிய, இனிய, தமிழில் தமிழர் பண்பில் மலர்ந்த மணக்குடவர் உரையில் ஈர்க்கப்பட்ட வ. உ. சி. முதன்முதலாக மணக்குடவர் உரையை அறப்பாலுக்கு மட்டும் பதிப்பித்தார். இவர் பெரம்பூரில் இருந்த போது 1918இல் இது வெளிவந்தது. சகசானந்தரை உடன் வைத்துக் கொண்டு ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலும் செய்து அதனை வெளியிட்டதாகவும், அதற்குத் தென்னாப்பிரிக்கத் தமிழ்ப் பெருமக்கள் பொருளுதவி செய்தார்கள் என்றும் முன்னுரையில் குறிக்கின்றார். திருமணம்

---

6. மேற்படி. ப. 184

7. மு. வை. அரவிந்தன்; 'உரையாசிரியர்கள்', ப. 393

செல்வக் கேசவராய முதலியாரும், பேராசிரியர் த. கனகசுந்தரம் பிள்ளையும் அதனைப் பலமுறை பார்வையிட்டு உதவினார்கள் என்று 'வீரர் வ. உ. சிதம்பரம் பிள்ளை' என்ற நூலில் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை குறிப்பிடுவார்.

திருக்குறள் பதிப்பு வரலாற்றில் வ. உ. சி. பெறும் இடம் இதன்வழி பெறப்படும். வறுமையில் வாடிக்கொண்டிருந்த நாளில் தமிழுக்குக் கிடைக்காத புத்துரை ஒன்றை முயன்று பதிப்பித்து மொழிக்கு வளம் சேர்த்த பெருமைக்குரியவர் பிள்ளையவர்கள் என்று எண்ணிப் பெருமைப்பட வேண்டும்.

## தொல்காப்பியப் பதிப்புப் பணி

1918இல் 'தமிழ் நூல்கள்' என்ற தலைப்பில் 'ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை, எழுதிய சுதேசமித்திரன் வருஷ அநுபந்தக் கட்டுரை, வ. உ. சி. யின் தமிழ்ப் புலமையின் ஆழ அகலத்தைக் காட்டும் சிறப்பான வெளியீடாகும். இது பற்றிப் பின்வரும் விளக்கம் காணலாம். இதில் தமிழ் இலக்கண நூல்களைப் பற்றிக் குறித்து வருகையில் சிதம்பரனார் நன்னூல் பற்றிக் கூறும் கருத்துக்கள் நினைக்கத் தக்கன.

"இதனை நல்லிலக்கணமென்று இக்காலத்தில் பலர் கற்பிக்கின்றனர். ஆனாலும் இது பல இடங்களில் தொல்காப்பியத்தோடு முரண்படுகிறது. பலப்பல இலக்கணங்களை ஒன்று சேர்த்துச் சுருக்கச் சூத்தரிக்கப் பட்டுப் படிப்போருக்குத் தளர்ச்சியும் வெறுப்பும் உண்டாக்குவது. எழுத்தையும் சொல்லையும் பிழைபட உணர்த்திக் கற்போர் வாழ் நாள்களைக் கவர்ந்து, பொருள் முதலியவற்றைப் போதிக்கும் பேரிலக்கணங்களை அவர் கையிலெடுக்காதவாறு செய்வது. தமிழ் மக்களால் கைவிடப்பட வேண்டுமென்று என் போன்றோர் கடவுளைப் பிரார்த்திக்குமாறு செய்யும் தன்மையை உடையது" என்று கடுமையாக நன்னூலைத் திறன் செய்யும் வ. உ. சி. அதன்மீது கொண்ட வெறுப்பிற்கு நூலின் வடமொழிசார் மரபுக் கூறுகள் காரணமாக இருக்கலாமா ? அன்றித் தமிழின் தொன்மையான தொல்காப்பியம் பேணப்படாது, காண்டிகை உரை, விருத்தி உரை எனப் பல உரைகளுடன் நன்னூல் வெளியிடப் பெற்றுப்

புலவரிடையே செல்வாக்குப் பெற்றதும், அவர் காலத்தில் ஆங்கில மொழிபெயர்ப்புகள், பல பதிப்புகள் கண்டு சென்னைப் பல்கலைக்கழக எம். ஏ., பி. ஏ., வகுப்புகளுக்கு அது பாடமாக்கப்பட்டிருந்ததும் காரணமாகலாமா ? இவை ஆய்விற்குரிய வினாக்கள்.

1958இல் தொல்காப்பியமூலத்தை எசு. சாமுவேல் பிள்ளை வெளியிட்டார். 1847இல் மழவை மகாலிங்கத்தின் தொல்காப்பியம், எழுத்து, நச்சினார்க்கினியம் வெளிவந்தது. 1968இல் புலவர் கோமளபுரம் இராசகோபால் பிள்ளை, சேனாவரையத்தை முதன்முதலாக வெளியிட்டார். 1888இல் தான் சி. வை. தாமோதரம் பிள்ளை பொருளதிகாரம் நச்சினார்க்கினியத்தைப் 'பதிப்பித்தார். 1917இல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் செய்யுளியல், நச்சினார்க்கினியர் உரை வெளியிடப்பட்டது. இந்தப் பதிப்பு வரலாற்றில் வ. உ. சி. காலம் வரை தொல்காப்பிய உரைகளில் மிக, எளிதான, தெளிவான இளம்பூரணம், முழுமையாக வெளியிடப்படவில்லை என்று தெரிகிறது. கால இடைவெளிகளில் வெளிவந்தவையும் தொல்காப்பியத்தை முழுமையாக அறிந்து கொள்ளும் வகையில் மூன்று அதிகாரங்களையும் உள்ளடக்கியவையாகவும் அமையவில்லை.

1910இல் சிறையில் இருந்தபடி தொல்காப்பியத்தைக் கற்கத் தொடங்கிய வ. உ. சி. அதுவரை வெளிவந்த உரைகளின் கடுமையை உணர்கிறார். தாமே எளிய உரை காண வேண்டும் என்று எழுதவும் தொடங்கினார். ஆயின் 1912இல் விடுதலை பெற்றுச் சென்னையில் தங்கியபோது த. கனகசுந்தரம் பிள்ளை 1868இல் கன்னியப்ப முதலியாரால் வெளியிடப்பட்ட தொல்காப்பியம், எழுத்து, இளம்பூரணத்தைக் காட்டிய உடன், அதன் எளிமையையும் தெளிவையும் கண்டு உரை எழுதுவதை நிறுத்திவிட்டார். இளம்பூரணத்தை முழுமையாகப் பதிப்பிக்கும் சீரிய பணியைத் தொடங்கினார்.

1928இல் பொருளதிகாரம் அகத்திணையியல் புறத்திணையியல் ஆகியவை அடங்கிய இளம்பூரணம், 'வ. உ. சிதம்பரம் பிள்ளை பதிப்பாசிரியன்'என்ற பெயருடன் வேலாயுதம் பிரிண்டிங் பிரஸ், தூத்துக்குடி என்ற முகவரியுடன் வெளியிடப்பட்டது.

1 - 6 - 1928 இல் தொல்காப்பியம், இளம்பூரணம் 'எழுத்ததிகாரம் பதவுரை' புணரியல், உருபியல், உயிர் மயங்கியல் என்று குறிக்கப் பெற்று வ. உ. சிதம்பரம் பிள்ளை பதிப்பாசிரியன் என்ற பெயரில் வெளியிடப்பட்டது.

1933ஆம் ஆண்டு இளம்பூரணம் களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய மூன்று இயல்களையும் வாவிள்ள இராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்ட் சன்ஸ் நிறுவனத்தாரால் வெளியிடச் செய்தார்.

15-1- 1936 ஆம் ஆண்டு, இளம்பூரணம் மெய்ப்பாட்டியல், உவம இயல், செய்யுளியல், மரபியல்கள் வ. உ. சி. பதிப்புரையோடு வெளியாயிற்று. உடல்நலங்குன்றிப் போராடி வ. உ. சி. மறைந்த ஆண்டு 1936 என்பதும் இங்குக் குறிக்கத் தக்கது. அவர்தம் தமிழ்த் தொண்டு தொல்காப்பியப் பதிப்பில் நிறைவு அடைந்தது எனல் வேண்டும். இவ்வாறு எழுத்து, பொருளதிகாரம் முழுவதும் ஆகப் பதிப்பித்தவர், சொல்லதிகாரத்தை ஏனோ பதிப்பிக்க இயலவில்லை. ஆயினும் பதிப்பித்த பகுதிகளைப் பொறுத்த மட்டில் வ. உ. சி. யின் செம்மையான பதிப்புப் போக்குகள் பாராட்டத் தக்கனவாக அமைகின்றன.

டாக்டர் க. ப. அறவாணன் வ. உ. சி. யின் இவ்விலக்கணப் பதிப்பின் சிறப்புக் கூறுகளை வகுத்துக் கூறிய திறன் பதிப்பின் தன்மை பற்றிய மதிப்பீடாக அமைகிறது.

1. ஏடுகளிலும், அச்சேடுகளிலும் பொழிப்புரையாகக் கொடுக்கப்பட்டிருந்த உரைப்பகுதி, இவரால் பதவுரையாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

எழுத்ததிகாரம் பதவுரை என்றே ஒரு பதிப்பில் காணப்படுகிறது.

2. சூத்திரச் சொற்கள், பொருள் தரும் சொற்கள் இவற்றைக் கற்போர் எளிதில், உணருமாறு பிரித்து அடையாளமிட்டுப் பதிப்பித்துள்ளார். இதனை எழுத்ததிகாரம் பதிப்புரையில் வ. உ. சி. யே சுட்டிக் காட்டுகின்றார்.

3. பொருந்தும் இடங்களில் பாட வேறுபாடுகளும் உரை வேறுபாடுகளும் பதிப்பாசிரியரால் குறிக்கப்பட்டுள்ளன.

4. சூத்திர முதற் குறிப்புகள் கொடுக்கப்பட்டதுடன் இயல் அகராதி கொடுக்கப்பட்டு, இயல்தோறும் உள்ள சூத்திரங்களின் தொகையும் குறிக்கப்பட்டுள்ளது.

5. அருஞ்சொல் விளக்கங்கள் ஆங்காங்கு எடுத்துரைக்கப்படுகின்றன.

6. உரை சிதைந்த இடங்களைச் சுட்டிக்காட்டித் தம் உரையைத் தந்துள்ளார். திரு த.மு. சொர்ணம் பிள்ளை உரையும் கொடுக்கப்பட்டு அதற்கான அடிக்குறிப்பும் காணப்படுகிறது.

7. மேற்கோள் பாடல்கள் முழுமையாக அமையா இடங்களில் அவற்றை முழுவதும் தந்து உதவியுள்ளன.

8. த. மு. சொர்ணம் பிள்ளை தந்த ஏட்டுப் பிரதியில் காணப்படும் இடைச் செருகல்களை வெளிப்படையாகச் சுட்டிக் காட்டுகின்றார். பதிப்பு முழுவதும் உண்மை நாட்டம் காணும் ஆர்வம் காணப்படுகிறது. இவ்வாறு கூறும் அறவாணன்,

"இன்று வழங்கும் இளம்பூரணப் பதிப்புகளுக்குத் தாய்ப் பதிப்பாக விளங்கும் வ. உ. சி. யின் பொருளதிகாரப் பதிப்பு, பல நெறிகளில் முன்னோடியாக விளங்குகிறது" என்று பாராட்டி மகிழ்கின்றார்.[8].

வ. உ. சி. யின் எழுத்ததிகாரப் பதிப்பின் பதிப்புரை வாயிலாகப் பெறப்படும் சில ஆய்வுக் கருத்துக்கள் கருதத் தக்கன.

தொல்காப்பிய உரையாசிரியர் வரிசையில் இளம்பூரணர், கல்லாடர், பேராசிரியர். நச்சினார்க்கினியர், சேனாவரையர் என்ற ஐவரையும் சுட்டும் வ. உ. சி. இளம்பூரணரும், பேராசிரியரும் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களுக்கும் உரை வகுத்துள்ளனர் எனக் குறிப்பார். கல்லாடர் எழுத்து, சொல் ஆகிய இரண்டிற்கு மட்டும் உரை எழுதிய

---

8. டாக்டர் க. ப. அறவாணன், வ. உ. சி. யின் இலக்கணப் பதிப்புப்பணி, செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 47, பக் 24-26

தாகவும், சேனாவரையர் சொல்லிற்கு மட்டும் உரை கண்டுள்ள தாகவும், கூறுவது தொல்காப்பிய உரை வரலாற்றில் சில உண்மைகளைத் தெளிவு செய்ய வழிகாட்டும்.

வ. உ. சி. காலத்தில் பேராசிரியச் சொல்லதிகாரம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாரால் அச்சிடப் பெற்று முடிந்து விரைவில் வெளிவரும் நிலைமையில் இருக்கிறது என்ற செய்தி யையும் தருகிறார்.

தம்முடைய பதிப்பு, பூவிருந்தவல்லி கன்னியப்ப முதலியார் அச்சிட்ட நூலைப் பல ஏட்டுப் பிரதிகளோடு ஒப்பிட்டுப் பார்த்துத் திருத்தி அமைக்கப்பட்டது என்று கூறுகின்றார்.

"இளம்பூரணரே முதல் உரையாசிரியர். 'அவர், உரையா சிரியர்' எனவே யாவராலும் வழங்கப்படும் பெருமை வாய்ந்தவர். அவர் மூன்று அதிகார உரைகளுக்கும் எழுத்ததி காரவுரை 'எழுத்திற்கு இளம்பூரணம்' என்று யாவராலும் புகழப் பெற்றது" என்று பதிப்புரையில் குறிப்பிட்டு இளம்பூரணர் பெற்ற சிறப்பையும் செல்வாக்கையும் பாராட்டும் திறம் படித்து மகிழத்தக்கது.

1820ஆம் ஆண்டு தொடங்கப் பெற்ற இப்பணி 1938இல் தான் நிறைவு பெற்று முதற்பதிப்பு வெளிவந்துள்ளது. 'பொருளதிகார ஏனை இயல்களும் சொல்லதிகாரமும் விரைவில் வெளிவரும்' என்று உறுதியளித்து முடிக்கும் பிள்ளையவர் களால், பின்னர் சொல்லதிகாரத்தை வெளியிடவே முடியவில்லை.

பதிப்புத்தொழிலில் முன்னேறாத அந்நாளில், பிரதிகளைத் தேடிக் கண்டுபிடித்தும், ஒப்பிட்டு நோக்கியும், அறிவியல் முறையில் அணுகி நோக்கியும் பொருள் புலப்பாட்டிற்காகப் பொழிப்புரையாக அமைந்த உரையைப் பதவுரையாகத் தெளிவு படுத்தியும், அன்றாட வாழ்க்கையே சிக்கலாக இருந்த காலங் களில் நண்பர்கள் வழி நிதி உதவி பெற்றும் பதிப்பித்த வ. உ. சி. யின் செய்வினைத் திறன் நம்மை வியப்பிலாழ்த்து கின்றது.

இன்னொன்றும் குறிக்கத்தக்கது. மிக முயன்று பதிப்பித்த இம்முயற்சியில் துணைநின்ற எஸ். வையாபுரிப் பிள்ளையின் பங்கினை மனதாரப் பாராட்டுவது மட்டுமன்றி,

"ஏழு இயல்களுக்கும் பெயரளவில் பதிப்பாசிரியர் யான். உண்மையில் பதிப்பாசிரியர் திரு. வையாபுரிப் பிள்ளையவர்களே. அவர்கள் செய்த நன்றி என்னால் என்றும் உன்னற் பாலது" என்று வெளிப்படையாக நேர்மைத் திறத்துடன் பேசுவது நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது. போலித்தனமும், பிறர் உழைப்பினை உறிஞ்சித் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளும் பொய்ம்மையும் நிறைந்த இன்றைய தமிழ் உலகம், வ. உ. சி. யின் நெஞ்ச உரத்தினையும், நேர்மைப் பண்பினையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

## "இன்னிலை" - பதிப்பு - ஒரு விளக்கம்

"எந்த நூலை எடுத்தாலும் இவர் முன்பிருந்த நூலாசிரியர்கள் கூறியதனை அலசிப் பார்த்துப் புதிய உரை காணுவதிலே முயன்று வருவார். இலக்கணம் முதலிய விலங்குகளையெல்லாம் இவர் அறவே களைந்து எறிந்து விடுவார். துணிகரமும், உணர்ச்சி வேகமும், எதனையும் தன்னிலையிலிருந்து நோக்கும் நேர்மையும் இவரது முக்கிய இயல்புகள்" [9] என்ற எஸ். வையா-புரிப் பிள்ளை, வ. உ. சி. யின் பண்புகள், அவர்தம் தமிழ்த் தொண்டில் ஏற்படுத்திய பாதிப்புகளைக் குறிப்பாகச்சுட்டுகின்றார். துணிவு, உணர்ச்சி வேகம், தற்சார்பு ஆகிய பண்புகள், உணர்வுகளின் வெளிப்பாடாகிய இலக்கியங்களைத் துய்த்தற்கும், படைத்தற்கும், பதிப்பித்தற்கும், விளக்கம் கண்டதற்கும் வெளிப்படையான காரணிகளாகின்றன என்பதை மெய்ப்பிக்கும் வகையில் வ. உ. சி. யின் 'இன்னிலைப்' பதிப்பு அமைகின்றது. மேற்கூறிய பண்புகளுடன் தமிழ்ச் செல்வங்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்ற வரம்பிகந்த ஆர்வமும், பற்றும், சில சமயங்களில் அறிவு தேடலில் ஏமாற்றங்களுக்கும் இடம் தந்துள்ளன. வ. உ. சி. யின் எதிர்ப்பு கண்டு அஞ்சா வீர உள்ளம் "ஸாராம்சத்தில் ஒரு ஞானக் குழந்தையுள்ளம்தான்" என்று உருகும் பி.ஸ்ரீ. "இன்னிலை என்ற ஒரு நூலைப் பதினெண் கீழ்க்கணக்குகளில் ஒன்று என்று இவர் வெளியிட்டிருக்கின்றார்.

---

9. எஸ். வையாபுரிப்பிள்ளை, 'தமிழ்ச்சுடர் மணிகள்', நான் கண்ட வ. உ. சி. ப. 368

அதன் கையெழுத்துப் பிரதியைப் பழைய ஏட்டின் பிரதியென்று ஒரு பண்டிதர் (திருநெல்வேலி தமிழ்ப் பண்டிதர் த.மு. சொர்ணம் பிள்ளை) இவர் கையில் கொடுத்தார். அவரை நம்பித்தான் சிதம்பரனார் அதை வெளியிடலானார். உண்மையில் அந்தப் பிரதி ஒரு விசுவாமித்திர சிருஷ்டிதான். அதற்காக அவர் சிதம்பரனாரிடம் பணம் பெற்றுக் கொண்டார். அதே போலிப் புலவர் பேரறிஞர் வ. வே. சு. ஐயரையும் ஒரு தடவை ஏமாற்றி விட்டார்''10 என்று விளக்குகின்றார்.

டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், டாக்டர் எழில்முதல்வன், தோழர் ப. ஜீவானந்தம், தி. நெ. வள்ளிநாயகம் போன்ற அறிஞர்கள் வ. உ. சி. யின் தமிழ்ப் பணிகளை மதிப்பீடு செய்கையில் 'இன்னிலை' பதிப்பு பற்றிக் குறித்துக் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய அதனைச் சிதம்பரனார் பதிப்பித்து உரை விளக்கம் கண்ட அருமைப்பாடுகளைப் பாராட்டு கின்றனர்.

ஆயின்,இவர்கள் கட்டுரைகளுக்கு முன்பே எஸ். வையாபுரிப் பிள்ளை, மயிலை சீனி. வேங்கடசாமி, மு. அருணாசலம் ஆகியோர் 'இன்னிலை' வேறு கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய 'கைந்நிலை' வேறு என்று விளக்கி வ. உ. சி. அவர்கள் தவறுதலாக 'இன்னிலை' நூலை வெளி யிட்டதை எடுத்துரைத்து உண்மையை நிலை நாட்டியுள்ளனர். ஆனால் இங்குக் கருதற்குரியது நூல் ஒன்றைப் பதிப்பித்து உரை விளக்கம் தருங்கால் ஆய்வு மனப்பான்மையுடன் செயற் படும் திறன், வ. உ. சி. யிடம் இயல்பாக அமைந்து கிடந்த தற்கு இந்தப் போலி நூல் சிறந்த சான்றாக விளங்குவது தான் குறிப்பிடத்தக்கது.

14—7—1917இல் தில்லையாடி வேதியப்ப பிள்ளையால் இந்நூல் பதிப்பிக்கப்பட்டது. 1980இல் இரண்டாம் பதிப்புக் கண்டதும் குறிக்கத்தக்கது. "வ. உ. சி. சிதம்பரம் பிள்ளை யவர்கள் விருத்தியுரையுடன்" என்று முகப்பில் வெளியிடப் பட்டுள்ளது.

---

10. பி. ஸ்ரீ., வ. உ. சி. சில நினைவுகள்

19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் (1800-1900) என்ற தலைப்பில் 1962இல் மயிலை சீனி வேங்கடசாமி வெளியிட்ட நூலில் 'இன்னிலை' யின் போலித் தன்மையை நிலை நாட்டுகின்றார்.

இன்னிலைய காஞ்சியோடு ஏலாதி என்பவே
கைந்நிலையு மாங்கீழ்க் கணக்கு

என்ற பதினெண் கீழ்க்கணக்கு நூற்பட்டியல் தரும் வெண்பாவினைப் பிறழ உணர்ந்ததன் விளைவே இக்குழப்பம் என்பார். 'கைந்நிலை' தான் பட்டியலைச் சார்ந்தது என்பதையும் எடுத்துக் காட்டுகின்றார். பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடியிருப்பதாகச் சொல்வது பிழை என்பதை இவ்வரிசையில் சிலவற்றிக்குக் கடவுள் வாழ்த்தே இல்லாமை கூறியும், நூலாசிரியர்களே சிலவற்றிற்குப் பாடியுள்ளமையைச் சுட்டியும் நிலை நாட்டுகின்றார்.

இளம்பூரணர் உரையில் இன்னிலைப் பாடல்கள் மேற்கோள்களாக வந்துள்ளதாகக் காட்டுவார் வ. உ. சி. ஆயின் 1985இல் அவர் பதிப்பித்த நூலில் அவை காணப்படவில்லை. ஏட்டுப்பிரதியில் காணப்பெறாத செய்திகள் ஆதாரமின்றி நுழைத்தெழுதப்பட்டுள்ளன. த. மு. சொர்ணம் பிள்ளை தந்த பிரதியில் காணலாகும் இடைச் செருகல்களைக் களைந்து பதிப்பித்திருப்பதாகவும் வ. உ. சி. யே குறிப்பிடுவார்.

பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் எடுத்தாண்டதாக வ. உ. சி. குறிப்பிடும் இடங்கள் பூதத்தார் அவையடக்கு எனப்படும் என்றும் மயிலை சீனி. வேங்கடசாமி குறித்துச் செல்வார்.

யாப்பருங்கல விருத்தியில் ஒரு செய்யுள் இன்னிலையின் கண்ணே உள்ளது என்ற வ. உ. சி. யின் கூற்றினை இலக்கிய மணிமாலையில் எஸ். வையாபுரிப் பிள்ளை மறுத்து, அது ஔவையார் பாடல் என நிறுவுவதையும் எடுத்துக் காட்டுகின்றார்.

1931 இல் அநந்தராம அய்யர் 'கைந்நிலை'யை அச்சிட்டு வெளியிட்டதும், இன்னிலை போலி நூல் என்பது தெளிவாயிற்று.

"இன்னிலை முழுவதுமே சொர்ணம் பிள்ளையார் கைச்சரக்கு. இப்படி ஒரு நூல் முன்னமே இருந்ததில்லை...... ஏமாந்து போய்த்தான் சிதம்பரம்பிள்ளை இதற்கு விரிவுரை எழுதி, ஆராய்ச்சி நிகழ்த்தி, ஆசிரியர் யாரென்று நிறுவி, நூலின் காலம் திருக்குறளுக்கு முற்பட்டது என்றும் தெரிவிக்கிறார். சொர்ணம் பிள்ளையின் திறமையை நாம் பெரிதும் பாராட்டவே செய்கிறோம். அந்த நூல் இந்த இருபதாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் ஒருவர் புதிதாகப் புனைந்து பழமை போலத் தோன்றுமாறு செய்த வித்தையாகும்" என மு. அருணாசலம் விளக்குவதும் நோக்கத்தக்கது[11].

சிதம்பரனாரின் சீரிய செந்தமிழ்ப் பணிகளில் இப்படியொரு விபத்து நிகழ்ந்ததும் குறிப்பிடத்தக்கதே. அவர்தம் வாதத் திறனும், தமிழ்நூற் புலமையும், உரை விளக்கத் திறனும் விழலுக்கு இறைத்த நீராய் வீணாயினும், இவ்விருத்தியுரை வழிச் சிதம்பரனாரின் உரைத்திறன் காட்டும் சிறப்புக் கூறுகளைக் கண்டு வியக்கலாம். ஆய்வுநெறி முறைகள் வளர்ந்து வரும் இந்நாளில் ஆய்வாளர்கள் பின்பற்றும் செவ்விய நெறிமுறைகளைக் கடைப்பிடித்து மெய்ம்மைகளை முறைப்படுத்தி உண்மைகளை வரையறுக்கும் வகையில் அமைந்த இந்நூலின் முன்னுரை, ஆராய்ச்சி மாணவர்கள் படித்து உணரத்தக்கதாம். முன்னுரையிலும், ஆசிரியர் வரலாறு பற்றிய குறிப்புரையிலும் சிதம்பரனார் உண்மைகளைக் காணும் வேட்கையுடன் ஆர்வமாக எடுத்துரைத்து, நிலை நாட்டும் முடிவுகள் நம்மை வியக்கச் செய்கின்றன.

1. கீழ்க்கணக்கு...பெயர் விளக்கம் தருதல்

2. இன்னிலை, கைந்நிலை, மெய்ந்நிலை என்றெல்லாம் புலவர்கள் கூறும் வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டி, அவை பொருந்துவனவல்ல என்று முடிவு கூறி, நூலின் பெயர் 'இன்னிலை' என நிலைநாட்டல்.

---

11. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, பத்தாம் நூற்றாண்டு, பக் 595, 596.

3. யாப்பு அமைப்புகளை விளக்குதல்.

4. செய்யும் என்னும் வாய்ப்பாட்டுச் சொல் பயனிலையாகப் பயன்படுதல். 'உம்' 'உந்து' என வருதல் ஆகிய இலக்கண நுட்பங்களை இன்னிலைச் செய்யுள்கள் வழிக் குறித்தல்.

5. நூல் நுவல் பொருள் சிறப்பினை விளக்குதல்

6. திருக்குறளில் 'இன்னிலை'ச் செய்யுட் பகுதிகள் பல எடுத்தாளப் பெற்றுள்ளதாதச் சான்றுகளைக் காட்டி, இந்நூல் குறளுக்கும் முந்தியது என நிறுவும் போக்கு.

7. தொல்காப்பிய உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டியிருப்பதாகச் சுட்டல்.

8. ஏட்டுப்பிரதி கிடைத்தவிதம் உரைத்தல்.

9. பொய்கையார் யார் என முடிவு காணல்.

10. இந்நூலில் காணப்படும் அருஞ்சொற்கள் நாலடியார் நான்மணிக்கடிகை, அறநெறிச்சாரம் முதலிய தொன்னூல்களில் மட்டுமே காணப்படுகின்றன. தொல்காப்பியரும், இந்நூலாசிரியரும் கடவுளைக் 'கந்தழி' என்று கூறியுள்ளனர். இக்காரணங்களால் இந்நூல் கடைச்சங்க காலத்துக்கு மிக முற்பட்டது என்பதில் ஐயமேயில்லை என்ற முடிவுக்கு வருகிறார் வ. உ. சி. இத்தகைய ஆராய்ச்சிப் போக்கு ஒருவகையில் அறிவியல் அணுகு முறைப்பட்டது எனினும் இம் முன்னுரையின் இறுதியில் சமகால ஆய்வாளர் போக்குகளைப் பிள்ளையவர்கள் இடித்துரைப்பது மிகுந்த வியப்பை விளைவிக்கின்றது.

''கடைச்சங்கத்தினது காலத்தையும், அச்சங்கத்துப் பல புலவர்களது காலங்களையும், அச் சங்கமேறிய பல நூல்களின் காலங்களையும், ஆழ்வார்களாதியோர் காலங்களையும் இக் காலத்துக் 'கல்வெட்டுப் புலவர்கள்' மிக வரையறுத்து நமது காலத்திற்கு மிகச் சமீபத்தில் கொண்டு வந்து விட்டிருக்கிறார்கள்.

அப்புலவரது கூற்றுத் தென்திசைக் காற்றுப்போல மிக்க அச்சத்தையும் வியப்பையும் விளைக்கின்றது. அவர்களது கூற்றை முன்னோட்டுவதற்கு வேண்டும் கருவிகளையும் காலத்தையும் தேடிக் கொண்டிருக்கிறேன். அவை எனக்குக் கிடைத்த பின்னர் இந்நூல் இயற்றப்பட்ட காலம் முதலியவற்றை யான் வரையறுக்கத் துணிதல் நலமென்று கருதி, இந்நூல் இயற்றப்பட்ட காலம் மேற்கூறிய கடைச்சங்க நூல்களது காலத்திற்கு மிக முற்பட்டதென்று மட்டும் இப்பொழுது கூறி நிறுத்துகின்றேன்'' என்ற பகுதி சிதம்பரம் பிள்ளையின் சட்டப்படிப்பு வழிப்பட்ட வாதத்திறனையும், அஞ்சாமையையும், துணிவுடன் முடிவுகளை நிலைநாட்டும் தறுகண்மையையும் காட்டுகிறது. ஆய்வுநாட்டம் அவர் இயல்பில் கலந்தது என்பதும் பெறப்படுகிறது. வ. உ, சி. புதிதாக வெளிக்கொண்டு வந்து பதிப்பித்து ஆய்வுரை விருத்தியுரை எழுதி உருவாக்கியது 'இன்னிலை' மட்டும் தான், ஆயின் அவர் ஆழ் புலமைத் திறனெல்லாம் போலி நூல் ஒன்றன் வெளிப்பாட்டிற்குப் பாழ்பட்டு வீணானது வருந்தத்தக்கது. எக்காலத்தும், எளிமையும் அன்பும், பெருந்தன்மையும், ஆர்வமும் உடைய அறிஞர்கள் எளிவந்த பண்புகளைப் பயன்படுத்திப் பிழைக்கும் புல்லறிவாளர் கூட்டம் இருந்து வந்துள்ளது என்றும் அதற்கு இரையாகிய சான்றோர் வரிசையில் வ. உ. சி. யும் இடம் பெற்றுவிட்டார் என்றும் கூறி அமைவதே நலம்.

## உரையாசிரியர் வ. உ. சி.

'இன்னிலை' நூல்வழி வ. உ. சி. யின் உரைநலம் காண்பது முறையன்று. பொருத்தமுமன்று. எனவே சிவஞான போதத்திற்கு உரை கண்ட பிள்ளையவர்களின் உரைத்திறன்களை இங்கு விளக்குதல் சாலும்.

இலக்கியங்களில் தோய்ந்த வ. உ. சி. யின். தமிழ் உள்ளம், தாம் கடைப்பிடித்த சைவ சமய உண்மைகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தது இயல்பே. வள்ளிநாயகம் என்ற சித்தாந்த வித்துவான் சைவ சமய நூல்களில் வ. உ. சி பயிற்சி பெற உதவினார்கள். சிவஞான போதத்தைக் கற்ற சிதம்பரனார். சித்தாந்தப் பேருண்மைகள் மக்களைச் சென்றடைய வேண்டும் என விரும்பினார். தத்துவங்களும், சித்தாந்தங்களும் கற்றவர் மனநல உயர்வுக்கு மட்டுமே உரியன அல்ல. சமய உணர்

வுடைய, வாழ்க்கை உண்மைகளை அறிய விரும்பும் ஆர்வமுடைய பொதுமக்களும் அறியும்வண்ணம் அவற்றை எளிமைப்படுத்த வேண்டும் என்று அருளுள்ளம் கொண்ட வ. உ. சி. விரும்பியதில் வியப்பில்லை. அரசியல் வாழ்வு, கலை வாழ்வு, ஞான வாழ்வு என எந்நிலைப்பட்ட வாழ்வாயினும் தலைமைத் தன்மையாலும் செல்வத்தாலும், கல்வியறிவாலும் உயர்ந்த ஒரு கூட்டத்திற்கே பயன்படு வகையில் அவ் வாழ்வு நெறிகள் அமைவதினும் பரந்து பட்ட நிலையில் மக்கள் சமுதாயப் பொதுப் பயன்பாட்டு முறை மையில் அவை பொதுமைப்படுத்துதல் வேண்டும் என்பது வ.உ.சி.யின் உள்ளக்கிடக்கை. இவர் தமிழ்த்தொண்டின் உயிர்நாடியும் இதுவே.

1935 ஆம் ஆண்டில் நாவலர் பாரதியாருக்கு எழுதிய கடிதத்தில் வ. உ. சி. கீழ்க்கண்டவாறு ஒரு குறிப்பு வைத்து அனுப்பியுள்ளார்:

''சிவஞான போதத்திற்கு ஓர் உரை எழுதித், 'தினமணி' வருஷ அநுபந்தத்திற்கு அனுப்பியுள்ளேன். ஸ்ரீ சிவஞான சுவாமிகள் உரையைக் கண்டித்தால், சைவர் பலர் மனம் நோகுமென்று கருதி அது செய்யாது விடுத்துள்ளேன். என் உரை சுவாமிகள் உரைக்குப் பல இடங்களில் வேறுபட்டும் மாறுபட்டுமுள்ளது இதற்கும் போலிச் சைவர் குழாம் என்னை நிந்தித்தல் கூடும். அந் நிந்தனையை வந்தனையாகவே கொள்ளும் மனநிலை யுடையேன் தற்காலம்.[12] வ. உ. சி. யின் செய்திறன் ஆற்றல் விளைவு நோக்கி அமையும் அருமைப்பாடு இதுவாம். இவ்வுரை தோன்றுதற்கான சூழலைப் பற்றியும் வ. உ. சி. 'சிவஞான போத வரலாறு' என்ற கட்டுரையில் எடுத்துரைக் கின்றார். கைவல்ய நவநீதம் போன்ற வேதாந்த நூல்களில் ஈடுபாடு கொண்ட வ. உ. சி. யின் ஞான உள்ளத்தைச் சித்தாந்த நூல்களில் திசை திருப்ப வேண்டுமென்று விரும்பிய தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் செயலர் தெ.ச. சு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், ''வக்கீலாயிருக்கிறபடியால் நீங்கள் சொல்வனவற்றை யாவரும் அறியும்படியான விதத்தில் தெளிவாகச் சொல்கிறீர்கள். நீங்கள் சிவஞான போதப்

---

12. ஆ. ரா. வேங்கடாசலபதி, முன்னூல், ப. 180.

பன்னிரண்டு சூத்திரங்களையும் படித்து நமது சைவ சித்தாந்த சபையில் பிரசங்கம் செய்ய வேண்டும்'' என்ற வேண்டுகோளை நிறைவேற்றிய பின் பல ஆண்டுகளுக்குப் பின் வடமொழி, தமிழ்ச் சிவஞான போத சூத்திரங்களை ஒப்பிட்டுப் பார்த்து, ஒன்றன் மொழி பெயர்ப்பு மற்றது என்று கண்டாராம். ஆனால் எது மூலம் எது மொழிபெயர்ப்பு என்ற ஆராய்ச்சியில் இறங்காமல், மக்கள் இந்நூலைத் தெரிந்து தெளியவேண்டுமென எளிய உரை எழுதினராம்.

இவ்வுரை நூலின் தொடக்கத்தில் உரைப்பாயிரம் எனத் தலைப்பிட்டு அப்பகுதியில் சிதம்பரனார் தாம் உரை எழுது வதன் நோக்கு, நூற்சிறப்பு, உரை அமைப்புமுறை ஆகிய வற்றை எடுத்து மொழிதல் வாயிலாக, அவர்தம் சிந்தனைத் தெளிவையும் செந்தமிழ்த் தொண்டின் சீர்மையையும் புரிந்து கொள்ள முடிகிறது.

குறள், சிவஞான போதம், கைவல்ய நவநீதம் ஆகிய மூன்றும் முறையே நீதி நூல்களிலும், வேதாந்த நூல்களிலும் ஒப்புயர்வற்றவை என்பது வ. உ. சி. யின் எண்ணம். ஆயின் இவற்றின் உரைகள் கடினநடையில் அமைந்திருந்தன.

''அவற்றைத் தமிழ் மக்கள் கற்பதற்குக் கையில் எடுக்காத வாறு அச்சுறுத்துகின்றன. அவ்வச்சத்தை நிவர்த்திக்கும் பொருட்டு எளிய நடையிலும் சிறிய அளவிலும் அவற்றிக்கு உரைகள் எழுத வேண்டுமெனப் பல ஆண்டுகளுக்கு முன் நினைத்தேன். பின்னர் திருவள்ளுவர் திருக்குறளுக்கு ஓர் உரை எழுதி வெளிப்படுத்தினேன். இப்போது சிவஞான போதத்திற்கு இவ்வுரையெழுதி வெளிப்படுத்துகின்றேன்'' என்கிறார். வ. உ. சி. யின் தமிழ்த்தொண்டு, மக்கள், மொழி நலன்களையும், சிறப்புகளையும் உணர வேண்டும் என்ற பொதுநல மனப்பான்மையில் மலர்ந்ததாகிறது. பண்டிதர்கள், கற்றவர்கள் நடுவில் சிறைப்பட்டுக் கிடந்த தமிழைச் 'சுவை புதிது, பொருள் புதிது நவ கவிதை' மகாகவிதையாய்ப் பழகு தமிழில் மக்கள் மன்றில் ஒலிக்கப் பாடுபட்ட பாரதியின் அன்புத் தோழர் வ. உ. சி. உரை இலக்கியங்கள் வாயிலாகத் தமிழ் இலக்கியச் செல்வங்களை மக்கள் உணரச் செய்தார்.

சுப்பிரமணிய சிவமோ, அரசியல் ஞானத்தையும், தத்துவ ஞானத்தையும் மக்கள் புரிந்து கொள்ள மேடைத் தமிழையும், பத்திரிகைத் தமிழையும் எளிமைப்படுத்தினார். இம் மூவர்தம் இலக்கியப் பணிகள், அடிமைத் தமிழகத்தின் வரலாற்றுச் சிறப்புடையன என்பதை மீண்டும் நினைவுபடுத்தல் பொருந்தும்.

இனி, வழக்கிலுள்ள சிவஞான போத உரைகளினின்றும் தாம் வேறுபட்டுப் புதுவது பயக்கும் வகையில் எளிய உரை கண்டுள்ள முறைமையினை வகுத்துரைக்கின்றார்.

1. பல சமயக் கோட்பாடுகள், கண்டனங்கள் இவற்றை ஒதுக்கி உரை எழுதிய சிறப்பு.

2. வேறுபடு சமயங்களின் ஊடே விளங்கி நிற்பது ஓரிறைத் தத்துவமே என்ற உண்மையில் கொண்ட நம்பிக்கை.

3. தேச பக்தராகிய சிதம்பரனாரின் இலக்கியப் பணிகளில் அடிநாதமாக ஒலிப்பது தேசிய உணர்வும், அதன்வழி மக்கள் நலம் காண்பதும்தான். ''மதவேற்றுமையைக் காண்பவர்களும், பேசுபவர்களும், 'யான்', 'எனது' என்னும் மதவெறி பிடித்த மாக்களே என்றும், நமது நாடு தற்காலம் இருக்கிற ஒற்றுமையற்ற நிலைமையில் மதவேற்றுமைகளையோ, சாதி வேற்றுமைகளையோ, காண்பவர்களும் பேசுபவர்களும் தேசத்திற்குத் தீங்கிழைப்பவர்களேயென்றும் யான் கருதுகின்றேன். அதனாலும் இவ்வுரையில் யான் பல மதக் கோட்பாடுகளையும், அவற்றின் பொய்யான உயர்வு தாழ்ச்சிகளையும் பற்றி ஒன்றும் பேசவில்லை'' என்று குறிக்கின்றார்.

4. மெய்கண்ட தேவர் இயற்றியதாகச் சொல்லப்படும் பல மதக் கண்டனங்கள் நிறைந்த வார்த்திகப் பொழிப்புரை, பின் வந்தோரால் இணைக்கப்பட்ட இடைச்செருகல் என ஒதுக்க வேண்டும்.

5. சிவஞான போத மூலம் பற்றியும், மொழி பெயர்ப்புச் சிக்கல் பற்றியும் தாம் ஆராயவில்லை என்று கூறுகிறார்.

தமிழ்ச் சிவஞான போதச் சூத்திரங்களின் சொற்களையும் எனது சொந்த மெய்ஞ்ஞானத்தையும் ஆதாரமாகக் கொண்டும், சிவஞான போதச் சூத்திரங்களுக்கு ஸ்ரீ சிவஞான சுவாமிகள் இயற்றியுள்ள சிற்றுரையில் பிண்டப் பொழிப்புரைகளையும், தமிழகராதியையும் துணையாகக் கொண்டும் இவ்வுரை இயற்றியுள்ளேன். நாள் ஒன்றுக்கு இரண்டு மணி வீதம் பன்னிரண்டு நாள்களுள் யான் சிவஞான போதத்தை ஆராய்ச்சி செய்து இவ்வுரையை எழுதி முடித்தேன். ஆதலால் சிவஞான சுவாமிகள் முதலியோர்களின் உரைகளைப் பற்றி யான் ஆராய்ச்சி செய்யப் புகவில்லை'' என்ற குறிப்பு வ. உ. சி. யின் நேர்மையையும், உழைப்பாற்றலையும் திட்டமிட்டுச் செயற்படும் அறிவு மனப்பான்மையையும் அறிந்து கொள்ள வழிவகுக்கின்றது.

இவ்வாராய்ச்சியின் வழித் தாம் அடைந்த பயன் சித்தாந்தமும் வேதாந்தமும் ஒன்றேஎன்ற தம் கொள்கை உறுதியடைந்ததாகும் எனக் கூறும் வ. உ. சி. அவர்களின் மனநலச் சமன்பாடும், பொதுமை நோக்கும் எண்ணி இன்புறத்தக்கனவாம்.

குறுக்குச் சாலையிலுள்ள திரு அ. செ. சு. அவர்களுடைய தருமச் சத்திரக் கட்டிடத்தின் முன் மதுரை ஸ்ரீபிரமானந்த சுவாமிகள் மடாலய அதிபர் ஸ்ரீ சோமசுந்தர சுவாமிகள் தலைமையில் இந்நூலை அரங்கேற்றியதாகக் குறிப்பிடுகின்றார் வ. உ. சி. திருக்குறள் உரையைச் திருச்செந்தூரில் அரங்கேற்றியதும் இங்கு நோக்கத்தக்கது. அறிஞர் அவையில் அரங்கேற்றி ஒப்புதலும் பாராட்டும் பெறும் போக்குச் சிதம்பரனார் காலத்து இருந்தது என்பது குறிக்கத்தக்கது.

## உரைச்சிறப்பு நலன்கள்

இனி, சிவஞான போத உரை நலன்களைக் காணலாம். வ. உ. சி. உரைவிளக்கம் கூறும் முறையில் சில நெறி முறைகளைக் கடைப்பிடிக்கின்றார்.

1. சூத்திர சாரத்தைத் தலைப்பாகக் குறிப்பிடுதல். சான்றாக முதல் சூத்திரம் இறைவன் உண்மை, இரண்டாம் சூத்திரம் இறைவனே உலகமாயினான்,

2. சூத்திரப் பொருளை, சூத்திரத்தின் கீழ் பொருள் என்ற பகுதியில் தருவது. இது பதவுரையாக அமைகிறது.

3. அகலம் என்ற பகுதியில் இலக்கணக் குறிப்பு, பொருள் விளக்கக் குறிப்புகள், பாடபேதங்கள், உத்தி விளக்கல், நயங்காணல் போன்ற கூறுகள் முறைப்படுத்தப்பட்டுள்ளன.

4. சூத்திரப் பிழிவினைக் கருத்து என்று தலைப்பிட்டுச் சுருக்கமாகச் சுட்டுகின்றார்.
**எட்டாம் சூத்திரம் கருத்து :** உயிர்கள் தம் தவத்தால் உலகப் பற்றை விடுத்து இறைவனைச் சிந்திக்கும்.

**பனிரெண்டாம் சூத்திரம்**
**கருத்து :** ''சீவன் முத்தன் செயல்கள் தனது ஆணவ மலத்தை ஒழித்தலும், இறைவனது அடியாரோடு கூடியிருத்தலும், அவ்வடியாரையும் ஆலயங்களையும் தொழுதலுமே''.

இவ்வமைப்பு முறையில் சூத்திரத் தலைப்புகளையும் கருத்துப் பகுதிகளையும் ஒருங்கிணைத்துப்பார்க்கும் அளவிலேயே சிவஞான போத உட்பொருள் உண்மை தெளிவுபடுத்தப்படுகிறது. மிக ஆழமான, செறிவான சித்தாந்த சாத்திரப் பொருண்மைகளை இத்துணை எளிமையாக விளக்கும் முறையைத் தமிழ் கூறும் சைவ சித்தாந்த சாத்திர உலகம் கண்டதில்லை. வ. உ. சி. அவர்கள் மக்கள் அறிவுநலம் பெற முதன்மையாகக் கொண்டு உருவாக்கிய இவ்வுரை உரையிலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் கொள்ளும் தகுதி வாய்ந்தது.

இறைவன் அருளாலேயே இறைவனை அடைய முடியும் என்ற பதினோராம் சூத்திரம்,

காணும் கண்ணுக்குக் காட்டு முளம்போற்
காண வுள்ளத்தைக் கண்டு காட்டலி
னயரா வன்பி னரன்கழற் செலுமே

என்று அமைகிறது. இதன் அகல உரை பற்றிச் சிலகூறுதல் நலம். பிள்ளையவர்கள் புலமைத் திறனுக்கும் உரைநலம் காண் ஆற்றலுக்கும் சான்றாக இது அமைகிறது.

"உள்ளம் - ஆன்ம புருடன் உயிர். 'காண்' என்பதும் கண்டு என்பதும் உவமானத்தோடும், உவமேயத்தோடும் கூட்டி-யுரைக்கப்பட்டன. உவமானம் கண்; உவமேயம் உயிர். புறப் பொருளைக் கண்ணோடுகூடி உயிர்கண்டுகண்ணுக்குக்காட்டுதல் போல், தன்னை உயிரோடு கூடி அறிந்து இறைவன் உயிருக்கு அறிவிப்பனென்று கூறியவாறு.

ஓர் ஆசிரியன் தன் மாணாக்கனோடு கூடிச்சென்று, அம் மாணாக்கன் விரும்பும் பொருள்களையெல்லாம் கண்டு அம் மாணாக்கனுக்குக் காட்டுவனேல், அம்மாணாக்கன் அவ்வாசிரி யன்பால் தளராத அன்பு செலுத்தி அவனோடு இடைவிடாது உறைதல் போல, இறைவன் உயிரோடு கூடி அவ்வுயிர் அறிய விரும்பும் பொருளாகிய தன்னை அறிந்து அவ்வுயிர்க்கு அறிவித்தலால், உயிர் இறைவனோடு ஐக்கியமாய் நிற்கும் எனக் கொள்க. அயராத என்பது ஈறுகெட்டு நின்றது. இறைவனை இறைவன் நிழல் என்றது உபசார வழக்கு. 'ஏகாரம்' ஈற்றசை"

சிவஞானபோதத் தெளிவுரைக்கு இது ஒரு சான்று. தேர்ந்த உரையாசிரியர்களின் வழிமுறையைப் பின்பற்றிப் பிள்ளையவர்கள் காணும் உரை நம்மை வியக்கச் செய்கிறது. முறையாகத் தமிழ் பயின்றவர்களும் அஞ்சி நுழையத் தயங்கும், சாத்திர உலகில் துணிவுடன் நுழைந்து நுண்பொருள் கண்டு அதனை மக்கள் புரிந்து கொள்ளும் எளிய கருத்துரையாக வழங்குவது என்பது உண்மையான மொழிப்பற்றும், தொண்டுள்ளமும் கொண்ட-வர்க்கே சாலும். சித்தாந்த கலாநிதி ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, ப. இராமநாதன் போன்ற சைவத் துறைபோய அறிஞர்கள் தந்த சிவஞான போதச் சிற்றுரைகளுடன் ஒப்ப வைத்து எண்ணத்தகும் சிதம்பரனார் உரை, தமிழ் உலகில் மறைந்திருப்பது நம் தவக்குறையே. மீண்டும் அது வெளிச்சம் காணும் நாள் விரைவில் வருதல் வேண்டும்.

### சிவஞான போத வரலாறு

வ. உ. சி. அவர்கள் தம் உரையினைத் தொடர்ந்து, சிவஞான போதம் பிறந்த வரலாறு பற்றியும், சிவஞான போதத்திற்கும் ஞான வாசிட்டத்திற்கும் உள்ள கருத்தொற்றுமை-களைப் பற்றியும், எழுதியுள்ள குறிப்புரையும் இவண் நோக்கத்-தக்கது. சிவஞான போதச் சிற்றுரை வழியாக, "சர்வ சக்தியும்

சர்வ வியாபகமும் உள்ள பொருள் ஒன்றுதான் இருக்க முடியுமேயன்றி, ஒன்றிற்கு மேல் இருக்க முடியாதென்பது அறிவுடைய ஒவ்வொருவரும் ஒப்புக் கொள்ளத் தக்க உண்மை'' என்பதை அறிந்ததாகவும், ஆத்திக, நாத்திக முரண்பாடுகளையும், சமயப் பூசல்களையும், கடந்த சமரச ஞான உணர்வு மலர்தல் வேண்டும் என்று உணர்ந்ததாகவும் உரைக்கும் பிள்ளையவர்கள்

''இறைவனையும் உயிரையும் பற்றிப் பேசும் இவ்வருமையான நூலைத் தமிழ் மக்களெல்லாம் படித்தல் வேண்டும்; படிக்க முன்வரல் வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் யான் இவ்வுரையை இயற்றினேன். எனது நோக்கம் இனிது நிறைவேற எல்லாம் வல்ல இறைவன் துணை'' என்று தம் விருப்பத்தினை எடுத்துக்காட்டி நிறைவு செய்கிறார்.

சிவஞான போதத் தெளிவுரை, சிதம்பரனாரின் அறிவுத் தெளிவிற்கும், சமய ஒருமைப்பாட்டுணர்விற்கும், உரை விளக்கத் திறனாற்றலுக்கும், சான்றாக அமைந்துள்ளது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

## திருக்குறள் உரை நலம்

வ. உ. சி. யின் உரைத்திறன் பற்றிய கணிப்பில் அவர் திருக்குறளுக்கு உரை விளக்கங் கண்ட சிறப்பினைக் கூறாது விட முடியாது. அறத்துப்பாலுக்கு அவர் வெளியிட்ட உரைவழி, அவர்தம் உரைப்போக்கினை அறிய முடியும்.

திருக்குறளில் தோய்ந்த உள்ளம் வ. உ. சி.யின் தமிழ் உள்ளம். குறள் வகுப்புகள் நடத்தல், உரை நலங் காணல் என்று ஆயுள் வரை குறளின்பத்திலேயே திளைத்தவர் அவர். சிதம்பரனாருக்குப் பிடித்த அதிகாரங்கள் ஊழ், செய்ந்நன்றி-யறிதல் என்பர். ''ஊழையும் உப்பக்கம் காண்பர்'', என்ற குறளையும், ''எந்நன்றி கொன்றார்க்கும்'' என்ற குறளையும் எல்லாக் கூட்டங்களிலும் தவறாது சொல்லிக்காட்டுவார் என்று பரலி சு. சண்முகசுந்தரம் குறிக்கின்றார்.

வ.உ.சி.யின் திருக்குறள் பற்று, சில சமயங்களில் வெறியாகவும் மாறி, உரை மாறுபாடுகள் கண்டு, தகும் உரை வகுக்கும் அளவில்

நின்று விடாது குறளையே திருத்தும் நிலைக்கும் சென்றுவிடும் என்பதை பி. ஸ்ரீ. நினைவு கூர்கின்றார். நண்பர்கள் அவர் பொன்னான குழந்தை உள்ளத்தைப் புண்ணாக்கக் கூடாதென்று, அவற்றை ஏற்றுக் கொள்வது போல அமர்ந்திருப்பர் என்றும் கூறுகின்றார்.

திருக்குறள் அறப்பாலுக்குச் சிதம்பரனார் செய்திருக்கும் உரை விளக்கம் மிகச் சிறந்த ஒன்றாகும். அறப்பாலில் நாற்பத்து நான்கு புதிய மூல பாடங்களை அவர் கண்டுபிடித்துள்ளார். ஏறத்தாழ எழுபத்தாறு குறட்பாக்களுக்குப் பரிமேலழகர் உரையினின்று முற்றிலும் வேறுபட்டுப் பொருள் உரைக்கின்றார், ''பெண்ணிற் பெருந்தக்க யாவுள'' ''இயல்புடைய மூவர்''. ''விருந்து புறத்ததாத் தானுண்டல்'' முதலிய தொடர்களுக்கு அவர் உரை கூறும் திறன் ஆழ்ந்து உணரத்தக்கது. மற்றவர்களின் கருத்துக்களைக் கண்டிக்க வேண்டியவழி உறுதியோடு கண்டிப்பதையும் இவ்வுரை நூலில் காணலாம்'' என்று எழில் முதல்வன் வ. உ. சி. யின் உரைத்திறனைப் பாராட்டுகின்றார்.[13]

1934இல் திருச்செந்தூர் முருகப்பெருமான் திருமுன்பு கூடிப் பேரவையில் திருக்குறள் விருத்தியுரையினை அரங்கேற்றினார். 9 - 2 - 1935இல் திருக்குறள் அறப்பால் உரை வெளிவந்தது.

## அறப்பால் விருத்தியுரைச் சிறப்பு நலன்கள்

வ. உ. சி. யின் குறள் உரைச் சிறப்பிற்கு சில சான்றுகள் :

1. பாட பேதம் காணல் :

பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு

''பெறிற் பெறுவர்'' என்பது ''பேணிற் பெறுவர்'' என்று பாடமாய் இருந்திருக்கலாம். ஓலைச் சுவடியிலிருந்து மாற்றி எழுதும்போது ''பேணிற் பெறுவர்'' என்ற வார்த்தை ''பெறிற்'' என்று எழுதப்

---

13. எழில் முதல்வன், 'சிதம்பரனாரின் செந்தமிழ்ப் பணிகள்' செந்தமிழ்ச் செல்வி, 1972.

பட்டிருக்கலாம் என்றும் 'பேணில்' என்ற பாடத்தை வைத்துப் படித்தால் பொருள் மிக எளிதாய் விளங்கும் என்றும் உரையாசிரியர் 'பெறிற் பெறுவர்' என்ற வார்த்தையை வைத்துக் கொண்டு சுற்றி வளைத்துப் பொருள் சொல்லுகிறார்கள் என்றும் சொன்னார்கள்'' எனப் பிள்ளையவர்களிடம் நேரில்பாடங்கேட்ட தி. கா. அறம்வளர்த்த நாதன் மிகத் துணிந்து பாட பேதங் காணும் வ. உ. சி. யின் திறத்தைப் பாராட்டுகின்றார்.[14]

## 2. பழைய உரை மறுத்துப் புத்துரை தருதல்

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்

என்ற குறளை, அடைக்கும் தாழ் அன்பிற்கு உண்டோ? (அகத்தினின்றும் வெளிப்படாமல்) அடைத்து வைக்கும் (வலிய) கதவு அன்பிற்கும் உண்டோ? ஆர்வலர் புன்கண் ஈர்பூசல் தரும் - அன்பு செய்யப்பட்டாரது துன்பம் (அக்கதவை) பிளக்கும் தாக்குதலை உண்டாக்கும் என்று பதம் பிரித்துப் பொருள் உரைப்பார். புன்கண்ணீர் என்பதைப் புன்கண் ஈர் என்று பிரித்துப் பொருள் கண்டிருப் பது நோக்கத்தக்கது.

அகல உரையில், இதனை விளக்கும் வகையில், ''ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்'' என்பதற்குத் ''தம்மால் அன்பு செய் யப்பட்டவரது துன்பங்கண்டுழி'' என்று சொற்களை வருவித்து ''அன்புடையார் (கண் பொழிகின்ற) புல்லிய கண்ணீரே (உள் நின்ற அன்பினை எல்லாரும் அறியத்) தூற்றும்'' என்று உரைப் பாரும் உளர். அவர் 'ஆர்வலர்' என்பதற்கு 'அன்பு செய்யப் பட்டார்' என்பதே பொருள் என்பதை அறியார். அன்றியும் 'துன்பம்' என்னும் பொருள் தரும் 'புன்கண்' என்ற சொல்லைப் புன், கண் எனப் பிரித்தும், அடைக்கும் தாழ் உண்டோ? என்ற வினாவிற்கு விடையில்லாதும் பொருள் உரைத்தும் இடர்ப்பட்டனர் என உரை வகுத்துச் செல்லுகையில் அறிவு

---

14. முன்னூல், தி. கா. அறம் வளர்த்த நாதன், ''வ. உ. சி.யின் திருக்குறள் பரப்பும் தொண்டு'' ப. 62.

பூர்வமாகவும், தருக்க நெறியாகவும், காண்கையில் அவர் விளக்கம் சரியாக அமைந்துள்ளது போன்ற உணர்வைப் படிப்பார்க்குத் தோற்றுவிக்கிறது.

### 3. நடைமுறை வாழ்க்கைக்கியையப் பொருள் காணல்

'தோன்றிற் புகழோடு தோன்றுக' என்ற குறட்பாவிற்குப் புகழ் இல்லையெனில் பிறவாமல் சாவதே மேல் என்று அறிவிற்குப் பொருத்தமில்லா உரை கண்ட நாளில், சிதம்பரனார் எத்தொழிலில்ஈடுபடுவாரும் அதனால் புகழ் வரும்படியாகத் திறம் படத் தொழிலாற்ற வேண்டும். இல்லையெனில் அதில் ஈடுபடாமல் இருத்தலே சிறந்தது என்று கருத்துத் தெரிவிப்பார். வாழ்க்கைக்கு ஏற்ற வண்ணம் அறக்கருத்துக்களைப் புரிந்து கொள்ளுதல் நடைமுறை வாழ்வில் அவற்றைக் கடைப்பிடித்தற்கு வகை செய்யும் என்ற உண்மையினை உணர்ந்தவர் வ. உ. சி.

### 4. பரிமேலழகர் உரை மறுத்தல்

'ஈன்ற பொழுதின்' என்ற குறட்பாவிற்குப் "பெண்ணியல்பால் தானாக அறியாமையின் கேட்ட தாயெனக் கூறினார் என்று உரைப்பாரும் உளர். பெண்ணின் இயல்பு தானாக அறியாமை என்பது அறிவிலார் கூற்றெனெ அவ்வுரையை மறுக்க" எனக் கடுமையாகத் தாக்குகின்றார்.

மேற்குறித்த சான்றுகள் சிதம்பரனாரைச் சிறந்த இலக்கிய உரையாசிரியராக இனங்கண்டு பாராட்ட வழி வகுக்கின்றன. பின்னர், தமிழ் ஆய்வுலகில் குறள் உரை வேறுபாடுகளும், ஆய்வுரைகளும் மிகப் பலவாகப் பெருகின. ஆயின், குறள் மக்களிடையே பரவலான செல்வாக்குப் பெறாத காலங்களில், குறளைப் பரப்பியும் உரை விளக்கம் தந்தும், புது விளக்கம், (interpretation) மறுவிளக்கம் (Re interpretation) என்ற இரு வகை ஆய்வு நெறிகளைப் பின்பற்றிப் புத்துரையும், மறு உரையும் கண்டும், தமிழ் இலக்கிய நலன்களைப் போற்றிக் காத்த வ. உ. சி. யின் தொண்டு, குறிப்பாகக் குறள் தொண்டு, தமிழ் ஆய்வு வரலாற்றில் மிகப் பாராட்டிப் பெருமைப்படத்தக்கதாம்,

## கட்டுரையாளர் வ. உ .சி.

''கட்டுரை என்பது எழுதுபவர் ஆளுமைத் திறத்தின் வெளிப்பாடு. கட்டுரையின்சிறப்பு அதன் பொருண்மையில் இல்லை. எதைப் பற்றி வேண்டுமானாலும் எழுதலாம். ஆனால் எழுத்தாண்மைத் திறனுடையானின் சிறப்பில்தான் எழுத்துச்சிறப்பு அமைகிறது'' என்று ஏ. வி. பென்ஸன் கட்டுரைக் கலையின் இயல்பினை எடுத்துரைக்கின்றார்[15]. செய்யுளை விடக் கருத்து விரிவிற்கும் தொடர் அமைப்புகளுக்கும் இடம் தந்து உருவாக்கப்படுவது உரைநடையாகிறது.

''பேச்சுமொழி இருவகை மரபு வழியில் செம்மை எய்து கின்றது. ஒலியொழுங்கு, தாளப்பாங்கு அமைந்திடும் முறை இருவகையிலும் உண்டு. ஆனால், அந்தமும், தாள ஒழுங்குமே மேலாதிக்கம் பெற்று, வாக்கிய அமைப்புப் பின் தங்குமாயின் 'செய்யுள்' எனப்படுகிறது. வாக்கிய அமைப்புக்கே மேலாண்மை சேர்த்து ஓசையமைதியும் தாளப்பாங்கும் பின் தங்குமாயின் 'உரை நடை' எனப்படுகிறது[16] இது படைப்பிலக்கிண மாய்க் கற்பனை நயங்களுடன் அமையும் உரைப் படைப்புகளும் கருத்துவிளக்க அமைவுடன் காரண காரியத் தொடர்பில் இயல்பாய் உருவாகும் உரைப் படைப்புகளும் என இருவகையில் உரை இலக்கிய வகைமை வளர்ச்சியில் இடம் பெறுகின்றது. வ.உ.சி. யின் உரைப்படைப்புகளில், கருத்து விளக்கக் கட்டுரை கள் அவர்தம் கட்டுரை வன்மை நலங் காட்டுவன.

பத்திரிகைகளுக்கு அவ்வப்போது வ. உ. சி. எழுதிய படைப்புக் கட்டுரைகள், பாரதி பற்றி அவர் எழுதிய வரலாற்றுக் கட்டுரை, தமிழ் நூல்கள் பற்றிச் சுதேசமித்திரன் அநுபந்தத்திற்கு எழுதியது எனக்குறிக்கத்தக்க சில கட்டுரை கள் வழி அவர்தம் கட்டுரை எழுத்தாண்மைச் சிறப்புகளைக் காண வழியுண்டு.

ஞான பானுநூலில் வ. உ. சி. யின் பொது அறிவுக் கட் டுரைகள் வெளிவந்தன. இதன் விவரம் வருமாறு :

1. மனிதனும் அறிவும் - ஏப்ரல் **1918**
2. மனமும் உடம்பும் - மே **1918**

---

15. A. C. Benson, Art of Essayist
16. Princeton Encyclopaedia,

3. வினையும் விதியும் - மே 1913
4. அகமும் வாழ்வும் - ஆகஸ்டு 1913
5. மனத்தின் தன்மையும் வன்மையும் - ஆகஸ்டு 1913
6. சுபாவத்தை ஏற்படுத்தல் - அக்டோபர் 1913
7. செய்தலும் அறிதலும் - அக்டோபர் 1913

ஞானபானு - சுதேசமித்திரன் இடையே நிகழ்ந்த சுதேசமித்திரன் தமிழ்நடையைப் பற்றிய கருத்துப்போரில் 'ஞான பானு'வை ஆதரித்துச் சுதேசமித்திரனில் 29 - 10 - 1915 இல் வ. உ. சி. எழுதினார் என்ற பெ. சு. மணி அவர்கள் தரும் பட்டியலும், செய்திக்குறிப்பும் வ. உ. சி. யின் கட்டுரையாக்கம் பற்றி அறிதற்கான ஆய்வு மூலங்களாக அமைகின்றன. ஆயின் 'ஞானபானு' இதழ்கள் கிடைக்காத நிலையில் வ. உ. சி. யின் மேற்குறிப்பிட்ட தன்நிலைக் கட்டுரைகள் பற்றிக் குறிப்பிட வாய்ப்பில்லை. தொடர்ந்து ஆய்வு மாணவர்கள் இப்பணியில் ஈடுபடின், வ. உ. சி. யின் கட்டுரைகள் பற்றிய கணிப்பு முழுமையடையும். அவர்தம் சொற்பொழிவு ஒன்றும் 'எனது அரசியல் பெருஞ்சொல்' என்ற தலைப்பில் அச்சேறியது. அதுவும் இங்கு எடுத்துக் காட்டப்படவில்லை. 'தமிழ்நூல்கள்' 'வி. ஓ. சி. கண்ட பாரதி' தனித்தமிழ் பற்றிய வ. உ. சி. யின் கருத்துப் போர்க்குறிப்புகள் என்று கிடைத்துள்ள தரவுகளைக் கொண்டே அவர்தம் கட்டுரையாக்கத்திறன் விளக்கம் பெறுகிறது. அவருடைய இலக்கிய அறிவு, வாழ்க்கை வரலாற்று இலக்கியத்திற்கான செய்திக் குறிப்புகளை வரிசைப்படுத்தும் நினைவாற்றல், மொழிக் கொள்கை ஆகியவை இக்கட்டுரைகள் வழி பெறப்படும் கருத்துப் பொருண்மைகளாய் அமைகின்றன. வ. உ. சி. யின் படைப்பாக்க நெறித்திறன்கள் பற்றி இறுதியில் மதிப்பிடப்பெறும். அங்கு அவர்தம் நடைநலக் கூறுகள், மொழித் திறன்கள், புனைதிறன் ஆற்றல் ஆகியவை பற்றிய விரிவான செய்திகள் இடம் பெற உள்ளன.

## தமிழ் நூல்கள்

1918 ஆம் ஆண்டு சுதேசமித்திரன் அனுபந்தத்தில் வ. உ.சி. 'தமிழ் நூல்கள்' என்ற தலைப்பில் இலக்கிய வரலாறு போலக்

குறிக்கத்தக்க தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை அறிமுகம் செய்கின்றார். இக்கட்டுரை வ. உ. சி யின் தமிழ் அறிவுப் பரப்பினைக் காட்டுவதுடன், அவரது திறனாய்வுப் பார்வைக்கும் சான்றாக அமைகின்றது. இக்கட்டுரை ஆங்காங்கு செறிப்பாகக் குறிப்பிட்ட இலக்கியம் பற்றிய மதிப்பீடாக அமைந்து, ஆராய்ச்சி வன்மை மிக்க இலக்கிய வரலாறு படிக்கின்ற உணர்வினை அளிக்கின்றது.

கட்டுரை அமைப்பு;

1. இலக்கியம் - விளக்கம்
2. கட்டுரை - நோக்கம்
3. நீதி நூல்கள்
4. தமிழ் இலக்கியப் பட்டியல்
5. சங்க இலக்கியம்
6. பக்தி இலக்கியம்
7. இலக்கண நூல்கள்

என்ற வரிசையில் முறைப்படுத்தப்பட்டு, ஒரு பருந்துப் பார்வையில் தமிழ் இலக்கியங்களைப் பொதுநிலை வகையில் அறிமுகப்படுத்தும் திட்டக்கட்டுரையாக உருவாக்கப் பெற்று, வ.உ.சி.யின் கட்டுரையாக்கத் திறனுக்குப் பெருமை சேர்க் கின்றது.

''தமிழ் என்பது நாவிற்கும் செவிக்கும், உள்ளத்திற்கும்-இனிமையைப் பயக்கும் ஒரு பாஷை. ஈண்டு இலக்கியமென்பது இலட்சியத்தையுடைய நூல்களைக் குறித்து நின்றது. நூல்களின் இலட்சியம் நான்காகும். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. இந்நான்கில் ஒன்றையேனும் ஒன்றிற்கு மேற்பட்டவற்றையேனும் இலட்சியமாகக் கொண்டு கூறப் படுவனவெல்லாம் இலக்கியமாகும். 'இந்நான்கில் ஒன்றை யேனும்' இலட்சியமாகக் கொள்ளாது வெறுங் காலப்போக்கு முதலியவற்றாலான நிமித்தமாகக் கூறப்படுவனவெல்லாம் இலக்கியமாகா; நூலுமாகா'' என்று இலக்கியப் படைப்பின் நோக்கினைத் தெளிவுபடுத்துகின்றார்.

அழிந்து ஒழிந்தவை போக அச்சாயின எல்லாம் பெருமைக் குரியன ஆகிவிடமுடியாது. கிடைத்தவற்றுள் எழில் மிக்க சிலவற்றை எடுத்துகாட்டுவதாகக் குறிக்கின்றார். அரிச்சுவடி, கொன்றைவேந்தன், நல்வழி முதலான நீதி நூல்களை முதலில் சுட்டிக் காட்டுகின்றார். பின்னர் பதினெண்கீழ்க்கணக்கு, பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, காப்பியங்கள், தேவாரம், பெரியபுராணம் தமிழில் உள்ள பாரதங்கள், புராணங்கள், பிரபுலிங்கலீலை இவற்றையெல்லாம் சிறந்தன எனக் குறிப்பிடும் வ. உ. சி. இரகுவமிசம், கைவல்யம், வாசிட்டம், ஈசுவர கீதை, பகவத் கீதை, பிரபோத சந்திரோதயம், ஒழிவிலொடுக்கம், மெய்கண்ட சாத்திரம் எனப் பல்துறை ஞானங்களைத் தமிழில் தந்துள்ள நூல்களையும் சுட்டிக் காட்டுகின்றார்.

தமிழில் பயில வழங்கும் இலக்கண நூல்கள் அனைத்தையும் குறிப்பிடுகின்றார்.

## வ. உ. சி. தரும் இலக்கியக் குறிப்புகள்

இக்கட்டுரை வழி, தமிழ் இலக்கியம் பற்றிய ஆய்வுக் குறிப்புகள் சிலவற்றை அறிய முடிகிறது. வ. உ. சி. காலத்தில் பரவலாக அறிமுகமாகிச் செல்வாக்குப் பெற்றிருந்த நூல்களின் சிறப்புகள் பற்றியும் அறிய வாய்ப்புக் கிடைக்கிறது.

1. குறுந்தொகை முதல் 382 செய்யுள்களுக்குப் பேராசிரியர் உரைகண்டதாகவும், மற்றை 20 செய்யுள்களுக்கு நச்சினார்க் கினியர் உரை கண்டதாகவும் உள்ள குறிப்பினைச் சுட்டுகின் றார். அவ்வுரை இதுகாறும் வெளியிடப்படவில்லை என்ற உண்மையையும் கூறுகிறார். இந்நூல் புத்துரை ஒன்றுடன் அச்சிடப்பட்டுள்ளது என்று வ. உ. சி. குறிக்கும் பதிப்பு, குறுந் தொகைக்குத் திருக்கண்ணபுரம் சௌரிப் பெருமானரங்கனார் கண்ட உரைப்பதிப்பாகும். இது 1915 ஆம் ஆண்டு வெளி வந்தது.

2. உதயண குமார காவியம் இன்னும் அச்சிடப்படவில்லை. இதன் ஏட்டுப்பிரதிகள் ஜைனர் சிலரிடம் உண்டு என்ற செய்தியைத் தருகிறார்.

3. வ. உ. சி. சுட்டும் 'இரகுவம்மிசம்' யாழ்ப்பாண நல்லூர் அரச கேசரி இயற்றியது. வடமொழி 'இரகுவம்மிசத்தை' முதனூலாக உடையது என்று தரும் குறிப்புவழி காளிதாசரின் இரகுவம்சத்தைத் தழுவி இலங்கையில் நூல் ஒன்று வெளிவந்த செய்தி புலனாகின்றது.

4. "தமிழுடனே சைவ மதத்தைக் கற்க விரும்புவாரும் சிவப்பேற்றை அடைய விரும்புவோரும்" படிக்கத்தக்கவை தேவாரம், திருவாசகம் என எடுத்துக்காட்டி இதுவரை, சம்பந்தர் பதிகங்கள் 384, நாவரசர் பதிகங்கள் 311, சுந்தரர் பதிகங்கள் 100 ஆகியவை அச்சிடப் பெற்றுள்ளன என்ற கணக்குத் தருகிறார்.

5. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தைப் பற்றிச் சொல்லும் பொழுது "அது பிறமத நிந்தை செய்யாதது. தமிழ் மறைகளுள் ஒன்று" எனக் கூறுவர்.

6. ஈசுவர கீதை - சிவபெருமான் சனற்குமாரன் முதலிய முனிவர்களுக்கு அருளிய வடமொழிக் கீதையின் மொழிபெயர்ப்பு-மொழி பெயர்த்து விருத்தப்பாக்களால் பாடியவர் தத்துவராயர் என்று குறிக்கின்றார்.

பகவத் கீதையைத் தமிழில் மொழி பெயர்த்தவர் சிபட்டர் என்றும், பிரம கீதையை மொழி பெயர்த்தவர் தத்துவராயர் என்றும் எடுத்துக் காட்டுகின்றார்.

7. இலக்கண நூல் வரிசையில் வ. உ. சி. யின் வெறுப்புக்கு ஆளான நன்னூல் பற்றிய குறிப்பு நோக்கத்தக்கது. இதுபற்றி முன்னர் கண்டோம். நேமிநாதத்தை "எழுத்து, சொல் இவற்றை மிகத் தெளிவாக விளக்குவது. பிறர் உதவியில்லாமல் சிரமமுமில்லாமல் எடுத்துச் சொல்லிக் கற்க விரும்புவோர் கைக்கொள்ளத்தக்கது" என்று பாராட்டுகின்றார்.

வீரசோழியத்தை ஐந்திலக்கணம் கூறும் அழகான நூல் என்று பாராட்டிவிட்டு, 'ழகாரம் டகரமாய்த்' திரியும் விதியொன்று உள்ளத்தக்கது என எடுத்துக் காட்டுகிறார்.

யாப்பருங்கலம் காட்டும் மேற்கோள் செய்யுட்களைக் குறிப்பிட்டு விட்டு, ''இம்மேற்கோள்கள் முற்காலத் தமிழ் மக்கள் எவ்வளவு மேம்பட்ட தமிழறிவையுடையவராயிருந்தனர் என்பதையும், எத்தகைய பெருமை வாய்ந்த தமிழ் நூல்களெல்லாம் அழிந்து போயினவென்பதையும், படிப்போருக்குக் காட்டிக் கண்ணீரைக் கவரும் திறத்தது'' என்று உணர்ச்சிவசப்பட்ட நிலையில் வ. உ. சி. எடுத்துரைப்பது அவர்தம் உள்ளார்ந்த தமிழ்ப் பற்றையும், இலக்கியச் செல்வங்களைப் போற்றிக் காக்க வேண்டும் என்ற ஆர்வத்தையும் காட்டுவதாகிறது.

தொல்காப்பியம் பற்றி இறுதியில் எடுத்துரைத்துக் கட்டுரையை நிறைவு செய்கின்றார். இந்நூலைப் பற்றிச் சொல்லும்போதே வ. உ. சி. மனம் எல்லையற்ற மகிழ்ச்சியால் துள்ளுகின்றது.

''இக்காலத்து வழங்கும் முத்தமிழ் மூத்த இலக்கணங்களுக்கும் முதனூலாக நிற்பது............இக்காலத்து வழங்கும் இலக்கியங்களின் இலக்கணங்களையெல்லாம் கொண்டு நிற்பது. இலக்கியங்களில் வள்ளுவர் முப்பால் ஒப்புயர்வற்று விளங்குவது போல இலக்கணங்களில் ஒப்புயர்வற்று விளங்குவது. இக்காலத்துப் பேரளவிற் கேட்கப்படுவதும் உரை மேற்கோள்களாக எடுத்தாளப்பட்ட ஒரு சில சூத்திரவளவிற் காணப்படுவதுமான அகத்தியரின் அகத்தியத்தை உணரவிடாமற் செய்வது. விருப்போடு கற்கவும், கேட்கவும், பாடஞ் செய்யவும் தகுதியான செந்தமிழ்ச் சூத்திரங்களை யுடையது'' என்று கற்கக் கற்க அறிவும் இன்பமும் பயக்கும் தொல்காப்பிய நலன்களைப் பாராட்டி மகிழ்ந்து, அதன் உரை வரலாற்றுக் குறிப்புகளைத் தந்து தாம் அச்சிடவிருக்கும் இளம்பூரணர் உரை பற்றிய செய்தியையும் அறிவிக்கின்றார்.

'தமிழ்நூல்கள்' என்ற இக்கட்டுரை வழி சில உண்மைகள் புலனாகின்றன. வ. உ. சி. என்ற அரசியல் அறிஞர், புறத்தே விடுதலைப் போரின் முதன்மைத் தலைவராய்ப் போராடிக் கொண்டிருக்க, அகத்தே வ. உ. சி. என்ற தமிழறிஞர் தமிழ் இலக்கண இலக்கியச் சிந்தனைகளில் தம்மை மறந்து ஈடுபட்டு வந்திருக்கின்றார். வழக்கறிஞர் தொழிலாற்றி வாதம் புரிந்து கொண்டிருந்த வேளைகளிலும், தமிழ்நூல்களைப் படித்துணர்ந்து மகிழும் இலக்கியத் தொழிலையும் இடையறாது போற்றி

வந்துள்ளார் என்பதையும் புரிந்து கொள்ள முடிகின்றது. சிறை வாழ்வின் ஓய்வு வேளைகள், தமிழ் உணரும் அறிவுப் பொழுதுகளாய் பயனுடன் மலர்ந்தன. எனவே புறத்தே செயல் வீரராய்ப் போராடிக் களைத்து, நன்றியில்லாத் தமிழ்ச் சமுதாயத்தின் புறக்கணிப்புக்கு ஆளான வேளையில் உயிர்த்துணையாய் வந்து தமிழ் அவரை ஆட்கொண்டதில் வியப்பில்லை என்ற உண்மை இந்த ஒரு கட்டுரை வழியாகவே நிலைநாட்டப்பட்டு விடுகிறது.

## ''வி. ஓ. சி. கண்ட பாரதி''

''அமரகவி சி. சுப்பிரமணிய பாரதியாரைப் பற்றி எனது தந்தையார் வி. ஓ. சிதம்பரம் பிள்ளையவர்கள் பல ஆண்டுகட்கு முன் எழுதிய குறிப்புகள்தான் 'வி. ஓ. சி. கண்ட பாரதி' என்ற நூலாக மலர்ந்துள்ளது'' என்று **1946**இல் இந்நூலைப் பதிப்பித்த பிள்ளையவர்கள் திருமகனார் வ. உ. சி. சுப்பிரமணியம் முன்னுரையில் உரைக்கின்றார். தினமணி உதவி ஆசிரியராக அவர் பணியாற்றிய நாளில் இதனை வெளியிட்டுள்ளார்.

இச்சிறு படைப்பு வழியாகச் சமகாலச் சான்றோர் பற்றிய குறிப்புகளைத் தொகுத்து வைத்து வாழ்க்கை வரலாற்று இலக்கியம் உருவாக்குவதற்கான வரலாற்று உண்மை மூலங்களைக் காத்துப் போற்றிய வ. உ. சி. யின் வரலாற்று உணர்வும், தம் காலக் கவிஞர் மீது கொண்ட மதிப்பும், நட்பும் நன்கு புலனாகின்றது. பாரதியார் வாழ்க்கை நிகழ்வுகள் சிலவற்றிற்கான சான்றாதாரங்கள் உண்மைத் தன்மையுடன் நமக்குக் கிடைக்கின்றன.

வ. உ. சி. யும் பாரதியும் உழுவலன்பர்கள். மாமனும் மருகனும் என உறவு கொண்டு பழகியவர்கள். வ. உ. சி. பாரதியின் கவித்துவ ஆற்றல் பற்றி எல்லையற்ற மதிப்பும் பெருமையும் கொண்டிருந்தார். பாரதியோ வ. உ. சி. யின் அரசியல் தலைமையிலும், செயலாற்றலிலும் மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டவர். இருவர்தம் தந்தையரும் நண்பர்கள் என்ற நிலையில் இவர்கள் நட்பு பின்னர் வலுப்பெற்றுத் தொடர்ந்தது.

'இந்தியா' இதழின் ஆசிரியராகப் பாரதி பணியாற்றிய நாளில் 1906 ஆம் ஆண்டு வ. உ. சி., சென்னையில் அவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. "இந்த முதல் சந்திப்பும் பேச்சும் என்னைச் சோழனாகவும் அவரைக் கம்பனாகவும் நான் நினைக்கும்படி செய்தது" என்று பெருமிதத்துடன் பேசுகின்றார் வ. உ. சி.. பின்னர் அடிக்கடி இவர்கள் சந்தித்து நெருங்கிப் பழகி ஒன்றியதில், "சுப்பிரமணிய பாரதியும் நானும் சோழனும் கம்பனுமாயிருந்தது மாறிக் கடைசியில் மாமனும் மருகனும் ஆயினோம்" என்ற உறவு நெருக்கத்தினை அன்புடன் பாராட்டுகின்றார்.

வ. உ. சி. பாரதியுடன் இணைந்து பழகிய காலங்களில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அவர் எடுத்துக் கூறுவதன் வாயிலாகப் பாரதியார் பற்றிய பல சரித்திர உண்மைகளை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

## "மாஜினியின் பிரதிக்கினை"

"பேரருட் கடவுள் திருவடியாணை" என்று தொடங்கும் 'யௌவன இத்தாலி' சங்கத்தில் மாஜினி செய்து கொண்ட பிரதிக்கினை பற்றிய பாடலைப் பாரதி பாடுவதற்குக் காரணம் வ. உ. சி. யாவார். மாஜினியின் பிரதிக்கினையை ஆங்கிலத்தில் வ. உ. சி. யிடம் படித்துக் காட்டிய போது, சொக்கிப் போன வ. உ. சி. அதனைத் தமிழ்ப்பாட்டாக மொழி பெயர்த்துத் தரச் சொன்னாராம். உடன் பாரதி பாடியதுதான் அப் பாட்டு என்று குறிப்பிடுகின்றார் வ. உ. சி.

## சூரத் காங்கிரஸ்

1907 இல் சூரத்தில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புடைய காங்கிரஸில் கலந்து கொள்ளுவதற்கான பணிகளைச் செய்யும் போது, "அவ்வேலையை வெற்றிகரமாக நிறைவேற்றி வைப்பதன் பொருட்டு நான் அரசனாகவும் மாமா மந்திரியாகவும் மாறினோம்" என்று தங்கள் வீட்டு உறவு, அரசியல் உறவாக மாற்றம் கொண்டதை வேடிக்கையாகக் குறிப்பிடுகின்றார் வ. உ. சி.

இம்மாநாட்டுக் குழப்பங்களையும், உட்பூசல்களையும், கட்சி பிளவு பட்ட நிலையையும் விரிவாகப் பேசும் வ. உ. சி., ஸ்ரீ அரவிந்தர் தலைமையில் பிரிந்து நின்ற காங்கிரஸ் கட்சியினர் கூடிப் பேசுகையில், அம் மாநாட்டில் பாரதியிடம் தாம் கண்ட சிறப்பு ஒன்றைக் குறிப்பிட்டுப் பாராட்டுகின்றார்.

''இந்த மகாநாட்டில் பாரதி மாமாதான் முன்னின்று வேண்டுவன செய்தார். பல்வேறு மாகாணத்தவர்களுடனும் அவரவரது பாஷையில் பேசி அவர்களைத் தம் வழிப்படுத்தினார். மாமாவுக்கு ஆங்கிலம், சமஸ்கிருதம், ஹிந்துஸ்தானி, தெலுங்கு முதலிய பல பாஷைகள் தெரியுமெனப் பின்னால் அவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன்'' என்ற செய்தி அறியத் தக்கது.

இந்த மாநாட்டில் வ. உ. சி. யும் இணைந்து, ஈருடலும் ஓருயிருமாக வேலை செய்தது கண்டு இவர்களை 'இரட்டையர்' என்றே உடனிருப்போர் கேலி செய்தனராம்.

## வ. உ. சி. கலெக்டர் வின்ச் துரை பற்றிய பாடல்கள்

1909 இல் வ. உ. சி. முதன் முறையாகச் சிறைப்பட்ட போது, அவரை வந்து பார்த்துக் கலங்கிய பாரதி, 'நாட்டி லெங்கும் ஸ்வதந்திர வாஞ்சையை நாட்டினாய்' என்று வின்ச் கூறுவது போலவும், 'சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே, துஞ்சிடோம்' என மறுமொழி வ. உ. சி. பகர்வதாகவும் புனைந்து பாடித் தந்தாராம். புலவர் பாடும் புகழுக்குரிய சிதம்பரனாரின் பெருஞ் சிறப்பினை இந்நிகழ்ச்சி எடுத்துரைக்கக் காண்கிறோம்.

## புதுவையில் பாரதி தரிசனம்

சென்னையை விட்டுப் பாரதியைப் புதுவை செல்லத் தூண்டியவர்களில் ஒருவர் வ. உ. சி. பின்னர் அங்குச் சென்று பாரதியுடன் தங்கி மகிழ்ந்தார். இங்குதான் பாரதியிடம் 27 பாஷைகளில் பத்திரிகை நடத்த வேண்டுமென்று தம் ஆசையை வ. உ. சி. வெளியிட்டாராம். பாரதி அது பற்றி நகையாடிப் பேசிய போது, வ. உ. சி. க்கு மாமா மீது கோபம் வந்ததாம்.

'பாரதி' ஊரை ஆள ஒரு பத்திரிகை போதும்! உலகை ஆள எவ்வளவு பத்திரிகைகள் வேண்டும்'' என்று கூறிச் சினந்தாராம். ஆனால் 'மாமாவின் மணிவாக்குத் தான் பலித்தது. பத்திரிகைத் திட்டம் பொய்த்தது, என்கிறார் வ. உ. சி.

## கப்பல் கம்பெனி துரோகம்

வ. உ. சி. தோற்றுவித்த கப்பல் கம்பெனி நசிந்த போது எதிரிகளிடமே அதனை விற்ற சுதேசிகளின் துரோகத்தைப் பாரதியிடம் வ. உ. சி. கூறிக் கலங்கிய போது ''சிதம்பரம், மானம் பெரிது! மானம் பெரிது! ஒரு சில ஓட்டைக்காசுக்களுக்காக எதிரியிடமே அக் கப்பலை விற்றுவிட்டார்களே, பாவிகள். அதைவிட அதைச் சுக்கல் சுக்கலாக நொறுக்கி வங்காள விரிகுடாக்கடலில் மிதக்க விட்டாலாவது என் மனம் ஆறுமே! இந்தச் சில காசுகள் போய்விட்டாலா தமிழ்நாடு அழிந்துவிடும்? பேடிகள்!'' என்று எவ்வளவோ கடுஞ்சொற்கள் கூறினார். ''என் செய்வது? தமிழ்நாடு உயரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். புதுவையில் நான் என்னுடன் கொண்டு வந்தவை புத்தகங்கள், படுக்கைகள் மட்டுமல்ல! மாமாவின் இந்த மணிவாசகமும் தான்'' என்று வ. உ. சி. தம் வாழ்வில் ஆற்றிய செயற்கருஞ் செயலின் முடிவு அவரை நிலைகுலையச் செய்தபோது பாரதி தந்த ஆறுதலை நினைந்து போற்றுகின்றார்.

## கடைசியாகக் கண்டது

சென்னையில் பெரம்பூரில் வாழ்ந்துவந்தபோது பாரதியார், சாமியார் ஒருவருடன் வந்து தங்கிய நிகழ்ச்சியினை வ. உ. சி. நினைவுகூர்ந்து வருந்துகிறார். ''பாரதியாரிடம் பழைய உற்சாகத்தையும், முக மலர்ச்சியையும் கண்களின் வீரப் பொலிவினையும் கண்டிலேன். பேச்சு ஒரு மாதிரியாக இருந்தது'' என்று குறிப்பார் வ. உ. சி. சுதந்திரக் கனலை மூட்டிய கவிஞன், கஞ்சாக் கனலுக்கு இரையாகிக் கொண்டிருந்த காலம் அது. நேரில் கண்டு வருந்தி வ. உ. சி. கேட்டபோது ''அதுவா மோக்ஷ லோகத்திற்குக் கொண்டு போகும் ஜீவாம்ருதம்'' என்றாராம் பாரதி. ''அறிவின் சிகரமான மாமா, மக்கு சாமியார்'' வலையில் வீழ்ந்தது பற்றிக் கூறி வருந்துகிறார் வ. உ. சி.

## மாமர மறைந்தார் மாண்பு மணத்தது.

பாரதியின் மறைவு பற்றிக் கேள்வியுற்ற சிதம்பரனார் ''மாமா இவ்வுலகை விட்டு மறைந்து விட்டாலும் அவரது தேசிய கீதங்களும், மற்றைய பாடல்களும், கதை கட்டுரைகளும் இவ்வுலகம் உள்ளளவும் நிலைத்துப் புகழ் வீசும் என்பதில் ஐயமில்லை. அவருடைய பெயர் தேசாபிமானிகளுடைய சரிதத்தில் மட்டுமல்லாது கவிதா மேதைகளின் சரிதத்திலும் வைரம் என ஒளிவிடும்'' என்று பாராட்டி அவர் பாடல்களின் அருமை பெருமைகளைக் கூறத் தமக்கு ஆற்றல் இல்லை எனவும், அவகாசமும் இல்லை எனவும் கூறி, ''கவிச் சக்ரவர்த்தி சுப்ரமண்ய பாரதியின் பாடல்களையே நம் தேசத்து மக்கள் என்றென்றும் படித்துவர வேண்டும் என்று கேட்டுக் கொள்றேன்'' என்று தம் நூலை நிறைவு செய்கிறார்.

அரசியல் அறிஞரும், கவியரசரும் கொண்ட நெருங்கிய நட்பின் விளைவாக மலர்ந்த வாழ்க்கை வரலாற்று இலக்கியம் இந்நூல். மகாகவி பாரதியைப் புரிந்து கொள்ளவும், அவர் வழி வ. உ. சி. யை அறிந்து கொள்ளவும், இந்நூல் வகை செய்கிறது. வாழ்க்கை வரலாற்று இலக்கிய வரிசையில் இந்நூலிற்கும் ஓர் இடமுண்டு.

வ. உ. சி. அவர்களின் கட்டுரையாக்கங்கள், தமிழ் இலக்கிய வரலாறு, வாழ்க்கை வரலாறு என்ற முத்திறப் பகுதிகளின் வளர்ச்சி நிலையில், குறிப்பிடத்தக்க இடம் பெறும் தகைமையன என்ற அளவில் அவர்தம் கட்டுரைத் தொண்டினைப் பாராட்டி மகிழலாம்.

## மொழிபெயர்ப்பாளர் வ. உ. சி.

வ. உ. சி. அவர்களின் மொழிபெயர்ப்புப் பணி, அவர்தம் தமிழ்த்தொண்டின் முடிமணியாகத் திகழ்வது. அரசியல் வாழ்வில் வீரமுரசு கொட்டி, ஆர்த்தெழுந்த போராட்ட வீரரின் ஆன்மீக நாட்டத்தையும், அறநெறிசார் வாழ்வு நோக்கத்தையும் காட்டுகின்ற நிரந்தரச் சான்றுகளாய் அவர் மொழி பெயர்த்த நூல்கள் அமைகின்றன. ஆங்கில மொழி தமிழ்ப் பண்பாட்டில் ஊடுருவி கலப்படப் பண்பாட்டுச்சூழலை உருவாக்குகின்ற

போக்கினை விரும்பாத வ. உ. சி., தமிழர் எண்ணத்தில், பேச்சில், எழுத்தில் ஆங்கில மொழிச் சொற்களின் ஆட்சியை எதிர்த்தார். ஆயின் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள், நல்வாழ்வுச் சமுதாய மேம்பாட்டிற்குத் துணை செய்யவல்லன எனக் கண்டுணர்கையில் அவற்றைத் தமிழுக்குக் கொணர்ந்து, அதன்வழி மக்கள் பயன்பட வேண்டுமென விரும்பினார். "தமிழையும் ஆங்கிலத்தையும் எனக்குக் கற்பித்து என்னை மேம்படுத்திய என் ஆசிரியர்களுக்கு யான் நன்றியறிதலுள்ளவனாய் இருக்கிறேன்" என்று ஒரு முறை குறிப்பிடுகின்றார் வ. உ.சி. தமிழ் வளர்ச்சிக்கும், உலக அறிவு பெற்றுயர்தற்கும் ஆங்கிலக் கல்வி தேவை என்பதை அறிந்தவர். எனவே அந்நியமொழி மேலாண்மையினை எதிர்ப்பது வேறு ; அந்நிய மொழி இலக்கியச் செல்வங்களை அறிவதால் பெறுகின்ற அறிவு வளர்ச்சி வேறு என்ற தெளிவான சிந்தனை படைத்த வ. உ. சி. தம்மைப் பெரிதும் கவர்ந்த ஜேம்ஸ் ஆலனின் நூல்கள் சிலவற்றை மொழி பெயர்த்துத் தமிழ் மொழிபெயர்ப்புத் துறைக்குப் பெரிதும் தொண்டாற்றியவராகிறார்.

அரசியல் வாழ்வில் முனைப்புக் கொண்ட வ. உ. சி. யின் தேசிய உள்ளம், தமிழ் இலக்கியங்களில் நெக்குருகி நின்றது போலவே, ஆன்மத் தேடலுக்கும் ஒழுக்க வாழ்வுக்கும் அடிப்படையான அறக்கோட்பாடுகளை வகுத்த ஜேம்ஸ் ஆலன் நூல்களிலும் கரைந்து கசிந்து நின்றது. அரசியல் அறிஞரின் ஆழ்மனத்தில் அடங்கிக் கிடந்த ஆன்ம விசாரணைகள், ஆலன் நூல்களைக் கற்கத் தொடங்கிய காலம் தொடங்கி மெல்லென அசையிடத் தொடங்கின. 1905ஆம் ஆண்டிலேயே ஆலன் நூல்களைத் தாம் படிக்கத் தொடங்கியதாக வ. உ. சி. குறிப்பிடுவார். சிவஞான போதம், கைவல்ய நவநீதம், தமிழ் இறைப்பற்று இலக்கியங்கள் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டு கற்று மனநலம் வாய்க்கப் பெற்ற சிதம்பரனாரை, மெய்ஞ்ஞானியாய்த் திகழ்ந்த ஜேம்ஸ் ஆலன் கவர்ந்ததில் வியப்பில்லை. உள்முகமாக உணர்ந்து உயிராற்றலைப் பெருக்கி, ஆன்மீகப் பெருவாழ்வடைதற்கான வழிதுறைகளை, அரசியல் போர்ச் சூழல்களுக்கிடையிலும் வ. உ. சி. யின் அகமனம், முறைப்படுத்திக் கொண்டிருந்திருக்கிறது. சிறைவாழ்வில் பெற்ற ஓய்வு அகமன ஆய்விற்குப் பெரிதும் துணையாயிற்று. ஆய்வு நிறைவு

பெற ஆலன் உறுதுணையாயினார். சிறை மீண்டு, அரசியல்உலகி னின்றும் விலகி வாழத் தலைப்படுவதற்கும் ஜேம்ஸ் ஆலனின் அறக்கருத்துக்கள் ஒருவகையில் காரணமாய் அமைந்திருத்தல் வேண்டும். மெய்ப்பொருள் நாட்டத்தை ஊட்டவல்ல அவர்தம் நூல்கள், போர்க்குணம் கொண்ட வ. உ.சி. யை அருளாளராக மாற்றியிருக்க வேண்டும். மெய்ஞ்ஞானியாய் உருப்பெற்று, இன்பத்தையும், துன்பத்தையும், வெற்றியையும் தோல்வியையும், ஒட்டுறவையும், புறக்கணிப்பையும் ஒன்றாய் ஏற்க வல்ல சமநிலைப் பார்வையினை அவர்க்கு அளித்திருக்கவேண்டும். இது ஒரு பண்புநல மாற்றப் புரட்சியாகும். அகமனத்து விளைந்த மறுமலர்ச்சியாகும். இந்த மனநிலை மாற்றமே அவரை நிலையான மனவுணர்வுடைய ஞான வீரனாய் உருவாக்கியது எனலாம்.

சமகால அரசியல் அறிஞர் இருவர் வாழ்வில் இம்மாபெரும் மாற்றத்தினைக் காண்கிறோம். இவற்றிற்கான அடிப்படைக் காரணிகளின் ஒற்றுமைத் தன்மையும் நம்மை வியப்பி லாழ்த்துகின்றது. அலிப்பூர் வெடிகுண்டு வழக்கில் சிறை புகுந்த அரவிந்தர், பிபின் சந்திர பாலருக்குத் தடையை மீறி விழாக்கண்டு சிறை புகுந்த வ. உ. சி. ஆகிய இருவரும், சிறையினின்று விடுதலை பெற்ற ஏறக்குறைய சமகாலத்தில் (அரவிந்தர் 1909, வ. உ. சி. 1912) முற்றாக அரசியல் துறவு பூண்டு திசை மாறினர். அரவிந்தர் புதுவையில் ஆசிரமம் கண்டு ஆன்ம ஞானத் தேடலில் யோகியானார். வ. உ. சி. இலக்கிய உலகிலும், மெய்ஞ்ஞான உலகிலும் புகுந்த அறிஞராய், மெய்யுணர்வாளராய் மாறினார்.

அரவிந்தரின் சமய அனுபவங்கள் மேலோங்கி தேசிய உணர்வினைப் புறந்தள்ளின. ஓராண்டு சிறையில் அவர் கடைப்பிடித்த யோகப் பயிற்சி அவருள் மாற்றத்தை ஏற்படுத்தியது. தம் யோகப் பயிற்சிக்குத் தடையாக அரசியல் செயல்கள் அமையுமென்று அவற்றை விட்டு விலகியதாக ஒரு முறை குறிப்பிடுகின்றார்[17]. யோகப் பயிற்சி, அரசியலுக்கு ஒரு சமயச்சாயலைத் தந்தது. இறுதியில் அரசியலுக்கு ஒரு

17. F. Feys, 'Sri Aurobindo Yoga, Religion, Mysticism, P. 16.

மாற்றாக சமயம் அமைந்தது. அரசியல் போராட்ட வழி அடைய வேண்டிய முடிவுகள், ஆன்மீகத் தேடலின் முடிவுகள் இவற்றிற்கிடையிலான வேறுபாடு அவர்க்குப் புரிந்தது. அதனால்தான் அலிப்பூர் சிறையிலிருந்து விடுதலை பெற்று 1909இல் உத்தர்பாராவில் அரவிந்தர் நிகழ்த்திய வரலாற்றுச் சிறப்புடைய சொற்பொழிவு, சமயஞ் சார்ந்த பாவ மன்னிப் பாயிற்று. தம் அகமனச் சாதனையைப் பேச்சாக்கினார். யோக நிலையினின்றும் சமய உணர்வில் படிந்து, அதன்வழி மெய்யுணர் ஞானியாகத் தம்மை வெளிப்படுத்தியவர் அரவிந்தர்

"தெய்வீக ஞான வாழ்வு என்பது அகமன வாழ்வையே குறிக்கும். புற வெளிப்பாடு என்பது அகமன உந்துதல்தான். உள் மனத்து ஞான ஒளி இல்லையெனில் புறநிலையிலும் அது இல்லை என்பது பெறப்படும்"[18] இந்த மெய்ஞ் ஞான வாழ்வை நாடிய அரவிந்தர், அரசியல் வாழ்வைத் துறந்ததில் வியப் பில்லை. நிலையற்ற அரசியல் வாழ்வைக்காட்டிலும் நிலையான ஆன்மீக நாட்டம் கொண்ட ஞான வாழ்வுதன்னை, உணர்ந்து, தன்னை இழந்து அவனில் கலக்கும் இறைமை வாழ்வாகக் கனிந்து ஒளிவீசும் என்ற நிலைத்த உண்மையைக் கண்டுணர்ந்த அரவிந்தர் புறச்சார்பு விடுத்து, ஞானத்தைச் சார்ந்த கதை போலத்தான் வ. உ. சி. யின் பிற்கால வாழ்வும் அமைந்ததை நம்மால் ஒப்பிட்டு உணர முடிகிறது.

வ. உ. சி. யின் அகமன மாற்றங்கள் யோகத்தால் உருவாக வில்லை. நூல்களின் பயிற்சியால் விளைந்தவை. இந்த மாபெரும் மாற்றத்தைத் தம்முள் ஏற்படுத்திய ஜேம்ஸ் ஆலன் நூல்களைத் தமிழில் தர வ. உ. சி. முன்வந்தது இயல்பே. தாம் பெற்ற ஞானப் பேரின்பத்தைச் சமுதாயம் பெற வழி வகுத்தார். தமிழ் இலக்கியங்களும், ஜேம்ஸ் ஆலன் நூல்களும் அவர்க்கு அடைக்கலம் தந்தவை என்பதைக் காட்டிலும், இளம் வயது தொடங்கி நீறுபூத்த நெருப்பாய்க் கனன்று கொண்டிருந்த ஆன்மத்தேடல் உணர்வு,

---

18. Louis Dupre, The other Dimension, A search for the meaning of Religions Attitudes (Doubleday, Newyork, 1972) Quoted by J. Feys. S. J. Sri Aurobindo, Yoga, Religion, Mysticism, P. 50.

புறவாழ்க்கைப் போக்குகளால் தணிந்து, தணந்து கிடந்தது. வாய்ப்புக் கிடைத்தவுடன், பற்றிக் கொண்டது. திசை திருப்பமும் மன மாற்றமும் தமிழ் இலக்கிய உலகிற்கு ஒப்பற்ற அறிஞரைத் தந்தது. புறச்சார்புகளின் பாதிப்பின்றி, அரசியல் உலகம் தம்மைப் புறக்கணித்ததே என்ற ஆற்றா மையும் இன்றி, கர்மயோகியாய் உழன்று வ. உ. சி. ஞானத் திருவுருவாய் மாறி, ஆன்ம நலமும், பலமும் தரும் அருந்தமிழ் ஆய்வுகளிலும், ஜேம்ஸ் ஆலனின் மெய்ஞ்ஞானக் கல்வியிலும் தம்மை முழுமையாய் ஈடுபடுத்திக் கொண்டு உயர்ந்தார் என்பதே உண்மையாகிறது.

ஜேம்ஸ் ஆலன் (1864-1912) விக்டோரியா காலத்தவர் ஆங்கில இலக்கிய வரலாற்றில் நாம் அறிந்த மெய்யுணர்வாளர் களாகிய பிளேக், டன், பிரௌனிங் போலக் குறிப்பிடத்தக்க நிலையில் எண்ணப்படும் மெய்யுணர்வாளர் என்று கூறமுடியாது. எனினும் தத்துவ ஞானியாயும், மெய்யுணர்வாளராயும் தம்மை வெளிப்படுத்திய ஜேம்ஸ் ஆலன், தம் நூல்கள் வழிச்சிறந்த உளவியல் அறிஞராகக் காட்சியளிக்கிறார். சாக்ரடீஸ், பிளேடோ, தாந்தே, ஷேக்ஸ்பியர், ஓர்ட்ஸ் ஒர்த் என்று வரிசைப் படுத்தப்பெறும் சிந்தனையாளர்கள், இலக்கியப் படைப்பாளிகள் போன்றோரின் பாதிப்பினையும், தாக்கத்தையும் ஆலன் கருத்துக்களில் இனங் காணமுடியும்.

கீழைநாட்டுத் தத்துவ ஞானிகளின் கருத்தோட்டங்களில் ஈடுபட்டவர் ஆலன். பகவத்கீதை, புத்தர் கோட்பாடுகள், லாவோட்ஸேயின் தத்துவங்கள் ஆகியவற்றின் சாயல்களையும் பாதிப்புகளையும் அவர் நூல்களில் கண்டுணரலாம். விவிலியக் கோட்பாடுகளையும் மேற்கோள்களையும் விரிவாகப்பயன்படுத் துகின்றார். உயர்ந்த வாழ்வியற் கோட்பாடுகளை நடைமுறைப் படுத்தி மக்கள் அனைவரும் எளிமையாகப் பின்பற்ற வேண் டும் என்பது ஆலனின் நோக்கமாகும்.

செல்வத்தையும், உலகியல் இன்பங்களையும் முறையான அறவழியில் பெறுதற்கான நெறிகளை வகுத்துரைக்கின்றார். 'உயர்வாழ்வு' வாழ்வதற்கான வழிகளைக் காட்டுகின்றார். சமயச் சார்பின்றி, ஆன்ம ஈடேற்றம் அடைதற்கான அடிப் படை வாழ்வியல் நெறிகளை எடுத்துரைப்பதில் ஆலனின் தனிச் சிறப்பு அமைகிறது.

"(ஜேம்ஸ் ஆலன்) நம் நாட்டு நூல்களில் அவருக்கிருந்த விருப்பம் வேறுஎந்த நாட்டு நூல்களிலும் இல்லை. அவர் "கீழ் நாட்டாரே, மெய்ஞ்ஞானக் கருவூலம்" என்று அடிக்கடி கூறு வதுண்டு. அவர் வாக்கினின்றும் வந்த ஒவ்வொரு வார்த்தை யிலும் நமது நாட்டு நீதியும் மதக்கோட்பாடும் கலந்திருக் கும். ஒழுக்கம் ஒன்றே மெய்யுணர்வுக்கும் மற்றைய சகல உயர்ந்த பதவிகளுக்கும் மார்க்கம் என்பது அவருடைய சித் தாந்தம்[19] என்று ஆலன் படைப்புகளின் அடிப்படைத் தத் துவத்தை விளக்கும் வ. உ. சி., தாம் அவர் நூல்களை மொழி பெயர்க்கக் கிடைத்த வாய்ப்பு பற்றிப் பேசுகின்றார். நெடு நாளாக ஆலனைத் தமிழுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற விருப்பம் நிறைவேறும் வண்ணம் சிறைவாழ்வு அமைந்தது என்கிறார். கோயம்புத்தூர் சிறையில் முடங்கிக் கிடந்தபோது "உயிர்களுக்கு உதவுதலே கடவுளை ஆராதித்தல் என்னும் கொள்கையுடைய எனக்கு இங்ஙனம் கிடைத்த அவகாசம் எனது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள அவன் அருளால் உண்டான நல்ல காலமாகத் தோன்றியது. ஆதலின், அக் காலத்தை இதன் முதனூலைத் தமிழில் மொழிபெயர்ப்பதிலும் திருக்குறளின் முதற்பாகமாகிய அறப்பாலை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதிலும் உபயோகப்படுத்தித் திருப்தியடைந்தேன்" எனக் கூறி மகிழ்கின்றார்.[20]

வ. உ. சி. யின் மொழிபெயர்ப்புப் பணி இருவகைப் போக் கில் அமைந்துள்ளது. தமிழிலிருந்து ஆங்கிலத்திற்குத் தமிழ்ச் செல்வங்களை அறிமுகப்படுத்தல், ஆங்கிலச் செல்வங்களைத் தமிழுக்குத் தருதல் என்ற வகையில் அவர் தம் திறக்குறள் அறப்பால் ஆங்கில மொழிபெயர்ப்புக் கிடைக்காத நிலையில் அதுபற்றி எடுத்துரைக்க வாய்ப்பில்லை. எனவே இங்கு ஆங் கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்த ஜேம்ஸ் ஆலன் நூல்களைப் பற்றிய மொழி பெயர்ப்புச் சிறப்புக் கூறுகள் விளக் கம் பெறுகின்றன.

---

19. வ. உ. சிதம்பரம் பிள்ளை; மனம் போல் வாழ்வு; ப. 10.

20. மேற்படி ப. 15.

'அகமே புறம்', 'மனம் போல வாழ்வு', 'வலிமைக்கு மார்க்கம்' என்ற மூன்று நூல்கள் பற்றி வ. உ. சி. குறிப்பிடுகையில் "கலாசாலைகளுக்குப் பாடபுத்தகங்கள் விதிக்கும் (Text Book Committee) பாடபுத்தக சபையார் யான் அச்சிட்டு வெளிப்படுத்திய மேற்கூறிய மூன்று நூல்களையும் பாடபுத்தகங்களாக ஏற்றுக் கொண்டனர்" என்றும், அதனால் பெற்ற ஊக்கத்தில் "உடனே இந்நூலைப் (சாந்திக்கு மார்க்கம்) பூரணமாக்கி இப்போது அச்சிட்டு வெளியிடுகிறேன்" என்று "சாந்திக்கு மார்க்கம்" வெளியிடப்பட்டதன் சூழலையும் விளக்குவார்.

"மனம் போல வாழ்வு" பதின்மூன்று பதிப்புகளையும் "அகமே புறம் ஆறு பதிப்புகளையும், "வலிமைக்கு மார்க்கம்" ஒன்பது பதிப்புகளையும் கண்டிருக்கின்றன. வ. உ. சி. அவர்கள் வாழ்நாளிலேயே இந்நூல்கள் பரவலாகப் போற்றப்பட்டுப் பதிப்புகள் பல கண்டுள்ளதற்குச் சான்றாக 'மனம் போல வாழ்வு "இதன் முதற்பதிப்புப் பிரதிகள் இரண்டாயிரமும், இரண்டாம் பதிப்பு, மூன்றாம் பதிப்புப் பிரதிகள் இரண்டாயிரமும் செலவாகி, இதனை நான்காம் முறை பதிப்பிக்குமாறு பலர் விரும்பிக் கோரி நின்றதொன்றே இதன் அருமையையும் பெருமையையும் நன்கு விளக்கும்"என்று த. வேதியப்பிள்ளை 'மனம் போலவாழ்வு' நூலின் நான்காம் பதிப்புச் சிறப்புப் பாயிரத்திற்கு எழுதிய முன்னுரை அமைகிறது.

"ஜேம்ஸ் ஆலன் என்பவரின் புத்தகங்களை 'மனம் போல வாழ்வு, 'அகமே புறம்' என்ற அழகான தலைப்பெயர்களுடன் இவர் சிறையிலே தமக்குக் கிடைத்த ஒய்வு நேரங்களில் மொழிபெயர்த்திருக்கிறார். பிள்ளையவர்கள் மொழி பெயர்த்தவை என்று இந்த ஜேம்ஸ் ஆலன் புத்தகங்கள் மீது எனக்கு ஒருவகைப் பற்று உண்டு" எனச் சொல்லிப் பசராட்டுவார் பி. ஸ்ரீ. 21.

"அப்போது வ. உ. சி. சிறைச்சாலையில் இருந்தார். அங்கே அவர் ஜேம்ஸ் ஆலன் எழுதிய நூல்கள் சிலவற்றை மொழி பெயர்த்துக் கொண்டிருந்தார். அந்தக்காலத்தில்

21. பி. ஸ்ரீ. V. O. Chidambaram Centenary Sovenir 1972. P. 14.

எனது தந்தையார் ஜேம்ஸ் ஆலனின் ஆங்கில நூல்களை வாங்கி அனுப்புமாறு எனக்கு எழுதினார். நானும் அவற்றை வாங்கி விரைவில் படித்துவிட்டு அனுப்பினேன். இப்படி என் தந்தைக்கு ஆலன் மீது ஏற்பட்ட ஈடுபாடு தனியாகத் தோன்றியதா, அல்லது சிதம்பரம் பிள்ளையின் முயற்சியைக் கேள்வியுற்று எழுந்ததா என்பது எனக்கு நிச்சயம் இல்லை. அந்நூல்கள் முதலில் மொழி பெயர்த்து எப்பொழுது வெளி வந்தன என்பதும் நினைவில்லை. வ. உ. சி. ஒரு மொழி பெயர்ப்பாசிரியர் என்று அவர்மீது எனக்குப் பிற்காலத்தில் (நானும் ஒரு மொழி பெயர்ப்பாளனாக இருந்து வரும் காரணத்தால்) மதிப்பு நிறைய ஏற்பட்டது'' என நினைவு கூர்வார் பெ. நா. அப்புஸ்வாமி. 22

மேற்குறித்த இருவர்தம் நினைவுக் குறிப்புகள் வாயிலாக இரு பெரும் உண்மைகள் பெறப்படுகின்றன. வ.உ. சி. வாழ்ந்த நாளில் ஜேம்ஸ் ஆலன் நூல்களுக்குத் தமிழகத்தில் பரவலான செல்வாக்கு இருந்திருக்கிறது. வ. உ. சி. யின் மொழி பெயர்ப்புகள் அக்கால இளைஞர்களைக் கவர்ந்திருக் கின்றன. வ. உ. சி. மொழி பெயர்த்த காரணத்தாலேயே ஒரு வகையில் ஜேம்ஸ் ஆலனை அறிய வேண்டும் என்னும் ஆர்வமும், அவர் நூல்களுக்கு மதிப்பும் ஏற்பட்டிருக்கிறது என்றும் அறிய முடிகிறது.

அந்நியர் பிடியில் சிக்குண்டு உள்ளத்தாலும் உடலாலும் அடிமைப்பட்டுக் கிடந்த சமுதாயம் மன அமைதியும், அறிவு ஆற்றலும், செயல்திறனும் பெற்று எண்ணிய எண்ணியபடி எய்தித் திண்ணிய வாழ்வு வாழ்வதற்கு ஜேம்ஸ் ஆலன் காட்டும் ஒழுக்க நெறிகள் வழிகாட்டும் என்ற உறுதியில் வ. உ. சி. அவர் நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கின்ற அருஞ் செயலை மேற்கொண்டபோது, அவர் கையாண்ட மொழி பெயர்ப்புத் திறன்களைத் தொகுத்துக் காண்பது, வ. உ. சி. என்ற மொழிபெயர்ப்பாசிரியர் ஆளுமைத் திறனை மதிப்பிட வழிவகுக்கும்.

22. மேற்படி பெ. நா. அப்புசாமி ப.24.

## மொழிபெயர்ப்புத் திறன்

மொழிபெயர்ப்பு ஒரு வகைக் கலை. இரு மொழிகளை இணைக்கும் பாலம். சிந்தனைப் பரிமாற்ற வாயில். "சுய படைப்பை விட மொழி பெயர்ப்புப் பணி கடினமானதாகும். மற்றொருவருடைய கருத்தைத் தன்வயமாக்கிக் கொண்டு, தன்னை இழந்து மீண்டும் மற்றொருவராகவே மாறிக் கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டும். சுதந்திரமான நிலை சுய படைப்பாகும். கட்டுப்பாடுடன் கூடிய நிலை மொழிபெயர்ப்பாகும். ஆதலால் வரம்புக்குட்பட்ட நிலையில் தன் சிந்தனைகளை ஒரு முகப்படுத்தி மூல நூலாசிரியரின் கருத்தை மட்டுமே வெளியிட வேண்டும்"[23] என்பார் மு. க. ஜகந்நாத ராஜா. மூலத்தைத் தம் மொழிக்குப் பெயர்க்கையில், அது 'மொழி பெயர்ப்பு' (Translation) 'மொழியாக்கம்' (Transcreation) 'மூலமொழி எழுத்தில் தருதல்' (Transliteration) மூலக்கருத்தும், சொந்த விளக்கமும் கொண்டமையும் தழுவல் வகை (Free Translation and Rendering) என்று எந்தவடிவிலும் அமையலாம்.

வ. உ. சி. யின் மொழிபெயர்ப்புகளில், மொழிபெயர்ப்பு, மொழியாக்கம், தழுவல்நிலை என்ற முத்திறக் கூறுகளையும் காணலாம். அவரே தம் முன்னுரைகளில் தம் மொழிபெயர்ப்பு பற்றிய தனிக்கூறுகளைச் சொல்லிக் காட்டுகின்றார்.

1. "ஜேம்ஸ் ஆலனின் "அகத்திலிருந்து புறம்" என்று பொருள்படும் பெயரினையுடைய ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதனைக் கற்போர் எளிதாகக் கொள்ளுமாறு இதன் முதனூலிலுள்ள 'உயர்தர வாழ்வு' என்னும் ஓர் அதிகாரத்தை இதில் நான்கு சிறிய அதிகாரங்களாக அமைத்துள்ளேன்" என்று 'அகமே புறம்' என்ற நூலின் முன்னுரையில் வ. உ. சி. குறிப்பிடுவார். "இதனை நம்மவர் விருப்பொடு கொள்ளுமாறு இதன் முதனூலாசிரியனின் கருத்துக்கட்கிணங்கிய தமிழ் நூலாசிரியர்களின் முதுமொழிகள் சில ஆங்காங்குச் சேர்க்கப் பட்டுள்ளன" என்பது இந்நூலுக்குச்சிறப்புப் பாயிரம் வழங்கிய ஸ்வாமி சகஜானந்தன் தரும் விளக்கம்.

---

23. மு. க. ஜகந்நாத ராஜா, மொழி பெயர்ப்பிலக்கியம் மொழி பெயர்ப்பு - பண்பும் பயனும் ; ப. 101.

மொழிபெயர்ப்புப் பணியில் வ. உ. சி. இங்கு இருவிதப் புதுமைகளைப் புகுத்தியுள்ளார். மூல நூலில் பெரும்பிரிவினைச் சிறுபிரிவுகளாக வகுத்தது ஒன்று. மற்றொன்று தழுவல் முறையில் தம் கருத்துகளைப் பொருந்தும் வகையில் இணைப்பது.

2. "சாந்திக்கு மார்க்கம்" முகவுரையில் "இந்நூல் முதல் நூலின் சரியான மொழிபெயர்ப்பு. முதல் நூலிலுள்ள பாக்களைத் தமிழ்ப் பாக்களாக்கி இந்நூலில் ஆங்காங்குச் சேர்த்துள்ளேன், எனச் சுட்டுகின்றார். நான்கு நூல்களிலுமே ஆங்கில மூலத்தில் அமைந்த செய்யுட்களைத் தமிழிலும் அவ் வடிவிலேயே மொழிபெயர்த்துத் தந்துள்ள சிறப்பினைக் காணலாம். மொழிபெயர்ப்பாளர் வ. உ. சி. 'கவிராயர்' என்பதும் எண்ணத்தக்கது. எனவே இயல்பாக மூலநூல் கவிதைப் பகுதிகளைத் தமிழுக்கும் அம்மூல வடிவிலேயே தருதல் எளிதாயிற்று.

3. 'வலிமைக்கு மார்க்கம்' பாயிரத்தில் காணப்படும் குறிப்புகள் கருதத்தக்கன.

"முதனூலின் ஐந்தாவது அதிகாரத்தின் தொடக்கத்தில் கண்ட ஆங்கிலக் கதையை நம்மவரில் பெரும்பாலோர் கேட்டிருக்கமாட்டார்களாதலால் அக்கதையின் பெயரினை இந்நூலில் குறிப்பதால் பயனில்லையென்று கருதி அதற்குப் பதிலாகப் 'பாரதக்கதை' என்று குறித்துள்ளேன்".

"முதனூலின் கருத்துக்களை நம்மவர்கள் எளிதில் உணருமாறு, சிற்சில இடங்களில், சில சொற்களைச் சேர்த்தும் சில சொற்களை விடுத்தும், இம் மொழிபெயர்ப்பைச் செய்துள்ளேன்".

"முதனூலில் கண்ட ஆங்கிலச் செய்யுட்களைத் தமிழ்ச் செய்யுள்களாக்கி இதன்கண் சேர்த்துள்ளேன்".

"இந்நூலில் நான் உபயோகித்துள்ள சில சொற்கள் குறிக்கும் பொருள்களை இதன் VII வது பக்கத்தில் குறித்திருக்கிறேன்."

"நான் இதுவரையில் பார்த்துள்ள இலக்கியங்களில் காணப்படாத 'எஃது' என்பது போன்ற ஒன்றிரண்டு சொற்களைப் புதியன புகுதலாக இதில் உபயோகித்துள்ளேன்".

இங்கு வ. உ. சி. கடைப்பிடிக்கும் நெறிமுறைகள் மொழி பெயர்ப்புக் கலைக்கென இன்று வகுக்கப்பட்டுள்ள நெறிகளுக்கு மாறாக இருக்கலாம். ஆயின் தமக்கென ஒரு பாதையை வகுக்கும் வ. உ. சி. தம் வரையறைகளைத் தெளிவாகவும் எடுத்துரைத்துச் செல்லும் முறை அவர்தம் சத்திய உள்ளத்தை வெளிப்படுத்திக் காட்டும். இவர் உருவாக்கும் புது மரபுகள் எல்லாம் பொருள் எளிமையையும், தெளிவையும் மையமாகக் கொண்டவை. தம் மொழிபெயர்ப்பு மக்களைச் சென்று அடைய வேண்டும் என்பதே அவர்தம் தலையாய நோக்கம்.

4. 'மனம் போல வாழ்வு' பாயிரத்தில் வ. உ. சி. கூறுவார் :

"இதனை முதனூற்குச் சற்றேறக்குறைய சரியான மொழி பெயர்ப்பென்றே சொல்லலாம்".

"முதனூலில் மேற்கோளாகக் காட்டியுள்ள செய்யுள்கள் எத்தனை அடிகள் கொண்டுள்ளனவோ, அத்தனை அடிகளில் தமிழ்ச் செய்யுள்களை அமைத்துள்ளேன்"

"மற்றைய உரை மேற்கோள்களுக்கு மேற்கோள் அடையாளங்கள் இட்டுள்ளேன்."

"சில இடங்களில் முதலாசிரியரது கருத்துக்களை நன்கு விளக்குதற் பொருட்டுச் சிற்சில சொற்களைக் கூட்டியும் குறைத்தும் மொழிபெயர்த்திருக்கிறேன்."

"இந்நூலின் அரிய பொருள்களைத் தமிழுலகம் நன்குணர்ந்து கைக்கொண்டொழுகுதல் வேண்டும் என்ற எண்ணமே என் மனத்தின்கண் முற்பட்டு நின்றமையின் நமது நாட்டில் வழங்கும் வடமொழிகளை இதில் மிகுதியாக உபயோகிக்கிறேன்."

சிறந்த ஆய்வு நெறிகளை மொழிபெயர்ப்புத் துறையில் பின்பற்றியிருக்கும் வ. உ. சி. யின் திட்டப்பாங்கு, செய் நேர்த்தி, உண்மைத் தன்மை ஆகியவை அவர்தம் அறி வாற்றலின் செய்திறம் காட்டுவன. வழக்கறிஞராகிய வ. உ. சி. யின் படைப்புக்களில் எல்லாம் தருக்கநெறிச் சார்பும், முன் வரைவு நெறி அமைப்பும் இணைந்த ஒருவகை ஒழுங்கினைக் காணமுடிகிறது.

5. தம் மொழி பெயர்ப்புகளைக் கற்பிப்பதற்கு உரியார், கற்பிக்கும் முறை, கற்றற்குரியார், கற்கும் முறை ஆகியன பற்றியும் தெளிவாகக் குறிப்பிட்டுவிடுகிறார்.

"தமிழறிஞர் பலரும் இந்நூலைக் கற்பிப்பதற்கு உரியர்". "இதில் கூறப்பட்டுள்ள பொருள்களுக்குப் பொருத்தமான மேற்கோள்களை நமது தமிழ் நூல்களிலிருந்து எடுத்துக்காட்டி இதன் பொருள் கற்போரது உள்ளத்துட் புரியுமாறு செய்தலே இதனைக் கற்பிக்கும் முறை".

"அறத்தையோ, பொருளையோ, இன்பத்தையோ வீட்டையோ அடைய விரும்பும் தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் இதனைக் கற்பதற்கு உரியர்".

மேற்கூறிய முன்னுரைச் செய்திகள் வ. உ. சி. யின் மொழிபெயர்ப்புப் பணியின் தனிநிலைத் தன்மைகளைத் தெளிவுபடுத்துகின்றன. கீழ்வரும் முறையில் அத்தனிநிலைப் போக்குகளை முறைப்படுத்தலாம்.

1. பெரிதும் நேரடி மொழிபெயர்ப்பு முறை.
2. சில இடங்களில் தழுவல் அமைப்பு.
3. மொழியாக்க முறைமை.
4. இடையில் தம் கருத்துக்களை இணைத்தல்
5. செய்யுள் மூலங்கட்கு அவற்றின் அடி அமைப்பும் பிறழாத் தமிழ்ச் செய்யுள் வடிவ ஆக்கங்கள்.
6. அன்றைய சமுதாயச் சூழலுக்கிடையே வழக்கில் உள்ள வடசொற்களை மிகுதியும் பயன்படுத்தல். பொருள் புலப்பாட்டு நோக்கில் இது அமைதல்.

7, ஆற்றல் வாய்ந்த செறிவுடைய, சிறு சிறு தொடர்களை மிகுதியும் உருவாக்கியிருத்தல்.

8. பொருத்தமான, பொருள் பொதிந்த தலைப்புகள் இட்டிருத்தல்.

9, பிறமொழி நூலைப் படிக்கின்ற உணர்வு ஏற்படாதவாறு தமிழ்ப்படுத்தியிருக்கும் தனித்திறன்.

அடிமை மண்ணில் அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறு மதியும் கொண்டு, மொழியாலும், பண்பாட்டு முரண்பாடுகளாலும், சுயநல வேட்கையாலும், நிலை தடுமாறித் தவித்த தமிழ்ச் சமுதாயம் அறிவும் ஆற்றலும் பெற்று, உறுதியுடன் வாழ்வினை எதிர்கொண்டு, குழப்பமற்ற அமைதியான மனநலச் செம்மை வழிப்பட்ட சீர்மை வாழ்வு பெறுவதற்கு ஜேம்ஸ் ஆலன் நூல்கள் வழிவகுக்கும் என்ற உறுதியான நம்பிக்கையின் அடிப்படையில் வ. உ. சி. இப்பணியை மேற்கொண்டிருக்கிறார். அடிமனத்தில் மெய்யுணர்வாளராய் உண்மை நாடும் ஒருபெரும் வேட்கையில் ஈடுபாடு கொண்டிருந்த பிள்ளையவர்களுக்குக் கையில் அகப்பட்ட மூலிகையாய் ஆலன் நூல்கள் துணை நின்றன. தாம் பெற்ற மன அமைதியினைத் தமிழுலகம் பெற வேண்டும் என்ற அருள்நோக்கில் இம்முயற்சியில் ஈடுபட்டுப் பெருவெற்றி கண்டுள்ளார். கருத்துப்புரட்சி விளைவிக்க வல்ல இந்நூல்கள் வழித் தமிழ் இலக்கிய உலகில் மொழி பெயர்ப்புத் துறை விளங்கவும் வ. உ. சி. முயன்றுள்ளமை கண்கூடு.

இனி, ஜேம்ஸ் ஆலன் உயர்வாழ்வு அடைதற்கான வழிமுறைகளைக் காட்டுவதைச் சில சான்றுகள் தந்து விளக்கலாம். வ. உ. சி. யின் எளிய மொழிபெயர்ப்பு நலன்களையும் இவற்றினூடே காண்பதும் பொருந்தும்.

துன்ப நெருப்பால் சுடப்பட்டுத் துக்கப் புகையால் உலகம் மூடிக் கிடப்பதற்குக் காரணம் என்ன? இதனின்றும் விடுபடுதற்கான வழி யாது? ஜேம்ஸ் ஆலன் ஏதுக்களாலும், எடுத்த மொழிகளாலும் சோதித்துப் பார்க்கிறார். எங்கும் காரணம் காண்கிலார் வழியும் அறிகிலார். அகத்தை விடுத்துப் புறத்துத் தேடினால் எங்ஙனம் கிடைக்கும்? இறுதியில் அகத்துள் ஆழ்ந்து, நுணுகிப் பார்க்கையில் காரணமும், 'பரிகரிக்கும் மருந்தும்' ஒருங்கு காணக் கிடைக்கின்றன.

## மனம்போல வாழ்வு

மனிதனது நினைப்புக்குத் தக்கவாறு அவனுடைய வாழ்வு அமைகின்றது. மனிதன் எதை நினைக்கின்றானோ அதுவே ஆகிறான். இதுதான் வாழ்வின் உயிர்நிலைத் தத்துவம். எண்ணம் போல் வாழ்வு என்பது அடிப்படை உண்மை.

"செயல்கள் நினைப்பின் மலர்கள். இன்பமும் துன்பமும் அதன் கருவிகள். இவ்வாறாக மனிதன் தன் சொந்த வேளாண்மையில் தித்திப்பும் கசப்புமுள்ள கனிகளை உண்டு பண்ணிக் கொள்கிறான்" [24] 'மனம் போல வாழ்வு' (As a man thinketh) என்ற பகுதியில் காணப்படும் உண்மை இது.

இதைத் தொடர்ந்து ஆலன் மனிதன் நினைப்பின் மூலமும் முடிவும், வடிவும் வெளிப்பாடுமாக அமைகிறான் என்பதை நிலைநாட்டக் கவிதை ஒன்றை மேற்கோளாகப் படைத்துத் தருகிறார் வ. உ. சி. அவர்கள். இதனைத் தமிழ்க்கவிதை வடிவிற்குக் கொண்டு வரும் சிறப்பினைப் பாராட்டுதற் குரியதாகிறது.

Thought in the mind hath made us what we are
By thought was wrought and built If a man's mind
Hath evil thoughts, pain comes on him as comes
The wheel the ox behind .........
...... .. if one endures
In purity of thought, joy follows him
As his own shadow - Sure "

மனமெனும் நினைப்பே நமையாக் கியது
நினைப்பால் நாம்நம் நிலைமை உற்றமை
ஒருவன் நினைப்புக் கருமறம் பற்றிடின்
எருதுபின் உருளைபோல் வரும்நனி துன்பமே
ஒருவன் நினைப்புத் திருஅறம் பற்றிடின்
தன்னிழல் போல மன்னும் இன்பமே

---

24. வ. உ. சிதம்பரம் பிள்ளை, 'மனம் போல வாழ்வு' ப. 18. "Act us the bloosom of thought and joy and suffering are its fruits. Thus does a man garner in the sweet and bitter fruitage of his own husbandary (James Allen, As man thinketh)

'Evil thoughts' என்பதை 'நினைப்புக் கருமறம்' Purity of thought' என்பதை நினைப்புத் திருஅறம்' என மொழி பெயர்ப்பது வ. உ. சி. யின் சொல்லாக்கத் திறன் காட்டும்.

மனிதன் எப்பொழுதும் தலைவனே. நல்ல நினைப்புகள் அவனை ஆளுகையில் உலகம் நன்மை பெறுகிறது. அவனும் உயர்கிறான். தீய நினைப்புகளுக்கு அடிமைப்பட்டு வலி யிழக்கையில் தானும் கெட்டு உலகிற்கும் கேடு விளைவிக் கின்றான். நினைப்பிற்கேற்ற வாழ்வு என ஜேம்ஸ் ஆலன் விளக்கிச் செல்லும் பகுதிகளுக்கு மேலும் தெளிவு உண்டாக்க வ. உ. சி., 'விரை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளையாது', 'எட்டியிலே கட்டி மாம்பழம் பழுக்காது', 'தினை விதைத்தவன் தினையறுப்பான்; வினை விதைத்தவன் வினையறுப்பான்' என்று பழகுதமிழ்ப் பழமொழிகளை இடையில் இணைக்கின்றார்.

"ஹிம்சிக்கப்பட்டவனது பலஹீனத்திலும், ஹிம்சித்தவனது துர்வினியோகமான சக்தியிலும், விதியின் செயலை ஒரு பூரண அறிவு காண்கின்றது; இவ்விரண்டு நிலைமைகளாலும் உண்டா கிற துன்பத்தைப் பார்த்து ஒரு பூரண அன்பு ஒன்றன் மீதும் குற்றங் காண்பதில்லை. ஹிம்சிக்கிறவன், ஹிம்சிக்கப் படுகிறவன் ஆகிய இருவரையும் ஒரு பூரண அருள் மார்போடு அணைத்துக் கொள்கிறது" (மனம் போல வாழ்வு, ப. 45) என்ற பகுதி இயல்பான வடசொல்லாட்சிக்குத் தகுந்த சான்றாகிறது. சுயாதீனன், மனோதிருஷ்டிகளும், மனோ சிருஷ்டிகளும், மோக்ஷ சாதனங்கள், பிரபஞ்சம், நியதி என்று நெடுகிலும் வடசொல் வரவு தமிழ்நடை அமைப்பு சிதம்பரம் பிள்ளையின் எழுத்துக் களின் தனி இயல்பு எனக் கொள்ளலாம்.

'வலிமைக்கு மார்க்கத்தில்' துன்பக்கடலைக் கடக்கும் நெறிகள் வலியுறுத்தப்படுகின்றன. 'உங்களுடைய நினைப்புக் கள் எவையோ அவையே நீங்கள்' என்ற ஆலனின் கோட் பாட்டினை விளக்க, "நமது நிலைமைகள் எல்லாம் நமது நினைப்புக்களையே ஆதாரமாகக் கொண்டுள்ளன; அவை களெல்லாம் நமது நினைப்புக்களாலே செய்யப்பட்டுள்ளன" என்ற புத்த தத்துவம் எடுத்துக் காட்டப்படுகிறது. 'கடவுள் உலகம் நம் அகத்துள்ளேயே இருக்கிறது. தன்னை ஆளும் ஆன்மாவின் மந்திர சக்தியைத் தவிரப் புறப்பொருள்களில்

யாதொரு சக்தியுமில்லை என்பதை நாம் உணர வேண்டும். ''நினது உள்ளம் நல்குபிம்பம் நின்னுலகம்'' என்று ஆலன் கூற்றினை வ. உ. சி. வழிமொழிகின்றார்.

''வெறுப்பு வெகுளி, பொறாமை, காமம், பேராசை இவை யெல்லாம் எரிகின்ற நெருப்புகள். இவற்றை யார் தொட்டாலும் எரிதற்துன்பங்களை அனுபவித்தே தீரவேண்டும்''.

''நீங்கள் உங்களுக்கு அடிமையாயிருப்பதை விடுங்கள்; அப்போது உங்களை அடிமைப்படுத்தும் சக்தி வெளியிடத்திலும் இருக்கமாட்டாது. நீங்கள் உங்களை வெல்லுங் காலையில் நீங்கள் பிரதிகூலமான நிலைமைகளை யெல்லாம் வென்று விடுவீர்கள்''.

''தன்மீது தான் இரக்கங் கொள்ளுதலைப் (Self - pity) பார்க்கினும் தாழ்ந்ததும் அவமதிப்பைத் தரத்தக்கதும் ஆன்மாவைக் கெடுக்கத் தக்கதும் வேறொன்றுமில்லை''.

''நீங்கள் பிறர்மீது குறை கூறுகிறதை விட்டு, நீங்கள் உங்களையே குறை கூறத் தொடங்குங்கள்''. ஒழுக்கமில்லாத செல்வந்தன் உண்மையில் தரித்திரனே''. ''நீங்கள் ஆரோக்கியத்தை அறிய விரும்புவீர்களாயின் நீங்கள் கஷ்டமில்லாமல் வேலை செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும். ஆத்திரப்படுதலும் கவலைப்படுதலும் அநாவசியமான காரியங்களைப் பற்றித் தொல்லைப்படுதலும் சரீர உடைவை உண்டு பண்ணுதலாம்''.

''சிறிய வேலைகளைக் குறைவறச் செய்து முடிப்பவருக்குப் பெரிய வேலைகள் நிச்சயமாக வந்து சேரும். எப்பொழுதும் நீங்கள் உறுதியாக மேல்நோக்கிச் சென்று கொண்டிருங்கள் ஒருபோதும் நீங்கள் கீழ்நோக்கிச் செல்லாதீர்கள்''.

''எவன் தன்னை ஆள்கிறானோ அவன்தான் மற்றவரை அடக்கியாளுவதற்குத் தகுதியுள்ளவன்''.

''கற்பதற்கு முந்துங்கள்; ஆனால் இரப்பதற்குப் பிந்துங்கள்'' (வலிமைக்கு மார்க்கம்).

அகவலிமையையும் புறவலிமையையும் ஒருங்கு வளர்த்து உயரக் கடைப்பிடிக்க வேண்டிய நன்னெறிகளை ஆலன் எளிமையாகச் சொல்லிக் காட்டுவதை மூல அழகு குன்றாது வ. உ. சி. தொடுத்து உரைக்கும் நயத்திற்கு, மேலே குறிப்பிட்ட பகுதிகள் சான்றுகளாவதைக் கண்டு மகிழலாம்.

'அகமே புறம்' என்ற நூலில் மனநலங் காணும் வழிமுறைகள் வகுத்துரைக்கப்படுகின்றன.

''கருங்கல்லில் வேலை செய்கிற பொறுமையுள்ள சிற்பியை போன்று, சரியான வாழ்க்கையை அடையக் கோருகிற மனிதன் தனது மனமாகிய கருங்கல்லிலிருந்து தனது மிகமிக அருமையான கனவுகளின் இலட்சியத்தை அடையும் வரை ஒவ்வொரு நாளும் சிறிது சிறிதாக வேலை செய்து வர வேண்டும்''.

உயர்தர வாழ்வின் அடிப்படை ஒழுக்கமே, ''ஒழுக்க மார்க்கமே ஞானமார்க்கம்''.

''நினைப்பிலும் சொல்லிலும் செயலிலும் மேம்பட்டு வாழ்தலே உயர்தர வாழ்வு''.

''ஒருவன் உறங்குவதற்காகப் படுக்கைக்குச் செல்ல வேண்டுமேயன்றிச் சிந்திப்பதற்காகப் படுக்கைக்குச் செல்லுதல் கூடாது. அவன் சிந்திப்பதற்காகவும் வேலை செய்வதற்காகவும் படுக்கையை விட்டு எழுந்திருக்க வேண்டுமேயன்றி உறங்குவதற்காகப் படுக்கையை விட்டு எழுந்திருத்தல் கூடாது''.

''நிக்ஷ்காமியகருமம், அசையாத நடுநிலைமை, அளவற்ற பொறுமை'' இவை வாழ்வின் மூலாதார ஒழுக்கங்கள்.

''வாழ்க்கை தொடர்ச்சியான பல பாடங்களைக் கொண்டிருக்கின்றது. அவற்றைக் கற்பதில் சிலர் ஊக்கமுடையவராய் இருக்கின்றனர். அதனால் அவர் விரைவில் தூயராகவும், அறிஞராகவும், சுகிகளாகவும் வளர்கின்றனர். மற்றையோர் அவற்றைக் கற்பதில் மந்தமுடையவராயிருப்பதோடு அவற்றைக் கற்க முயலாமலும் இருக்கின்றனர். அதனால் அவர் தீயராகவும் மடையராகவும் துக்கிகளாகவும் முதிர்கின்றனர்''.

"முதலில் யுத்தம்; முடிவில் வெற்றி; முதலில் வேலை; முடிவில் ஓய்வு; முதலில் எளிமை; முடிவில் வலிமை; தொடக்கத்தில் தாழ்ந்த வாழ்வு; யுத்தத்தின் சந்தடி; யுத்தத்தின் குழப்பம்; இறுதியில் உயர்ந்த வாழ்வு, மௌனம், சாந்தி" (அகமே புறம்).

## சாந்திக்கு மார்க்கம்

இவ்வுயர் வாழ்விற்குரிய வழிமுறைகளில் பின்னும் சிந்திக்க வேண்டியவை தியானம், சுயநயமற்ற அன்பு, இறையுடன் ஐக்கியமாதல், தொண்டு செய்தல் ஆகியவையாம். தடையற்ற அறிவு, மாசற்ற ஞானம், இறவாத அன்பு இவற்றின் வழியே பூரண சாந்தி அனுபவம் கிட்டும் என்பதைச் 'சாந்திக்கு மார்க்கம்' நமக்குத் தெளிவுபடுத்துகின்றது. இந்நூலின் பொருட்பிழிவாய் அமைவதை ஆலன் ஒரு செய்யுள் வழிக் காட்டுவார். வ. உ. சி. அதனை இந்நூலின் தொடக்கத்திலேயே அழகான செய்யுள் வடிவில் நமக்குத் தருகிறார்.

அன்பின் ஒளிநின் அகத்துட் புகவிடின்
இன்பம், அமைதி, எழில்சாந்தி - ஒன்றும்;
சுயநயத்தை முற்றும் துறந்துவிடின், என்றும்பர
நயத்தைப் பெற்றுயர்வாய் பார்த்து

எனவே அன்பின் வழியது உயிர் நிலை. அதன்வழி பெறுவது அமைதி. அமைதி வாழ்வே இறைமை வாழ்வு. இறைமை வாழ்வே என்றும் வேண்டுவது. வையத்து வாழ்வாங்கு வாழும் முறை அறிதலால், வானகத்துத் தெய்வ வாழ்வு நம் வசப்படுதல் ஒரு தலையாகிறது.

வாழ்வியல் கோட்பாடுகள், அடிப்படை ஒழுக்கங்கள் மெய்ப்பொருள் உண்மைகள் இவையெல்லாம் இன, மொழி, சமய எல்லைகட்கு அப்பாற்பட்ட பொதுமைக் கருத்துப் பொருண்மைகள். எந்த மொழியில் அவற்றைப் புலப்படுத்தினாலும், அடிப்படையாக அமையும் நோக்கம் மயர்வற மதிநலம் பெற்று உயர்வுற வாழ்தலே. ஜேம்ஸ் ஆலனின் கோட்பாடுகள் மனிதநல மேம்பாட்டுக் கோட்பாடுகள். அவர் நெறிமுறைகள் மானுடம் பயனுற வாழ்வதற்கான நெறிமுறைகள். அவர் காட்டும் மெய்ஞ்ஞானம், வாழ்வுடன் இணைந்த உயர்ஞானம்.

புத்தரும், வள்ளுவரும், ஏசுவும் மானுடம் உய்யக் காட்டிய தத்துவப் பொருண்மைகளின் சாற்றினை வடித்து ஆங்கிலத்தில் அமுதமாய்த் தந்தார் ஆலன். தமிழினம் வாழ வ. உ. சி. தமிழ்த் தேனில் அதனைக் குழைத்துப் பக்குவப்படுத்தித் தந்துள்ளார்.

மொழிபெயர்ப்பின் குறிக்கோள் பற்றி நாட்டு மக்களை மேம்படுத்தவும், ஒன்றுபடுத்தவும், ஒருமைப்பாட்டை, உலகின் உறவினை உருவாக்கவும் உதவும் ஓர் ஏதுவாகும். நாள்தோறும் வளர்ந்து வரும் எண்ணச் செழுமைகளைக் கொள்வதும் கொடுப்பதுமாகும். மூல மொழிக்கும் (Source Language) இலக்கு மொழிக்கும் (Target Language) பாலம் அமைப்பதற்கு ஒப்பாகும். மொழிக்கும் பிற மொழிக்கும் இருக்கும் பல்வேறு தடைகளை நீக்கிச் சமூகத்தில் கருத்துறவு ஏற்படுத்துவதே தலையாய குறிக்கோளாகும். ''நிறத்தால், நிலத்தால், எழுத்தால் ஒலிப்பால் பகுக்கப்பட்ட மாந்தரினத்தைத் தொகுத்து இணைத்துப் பிணைப்பதே மொழி பெயர்ப்பின் முதன்மைப் பணி'' என்று த. கோவேந்தன் குறிப்பார்.[25] செந்தமிழைச் செழுந்தமிழாக்கும் இச்சீர்மைப் பணியில் வ. உ. சி. யின் பங்கு மதிப்பிற்குரிய தகுதி படைத்ததாகிறது.

உண்மைத் தன்மை (True to fact) சரிமைத் தன்மை (correctness) படைப்பாக்கத்திறன் (creative ability) தழுவல் தன்மை (adaptability) ஆகிய மொழிபெயர்ப்புக்குரிய அடிப் படைக் கூறுகளை இவர்தம் நூல்களில் காணமுடிகிறது. மூல மொழியின் உணர்வையும், கருத்தையும், தாய்மொழியில் உயிர் பெறச் செய்வது எளிய செயலன்று. மூல மொழியில் புலமை யும், இலக்கு மொழியில் வல்லமையும் உடையார்க்கே இது கைவரும். வ. உ. சி. யின் அழுத்தமான ஆங்கிலப்புலமை, தாய் மொழித் திறம் இரண்டும் இங்குச் சிறப்புறச் செயற்பட்டுத் தமிழ் மொழிக்கு வளமான மொழியாக்கப் படைப்புகளைத் தரத் துணை நின்றன.

---

25. த. கோவேந்தன், 'மொழி பெயர்ப்பும் மொழியாக்கமும்' (மொழி பெயர்ப்பு - பண்பும் பயனும், ஆய்வுக்கட்டுரைகள்) ப. 76.

அந்நியர் ஆட்சியில், அவர் மொழி மேலாண்மை செலுத்தி வந்த நாளில், மொழிவழிப் புகுந்த பண்பாட்டு முரண்படு போக்குகளால் உண்டான பாதிப்புகளை; உள்ளபடி கண்டு உணர்ந்தவர் வ. உ. சி. தமிழினம் உயரத் தாய்மொழி உயர்தல் வேண்டும் என்ற கொள்கையிலும் எந்தவித மாறுபாடும் அவர்க்குக் கிடையாது. ஆயினும், தமிழ்ச் சமுதாய நல வாழ்விற்கு உகந்தவை எங்கிருந்தாலும் அவற்றைக்கொண்டுவந்து சேர்த்துப் புதிய வலுவும் பொலிவும் ஊட்டுதல் வேண்டும் என்ற நோக்கமே வ. உ. சி. அவர்களை மொழிபெயர்ப்புத் துறையில் ஈடுபடச் செய்தது. இந்திய விடுதலைப் போரில் தொண்டாற்றிய அரசியல் தலைவர்கட்கு விடுதலை உணர்வையும், போராட்ட முனைப்பையும் தந்ததற்கு ஆங்கிலக் கல்விவழி பெற்ற உலக அரசியல் ஞானமும் ஒரு காரணம் என்பதும் வரலாறு காட்டும் உண்மையாகும். முள்ளைக் கண்டு கொண்டு முள்ளை எடுக்கும் வித்தை இது. அரசியல் துறையில், பொருளாதாரத் துறையில், இலக்கியத் துறையில் எனப் பல்துறை வளர்ச்சிகளிலும் ஆங்கிலவழிப்பட்ட கருத்துறவுப் பரிமாற்றங்கள் அடிமை மண்ணிலும், சுதந்திர நாட்டிலும் தொடர்ந்து நன்மை தருதலைக் காண்கிறோம். இதற்கான முதன்மைப் பணிகளில் ஈடுபட்டு மூத்த தலைமுறைக்குரியவர் வ. உ. சி. என்பதை அவர் மொழிபெயர்ப்பு இலக்கியப் பணி எடுத்துரைக்கின்றது.

# 5. உரைநடைத் திறன்

"தாய்மொழிப் புலமையுடைய வ. உ. சிதம்பரனார், சி. சுப்பிரமணிய பாரதியார், திரு. வி. க., வ. வே. சு. அய்யர் போன்றவர்கள் விடுதலை இயக்கத்தின் முன்னணித் தலைவர்களானார்கள். இதனால் தமிழ் மொழியின் வரலாற்றிலே முற்போக்கான ஒரு திருப்பம் ஏற்பட்டது. பழைய இலக்கியங்களைப் புதிய பார்வையிலே பார்த்தனர் தேசபக்தியுடைய தமிழர்கள். அத்துடனன்றி, தேசபக்தியை வளர்க்கும் புதிய இலக்கியங்களையும் படைத்தனர்; ஆம். தேசபக்தி தமிழை வளர்த்தது; தமிழ், தேசபக்தியை வளர்த்தது. இதனால் மொழித் துறையிலே ஒரு புதிய சகாப்தம் பிறந்தது" [1] என விடுதலைப் போராட்ட காலத்தில் வாழ்வில் தமிழ் வளர்ந்த கதையைக் குறிப்பாகப் புலப்படுத்துவார் சிலம்புச்செல்வர் ம. பொ. சி. இங்குக் குறிப்பிடப் பெறும் அறிஞர்களில் பாரதி, திரு. வி. க ஆகியோர் தேசபக்தியினைத் தூண்டும் படைப்புகளையும், புத்திலக்கிய நெறி காட்டும் புலமைப் படைப்பாக்கங்களையும் ஒரு சேரத் தந்தவர்கள். வ. உ. சி. யும் வ. வே சு. அய்யரும் பழைய இலக்கியங்களைப் புதிய பார்வையில் கண்டனர்.

வ. உ. சி. பாரதியின் நெருங்கிய நண்பராய் வாழ்ந்தவர் என்பது தெரிந்த செய்தி. ஆயின் பாரதியின் புதுமைக் கவிதை முயற்சிகள் வ. உ. சி. யைப் பாதிக்கவில்லை. சுயசரிதை, மெய்யறிவு, மெய்யறம், எனது பாடற்றிரட்டு என்ற கவிதைப் படைப்புகள் எல்லாம் மரபு வழிப்பட்ட ஆசிரியத்திலும் வெண்பாவிலும் இயற்றப்பட்டன. இத்துறையில் வ. உ. சி. மிகுதியும் ஈடுபாடும் கொள்ளவில்லை. உணர்வில் தோயும் அழகிய கவியுள்ளம் படைத்தவர் என்பதைக் காட்டிலும்,

---

1. ம. பொ. சிவஞானம், 'விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு', ப. 63.

அறிவில் தோய்ந்த, மெய்ப்பொருள் நாட்டம் கொண்ட சிந்தனையாளராய் ஆய்வுக் கண்ணோட்டத்தில் உரைநலம் காணும் திறனாய்வாளராய் தம்மை வெளிப்படுத்திக் கொண்டவர் வ. உ. சி. என்பதை அவர் படைப்புகள் எடுத்துக்காட்டுவதை முன்பகுதி விளக்கி நிற்கின்றது. எனவே, அப் படைப்புகளில் காணலாகும் வ. உ. சி. யின் படைப்புத் திறன்கள் வகைப் படுத்தப்பட்டு இங்கு மதிப்பீடு செய்யப்படுகின்றன.

## மொழிக் கொள்கை

வ. உ. சி. யின் மொழியாளுமைத் திறனை எடை போடுதற்கு முன் அவர்தம் மொழிக் கொள்கை பற்றி அறிதல் சிறப்பாம். அன்றியும் அவர் காலத்து எழுந்த தனித்தமிழ் பற்றிய கருத்துப் போரில் வ. உ. சி. க்கும் கணிசமான பங்குண்டு. ஆகையால் அவர் மொழிக் கொள்கை பற்றிய தெளிவு இங்குத் தேவையாகின்றது.

ஆங்கில மொழி மீது வ. உ. சி. க்குப் பற்று இல்லை யென்றாலும் பயன்பாட்டு நோக்கில் அதன் மீது வெறுப்புக் கொண்டாரிலர். மிகு புலமையும் பெற்றிருந்தார். அவர் மொழி பெயர்ப்புப் பணி, மொழி வெறுப்பிற்கு அப்பாற்பட்டது என்பதும் போதரும். ஆயின் தனித்தமிழில் எழுத வேண்டும் என்ற வேகம் அவரிடம் காணப்படவில்லை. வடமொழிச் சொற்களைக் கலந்து எழுதுவதே பொருட்புலப்பாட்டிற்குவழி என்பதை அவர் ஜேம்ஸ் ஆலன் மொழிபெயர்ப்பு முன்னுரையில் குறிப்பிட்டதும் முன்னர் எடுத்துக் காட்டப்பட்டது. ஆனால் ஆங்கிலக் கலப்பு பற்றி அவர் வேறு எண்ணம் கொண்டிருந் தார். அக்காலத்தில் சுப்பிரமணிய சிவா, பாரதி, வ. உ. சி. வாசகர் ஒருவர், ஆகியோருக்கிடையில் தனித்தமிழ் பற்றிய கருத்து முரண்பாடுகள், பத்திரிகைகள்வழி வெளிவந்து ‘மொழிக் கலப்பு’ பற்றிய மாறுபடு கருத்துக்களையும் ‘தனித்தமிழ்’ பற்றிய கொள்கைகளையும் அறிய வழிகாட்டின.

‘‘தனித்தமிழியக்கம் தமிழ் நாட்டினிலே தோன்றிய ஒரு சமூக அரசியல் இயக்கத்தின் ஆரம்ப கட்டத்தின் பண்பாட்டுத் துறை வெளிப்பாடாக அமைந்தது. தேசிய விடுதலை இயக்கங் களின் பொழுதும், நாட்டின் உருவாக்க நடைமுறையின் பொழுதும்

(The Process of nationality formation) அப்பிரச்சினைகள் வலுப்பெறுகின்ற கட்டங்களிலும் மொழியின் தூய்மையைப் பேணும் இயக்கங்கள் தோன்றுவது இயல்பு என்பது சமூக - மொழியியல் ஆய்வுகள் மூலம் நிரூபணமாகியுள்ளது (Inglehart and Woodward - Language conflicts and political community in Language and social context Ed. Pier paoto Giolite-Penguin-1972 pp. 338-376.) ஒரு சமுதாயத்தின் அல்லது மக்கட் கூட்டத்தின் நம்பிக்கைகள், சமூகப் பெறுமானங்கள் உணர்வுகளை வெளியிடுவதற்கும், அச்சமுதாயம் தன்னைத்தானே இனங்கண்டு கொள்வதற்கும், தனது தனித்துவத்தை விளக்கிக் கொள்வதற்கும் மொழியை வாயிலாகவும், வாகனமாகவும் கொள்ள வேண்டியுள்ளது. அத்தகைய நிலையில் மொழியே சமுதாயத்தின் தொன்மையின், கௌரவ உணர்வின் குறிப்பாக அமைந்து விடுவதுண்டு'' [2] என்பார் கா. சிவத்தம்பி. இச்சூழலில் தான் மொழித்தூய்மை, சிறப்புப் பற்றிய மதிப்பீடுகள், கொள்கைகள் உருவாகத் தொடங்குகின்றன. மொழியின் தூய்மையைக் காப்பதற்கும், மொழித்திறனை வளர்ப்பதற்குமான முயற்சிகள் காலத்துக்கேற்ற வண்ணம் மாறும் கருத்து நிலைப் பாடுகள்வழிக் கைக்கொள்ளப்பட்டன. இப்பின்னணியில் வ. உ. சி. கால மொழிக் கொள்கையில் முதலில் 'எழுத்துக் குறை' பற்றிய சிக்கல் எழுந்தது.

1915 ஜூலை ஞான பாநுவில் ''தமிழில் எழுத்துக்குறை'' எனும் தலைப்பில் பாரதியார் கடிதம் ஒன்றை வெளியிட்டார். வருக்க எழுத்துக்கள் இல்லாதது தமிழுக்குக் குறை எனக் குறிப்பிட்டார்.

''இங்கிலிஷ் அக்ஷரத்தில் ப்ரெஞ்ச், அரபி, பார்ஸி, ஸம்ஸ்கிருதம் முதலிய பாஷைகளின் பதங்கள் சிலவற்றை எழுதுவதற்கு இங்கிலீஷ் அரிச்சுவடி இடங்கொடாததைக் கருதிச் சில புதிய குறிகள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எல்லா ஐரோப்பிய பாஷைகளுமே அந்நிய பாஷைகளிலுள்ள விசேஷ

---

2. கா. சிவத்தம்பி, 'தனித்தமிழ் இயக்கத்தின் அரசியற் பின்னணி', ப. 74.

உச்சரிப்புகளுக்கு இணங்கும்படிச் சில தனிக்குறிகள் ஏற்பாடு செய்து வைத்துக் கொண்டிருக்கின்றன. நாமும் அப்படியே சிலவிசேஷக் குறிகள் ஏற்பாடு செய்து கொள்ளுதல் அவசிய மாகும்'' என வற்புறுத்தித் தாம் எளிமையாகப் பயன்படுத்தக் கூடிய குறிகளை உருவாக்கியிருப்பதாகவும், சில மாதங்களில் எல்லாரும் அறிய வெளியிடப் போவதாகவும் குறிப்பிட்டிருக் கிறார்.

''நக்கீரர் பிறந்த நம் நாட்டில் ரசிகர்களும் ஆராய்ச்சி யாளர்களும் தவறை எடுத்துக்கூறத் தயங்குவது நமது கல்வி முறையின் பெருங்குறையே. நக்கீரரின் பெருமை மறைந் தொழிந்த இக்காலத்தில் அதைத் திரும்பவும் தமிழ் நாட்டில் நிலை நாட்ட வழிகோலியவர் சிதம்பரம் பிள்ளை அவர்களே'' என்று ஏ. சி. பால் நாடார் வ. உ. சி. யின் நக்கீரப் பார்வையைப் பாராட்டுவார். பாரதியின் கடிதம் வ.உ.சி. யின் நக்கீரக் கனலை எழுப்பியது. உயிர் நண்பராயினும் அவர் கூற்றுப் பொருத்தமற்றது. தவறான கண்ணோட்ட முடையது எனக் கண்டபின் எதிர்ப்பினை வெளிப்படுத்தி உண்மையினை நிலைநாட்ட அவர் தயங்கவில்லை.

1915இல் 'ஞான பாநு' வில் உடன் மறுப்புக் கட்டுரை வெளியிட்டார். பாரதியார் கடிதத்தில் 'பிற பாஷைகளின் மனிதப் பெயர், நகரப் பெயர் முதலியவற்றில் சிலவற்றை அப்பாஷையாளர் உச்சரிக்கும் சப்தத்தில் நாம் உச்சரிக்குமாறு செய்யத்தக்க சில எழுத்துக்கள் நமது தமிழ்ப் பாஷையில் இல்லாதது'' குறை எனக் குறிப்பிடப்பட்டுள்ளன.

''தெய்வ பாஷையென்றும், பூரண பாஷையென்றும் பல பாஷைகளுக்கும் தாய் பாஷை என்றும் சொல்லப்படுகிற சமஸ்கிருத எழுத்துக்களோடு......... ழ, ற, ன, F, Z என்னும் எழுத்துக்களையாவது அவற்றின் ஒலிகளைக் குறிக்கும் குறிகளையாவது சேர்ப்பதற்கு நண்பரவர்கள், அரவிந்தரவர்கள் முயற்சி செய்து வெற்றி பெறுவார்களாயின், அவர்கள் தமிழ் மக்களுக்கு ஒப்பற்ற வழிகாட்டிகளாவார்கள். பின்னர் நமது தமிழ் மக்கள் அவர்களைப் பின்பற்றத் துணிவார்கள்'' என நியாயமாகவும், கடுமையாகவும் மறுப்புத் தெரிவிக்கின்றார்.

வ. உ. சி. தமிழைத் திருத்தும் நோக்கம் கொள்ளாது வருத்தும் போக்குடையவர்களாய் இவர்கள் காணப்படுகின்றனர் எனவும் கடிகிறார்.

1915 அக்டோபர் 'ஞான பாநுவில்' மீண்டும் பாரதியார், வ. உ. சி. பெயர் குறிப்பிடாமலேயே, தாம் குறிப்பிடும் அடையாளக் குறிகள் பற்றிச் சுட்டிக்காட்டி "இந்த எளிய வழியை அனுசரித்து நமது தாய் மொழி விசாலமடைய வேண்டுமென்பதே என்னுடைய விருப்பம்" என்று முடிக்கிறார்.

29 - 10 - 1915இல் சுதேசமித்திரனுக்கு எழுதிய கட்டுரையில் வ. உ. சி. "பல காரியங்களின் நிமித்தமாகப் பல பாஷையினரோடு பல வகைச் சம்பந்தங்களை வைத்துக் கொண்டிருக்கிறயானும், நமது நண்பர் ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதி அந்நிய பாஷை சொற்களைத் தமிழில் எழுதுவதற்குக் கண்டுள்ள புதிய முறையின் வெளிவரவை எதிர் நோக்கியிருக்கிறேன் என்று எழுதுகின்றார். ஆயின் பாரதியின் கண்டுபிடிப்பு இறுதி வரை வெளிவரவே யில்லை.

1926 ஜூலை ஆனந்த குணபோதினி இதழில் அதன் ஆசிரியர் 'சொல்-வறுமை' என்ற தலைப்பில் மேற்குறித்த எழுத்துக் குறைபாட்டினைச் சுட்டிக் காட்டுகின்றார். "வேறு பாஷைகளிலுள்ள சப்தங்களைத் தமிழ் எழுத்திலே மாற்றி எழுதுவதற்கு 'எழுத்துப் பெயர்த்தல்' என்று பெயர் அன்னியரது பதங்களின் அர்த்தத்தைத் தமிழ்ப் பதங்களில் எழுதும் தொழிலை மொழி பெயர்த்தல், (தர்ஜூமா) என்பர். வேறு பாஷைச் சொற்களைத் தமிழில் 'எழுத்துப் பெயர்த்தல்' (உருமாற்றல்) செய்தற்கு இப்போதுள்ள முக்கியமான தடையாதெனில் நமது அரிச்சுவடியில் போதுமானபடி எழுத்துக்களில்லாமல் இருப்பதே......பெங்காளிகள், ஹிந்துஸ்தானிகள், முதலாயினோர் அவர்களுடைய பெயர்களை நாம் வெட்கக் கேடாக எழுதும் ஒலி குறைந்த தன்மையைப்பார்த்து விட்டு நம்மை எவ்வளவு எளிமை செய்து நகைக்கிறார்களென்பதை நம்மவர்களிலே பலர் அறிய மாட்டார்கள்......சென்னைத் துரைத்தனத்தார் நவீனமாகத் தமிழ் அகராதி தயாரிக்க முயன்ற போது நமது த்மிழ்நாட்டுக் கவிவாணரான ஸ்ரீ மான்எபி.சுப்ரமண்ய பாரதியாரின் தலைமையின் கீழ் அவ்வேலையைத் தொடங்கி

யிருப்பராயின் தமிழ் மொழிக்கே ஒரு நூதன ஒளி உண்டாகும் படிச் செய்திருப்பார். சென்றதைச் சொல்லி என்ன பயன்?'' பாரதியின் எழுத்துக் குறை பற்றிய கருத்து அவருக்குப் பின்னும் தொடர்ந்து விவாதத்திற்குரிய ஒன்றாகவே அமைந்திருந்தது என்பதை மேற்குறித்த கட்டுரைப் பகுதி காட்டும். ஆயின் எழுத்துச் சீர்மையினை வ. உ. சி. ஒரு வகையில் வரவேற்றாலும், அவர்தம் தமிழ்ப்பற்று, முற்றிலும் அதனை ஆதரிக்க விடவில்லை. தமிழர்கள் மட்டும் பிறமொழிச்சொற்களை, ஒலிப்பு முறைக்கேற்ற எழுத்து உருவாக்கங்களை முறையே ஏற்றும்,படைத்தும் கொள்ள வேண்டும் என வற்புறுத்துகின்றவர்கள், பிறமொழிகளிலும், குறிப்பாக இந்திய மொழிகளிலும் தமிழுக்குரியவற்றை ஏற்றுக்கொள்ளும் விரிந்த மனப்பான்மை கொண்டிருக்கவில்லையே என்பதை நியாயமாக எடுத்துச் சொல்லும் வ.உ. சி. யின் சிந்தனைத் தெளிவு இங்கு நினைத்தற்குரியது. இன்று வரை இந்தக் கருத்துப்போராட்டம் முழுத்தீர்வு காணா நிலையிலேயே இருப்பதும் நோக்கத்தக்கது. மொழித் தூய்மை என்று நெகிழ்ச்சிக்கே இடம் கொடாத போக்கும், எதையும் கலந்து எப்படியும் மொழியைப் பயன்படுத்தலாம் என்ற மிகத் தாராளமான போக்கும் என்ற இரு எதிர்க்கோணங்களில்தான் நம் மொழி வளர்ச்சி பற்றிய செயற்பாடு அமைந்துள்ளது. காலந்தோறும் இது பற்றிய கருத்து மோதல்கள் ஏற்படுவதையும் தவிர்க்க முடியாது.

## தமிழ் நடை

1915இல் 'சுதேசமித்திரன்' கையாளும் தமிழ்நடை விவாதத்திற்குள்ளாயிற்று. ''தமிழ் ஜனங்களுக்குச் சுதேசமித்திரன் அறிவைப்பரப்புகின்றதா?அல்லது ஆங்கில பாஷையைப் பரப்புகின்றதா ?......ஸ்வய பாஷையை ஆதரியாத பத்திரிகைகள் ஸ்வதேசத்தை எங்ஙனம் முன்னேற்றத்திற்குக் கொண்டுவரப் போகின்றனவோ தெரியவில்லை'' என்று சுப்பிரமணிய சிவா செப்டம்பர் 1915ஆம் ஆண்டு 'ஞானபாநுவில் சுதேசமித்திரனின் தமிழ்நடையைத் தாக்கி எழுதினார்[3] .

---

3. சுப்பிரமண்ய சிவா, 'ஞான பாநு', செப். 1915, பக். 163 - 164.

'பாரத புத்ரன்' என்பவர் சிவாவின் தாக்குதலுக்குப் பதிலளித்தார். அவர் பதிலுக்குப் பதில் கூறும் முகமாக 'நாமும் சுதேசமித்திரனும்' எனும் கட்டுரை வெளிவந்தது.

''ஆங்கிலச் சொற்கள் கலவாத தமிழ் எழுத வேண்டு மென்று எப்பொழுதும் நாம் கூறிவருகின்றோமேயொழிய, சமஸ்கிருதச் சொற்களும் கலவாத தனித்தமிழ் எழுத வேண்டு மென்று நாம் ஒருபொழுதும் கூறினதில்லை. சமஸ்கிருத சொற்களே கலவாத தனித்தமிழில் எல்லோரும் சர்வசாதாரண மாகத் தற்காலத்தில் வியாசங்கள் எழுத முடியுமென்று நாம் நினைக்கவில்லை''.[4] இது அந்நாளைய தமிழ்நடையின், அமைப்பினை விளக்கி நிற்கின்றது. சிவா காலத்துத் 'தனித் தமிழ்' என்பது அந்நிய மொழியாகிய ஆங்கிலம் கலவாத வடமொழிச் சொற்கள் இயல்பாக விரவிய ஒன்றாகும்.

பின்னர் 'ஞானபானு' விலேயே சமஸ்கிருதம் விரவாத தமிழ் நடை வேண்டும் என்பதும் வற்புறுத்தப்பட்டது. ''என் முன் கட்டுரையில் கணக்கற்ற வடமொழிச் சொற்களை உபயோகம் செய்ததைக் குறித்து விசாரிக்கின்றேன். இனிமேல் கூடியவரை சுத்தத் தமிழே எழுத முயற்சிக்கிறேன்'' என்ற குறிப்பும் காணப்படுகிறது. சிவா, 'சமஸ்கிருதம் முதலான அந்நியச் சொற்கள்' கலவாத தனித்தமிழ் நடையில் கட்டுரை எழுதுவோருக்கு ஐந்து ரூபாய் இனாம் என்று ஞானபாநு ஜூலை 1915 ஆம் ஆண்டு விளம்பரப்படுத்தியதும் அவர் மொழிக் கொள்கை மாற்றத்தை உணர்த்தும்.

ஒரு ஜன சமூகத்திற்கு உயிர் அதன் பாஷைதான். தமிழ் பாஷையழிந்துவிட்டால் தமிழர்களின் சிறப்பும் சீரும் அழிந்து விடும். தமிழ் பாஷையில் தேவையான பதங்கள் இல்லை யென்று வாய்கூசாமல் கூறுகின்ற பாரத புத்ரர்களுக்கு அப் பதங்களை யாராவது கண்டுபிடித்துக் கற்றுக் கொடுங்கள் சரியான பதங்கள் இல்லையென்றால், தமிழ்வாணியின் கிருபை கொண்டு இன்னும் அநேக காரணப் பெயர்களையாக்கிக் கொடுங்கள். உங்கள் நா தமிழே பேசுக; நீங்கள்

4. மேற்படி, நவ. 1915, ப. 201.

கையிலேந்தும் இறகு தமிழே எழுதுக; உங்களுடைய ஹிருதயம் தமிழையே நாடுக'' (ஞானபானு, பிப்பிரவரி 1916' ப. 287) என்று சிவா கலைச்சொல்லாக்கத் தேவையினையும் தனித்தமிழ் வளர்ச்சிக்கான உடனடிப் பணியினையும் ஒருங்கு வலியுறுத்தி அன்றைய மொழிக் கொள்கை பற்றிய உண்மை நிலையினைத் தெளிவுபடுத்துகின்றார்.

இப்பின்னணியில், சுதேசமித்திரன், ஞானபானு கருத்துப் போரில் சிதம்பரனார் பங்கு பற்றி அறிதல் தகும். பாரத புத்ரனுக்குக் கண்டனம் தெரிவிக்கும் பணி பிள்ளையவர் களுக்குத் தரப்படுகிறது. 29 - 10 - 1915இல் வெளியான 'ஞானபானு' வில் பிள்ளையவர்கள் மொழிக் கொள்கை பற்றிய விளக்கம் நமக்குக் கிடைக்கிறது. அன்றைய சூழலில் மொழிவளர்ச்சி என்பது தனித்தன்மையிலா, கலப்பிலா என்பதே பெரிய கேள்வியாய் நின்றது. தனித் தன்மையினை வலியுறுத்தும், ஆங்கிலக் கலப்பில்லா, வடமொழிக் கலப்புடைய மொழி நிலையே பெரிதும் வரவேற்கப்பட்டது. வடமொழிக் கலப்பு இயல்பாகவும் ஆங்கிலக் கலப்பு அந்நியமாகவும் பட்டது. இப் பின்புலத்தில்தான் வ. உ. சி. யின் மறுப்புகளை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

வ. உ. சி. யின் மறுப்புரையில் குறிப்பிடத்தக்கவை,

1. ஸமஸ்கிருதச் சொற்கள், நூல்கள் தமிழ் மொழியிலிருந்து வந்தவை, தமிழ்ச்சொற்கள், நூல்கள், ஸமஸ்கிருதத்திலிருது வந்தவை, இரண்டு மொழிகளுமே வெவ் வேறாய்த் தோன்றி மக்கள் தொடர்பால் இரு மொழிகளிடையேயும் சொற்கலப்பு ஏற்பட்டது என்ற முத்திறத்தார் கூற்றுக்களின் உண்மை தெளிவாகும் வரை 'நம்மவர்கள் அறிவதற்கு இன்றியமையாத அளவு தமிழ் பாஷையில் சமஸ்கிருதச் சொற்களைக் கலப்பதில் தவறில்லை.

2. காலத்துக்கேற்ற கருத்து வளர்ச்சியினை வெளிப் படுத்தும் சொற்களை உருவாக்க வேண்டிய தேவை. ''தமிழ்ப் பதங்கள் கிடையா'' என்று வேற்றுச் சொற்களைக் கலக்காமல் தமிழில் ஆக்கிக் கொள்ளவேண்டும். ''நாம் இவ்வாறு செய்தால் நம் தமிழ் பாஷைக்கும் நம் தமிழ் மக்களுக்கும் ஒரு பெரிய நன்மை செய்தவர்களாவோம்''.

3. சமஸ்கிருதச் சொற்களைத் தமிழில் கலந்து எழுதுவதை குறையாக கூறுகின்றனர். முதலில் தமிழ் பாஷையில் ஆங்கிலச் சொற்களைக் கலந்து எழுதுவதை நிறுத்த வேண்டும். "தற்காலம் தமிழில் வழங்கி வரும் சமஸ்கிருதச் சொற்களுக்கெல்லாம் சரியான தமிழ்ச்சொற்களை நம் தமிழ் மக்களுக்குக் கற்பித்து நாளடைவில் சமஸ்கிருதச் சொற்களைத் தமிழிலிருந்து வேரோடு களைந்து விடலாம்."

4. குறித்த பொருளைக் குறித்தபதங்களில் சொல்வதற்குத் தமிழால் முடியும். "யான் தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஒரு சிலவே கற்றுள்ளேன். அவ்வாறிருந்தும் யான் அறிந்துள்ள எந்தப் பாஷையின் எந்த மொழியையும் நம் தமிழ் மக்களில் எவரும் எளிதில் அறிந்து கொள்ளுமாறு (ஸம்ஸ்கிருத சொற்களின் கலப்பேயில்லாத) தனித்தமிழில் மொழிபெயர்த்துக் கொடுக்கத்தக்க திறமையையுடையேனென்றால், என்னினும் அதிகமாகத் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் கற்றுள்ளவர்கள் அவ்வாறு செய்யத்தக்க திறமையையுடையவர்களாயிருப்பார்கள் என்பதை யான் சொல்ல வேண்டிய ஆவசியகம் இல்லை" என்பார் வ. உ. சி.

"சுதேசி இயக்கம் தாய்மொழிப் பற்றை வளர்த்தது. தேசிய கல்வித்திட்டம் தாய்மொழியைப் பயிற்றுமொழியாக வலியுறுத்தியது. மொழித் தூய்மைக்குப் பாடுபட்டது. ஆங்கில மொழிச் சொற்களைக் களையெடுப்பதே மொழித் தூய்மை என வற்புறுத்தப்பட்டது"[5] என்று அந்நாளைய மொழிச் சூழலைத் தெளிவுபடுத்துவார் பெ. சு. மணி. இந்தப் பின்னணியில் தான் வ. உ. சி.யும் சிவாவும் ஆங்கிலச் சொற்களைத் தமிழ் மொழியோடு எழுத்திலும் பேச்சிலும் கலப்பதைக் கண்டித்தனர். ஆங்கிலங்கலவா ஒருவகைத் 'தனித்தமிழ்' இயக்கத்தைத் தொடங்கினர். ஆனால் வடமொழிச் சொற்கலப்புப் பற்றி அவர்கள் கருத்துச் செலுத்தவில்லை என்பது முன்னர் குறிக்கப் பட்டது. வட சொற்களும் கலவா தூயதமிழ் வேண்டும் என்ற விருப்பம் அவர்களுக்கு இருந்தது. ஆயினும் தேசிய நீரோட்டத்தில் பாரத சமுதாயம் என்று ஒருமைப்பாட்டுணர்வின் அடிப்படையில் தோன்றிய பொதுமைப்பண்பில் வடமொழி உறவுடையதாகிறது. ஆங்கிலம் அந்நியத் தன்மையில் புறக்கணிப்பிற்கு

5. பெ. சு. மணி, வீரமுரசு சுப்பிரமணிய சிவா, ப. 229

உரியதாகிறது. தேசிய உணர்விற்கு ஆங்கில மொழியின் மேலாண்மை ஒரு தடையுமாவதை உணர்ந்ததால்தான் முற்றாக ஆங்கிலம் மட்டுமே கலவா மொழித்தூய்மை வலியுறுத்தப்பட்டது.

''இந்தியாவில் கலாச்சார ஒருமைப்பாடு உருவாக வாய்ப்பேற்பட்ட போதெல்லாம் - அந்நாளில் சமயமொழியாகக் கருதப்பட்ட வடமொழி எனப்படும் ஸமஸ்கிருதம் தமிழ் மொழியை ஊடுருவித் தமிழர் மீது செல்வாக்குப் பெற்று வந்தது. தமிழிலே வடமொழிச் சொற்கள் தேவைக்கு அதிகமாகக் கலந்து வந்தன. தமிழர் வாழ்வினிலே வடமொழியாளரின் பழக்க வழக்கங்களும் பண்பாடும் கருத்துக்களும் கலைகளும் வெகுவாகக் கலந்தன ''[6] என்று ம. பொ. சிவஞானம் வடமொழிச் செல்வாக்கிற்கான பண்பாட்டுப் பின்புலத்தை எடுத்துக் காட்டுவதும் இங்கு நோக்கத்தக்கது.

ஆகவே வ. உ. சி. யின் படைப்புகள் பற்றிய கலைநுட்பத் திறன்களை முறைப்படுத்திக் காண, அந்நாளைய மொழிச் சூழலையும், வ உ. சி. யின் மொழிக் கொள்கையையும் அறிந்து கொள்ள வேண்டியதன் இன்றியமையாமை இப்போது நன்கு புரியும். இதன் வழி. பிள்ளையவர்கள் நடை நலச் சிறப்புகளையும், மொழித் திறன்களையும்; உரைநடை இலக்கிய வரலாற்றில் அவர்தம் பங்களிப்புப் பற்றியும் சில சான்றுகள் காட்டி மேலே விரித்துச் செல்வது பொருந்தும்.

## நடைச் சிறப்பு அமைவுகள்

வ. உ. சி. யின் கட்டுரைகள், பதிப்பு முன்னுரைகள், உரைகள், மொழி பெயர்ப்புகள் ஆகியவற்றில் அவர் கையாண்ட மொழிநடை பற்றிய ஆய்வில் அவர்க்கே உரிய தனித்தன்மைகள் வ. உ. சி. தமிழை இனங்காண வழி வகுப்பனவாம்.

''வசனம்'' 'உரைநடை' என்ற மொழிகளிலேயே பேச்சு என்பது கண்டிருக்கிறது. எந்த விஷயத்தையாவது அதைப் பேசத் தகுந்தவர்கள் எவ்வாறு தங்களுக்குள் பேசுவார்களோ, அதுவே நல்ல வசன நடையாகும். எல்லா விஷயங்களையும் எல்லோரும்

---

6. ம. பொ, சிவஞானம், 'விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு', ப. 80.

பேசமாட்டார்கள். பேசுகிறவர்களும் சந்தர்ப்பத்துக்குத் தக்க வாறுதான் பேசுவார்கள். எல்லாரும் எப்போதுமே ஒரே மாதிரியாகப் பேசமாட்டார்கள். இதுவே உரைநடை பேதங்களுக்கு மூலாதாரம். நூல்களில் அரும்பத அகராதியில் இல்லை'' [7] என உரைநடை அமைப்புப் பற்றிக் கருத்துத் தெரிவிப்பார் ராஜாஜி. பேச்சைப் பின்பற்றி மக்களுக்குப் புரியும்படியாக அமையும் வசன நடையில் அழகும் ரஸமும் வலிவும் வாடாப் புதுமையும் அமையும் என்றும் கூறுவார் ராஜாஜி. ''இலக்கியச் சொற்களைக் கொண்டு தொடுத்து எழுதினால் அதில் உயிர் இராது. 'கூழாங்கற்களை மண்ணெண்ணெய் டப்பாவில் போட்டு ஆட்டியது' போல் அமையும். மக்கள் பேசும் பேச்சு மாட்டின் கழுத்தில் கட்டிய மணி ஓசை போல் எவ்வாறு கூடிக் கலந்தாலும் காதுக்கு இனிமையும் மனதுக்கு மகிழ்ச்சியும் தரும்'' என்று மேலும் பழகுதமிழ் நடையின் தேவையை அழகிய உவமைகள் கொண்டு விளக்குகின்றார்.

உயிரும் உயிர்ப்பும் உடைய மனிதர்களுக்குத் தோன்றும் இன்ப, துன்பம், மகிழ்ச்சி, கவலை, கோபம், பொறாமை என்ற முரண்படு பண்பு மோதல்களுக்கிடையில் தாமாகக் கிளம்பும் மொழிகளில் தான் சுவை, நெகிழ்வு, வண்ணம், வடிவு, அழகு, சக்தி எல்லாம் கொண்ட நடை வேறுபாடுகள் உருவாகும். அந்த உணர்ச்சி வெளிப்படு பேச்சு நடைகளைச் சரியாக வாங்கித் தங்கள் எழுத்தில் பதியச் செய்வது படைப்பாளிகள் தம் ஆளுமைத்திறன் காட்டும். நடைநலன் சிறக்கக் கொச்சைச் சொற்களுக்கு இடம் தராது இருத்தல் வேண்டும். பிறமொழிச் சொற்களை எல்லா நிலைகளிலும் இடைமடுத்துக் கலந்து எழுதுதலைத் தவிர்க்க வேண்டும். இவ்வகையில் உரை நடை ஆய்வில் மூன்று கூறுகளை மனங்கொள்ள வேண்டும். சொல்லாட்சி, நடை, தொடர் அமைப்புகள் ஆகியவை இங்குச் சிந்திக்கத் தக்கவை.

## வ. உ. சி. யின் சொல்லாட்சி

கருத்துப் பரிமாற்றத்திற்குப் பொருள் பொதிந்த சொல் தேர்வு அடிப்படை. வெல்லும் சொல் இன்மை அறிந்து தேர்ந்த சொற்களைக் கையாளும் வன்மை, உரைஞனின் சொல்வளம்

---

7. ராஜாஜி, கட்டுரைகள், ப. 86.

காட்டும். உள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சியின் தரத்தையும், திறத்தையும், சிந்தனையின் ஆழத்தையும் பொறுத்துச் சொற் பிறப்பு அமையும். உள்ளத்து உண்டாகும் 'உண்மையொளி' தெளிவான வாக்காகப் பளிச்சிடும். சொல்லாட்சியின் அமைவிலே நடைநலம் சிறக்கும். மலரும் மணமுமாய்ப் பிரிவில்லா இணைவில் பிறப்பவை சொல்லும் நடையும். எழுதுவோர் ஆளுமை, எழுதப்படும் சூழல், எழுத்துப் பொருண்மை ஆகிய வற்றிற்குத் தக சொல் தேர்வும், நடைநலமும் விளக்கம் பெறும். பொருளுக்கேற்ற கோலம் தாங்கி நடை வேறுபடுதலும் நினைக்கத்தக்கது.

வ. உ. சி. யின் உரைப்படைப்புகள் அவர்தம் பன்மொழிப் புலமை நலன் காட்டுவன. அவர் கவிதைப் படைப்பாக்கங்களில் குறிப்பாகச் சுயசரிதையில் கான் விக்ட்டு, வார்டர், ஆர்டர், மதராஸ் கவர்னர், செஷன்ஸ் ஜட்ஜ், பெய்சிக்கிள் வண்டி, பர்தர் (further) மொண்டு, சலியூட்டு, பிராசிக்குஷன் என்று மொழி எழுத்துப் பெயர்த்தலாய் ஆங்கிலச் சொற்களை மிகுதியும் பயன்படுத்தியுள்ளமை வியப்பளிக்கின்றது.

இவரே ஜேம்ஸ் ஆலனை மொழிபெயர்க்கையில் ஆங்கிலச் சொற்களுக்கிணையான தமிழ்ச் சொற்களை உருவாக்கியுள்ள திறம் கருதற்குரியது.

"Out of the Heart", "As a man thinketh" என்ற தலைப்புகளை 'அகமே புறம்', 'மனம்போல வாழ்வு' எனப் பொருள் சிதையா மொழி பெயர்ப்பினை வழங்குகின்றார்.

அகமே புறத்தில் காணப்படும் சிறந்த தமிழ்ச் சொல்லாக்கங்கள் வ. உ. சி. யின் தமிழ் ஆளுமைத் திறன் காட்டும்.

Indolence - சோம்பல், Self indulgence - மிதூண், Slander - புறங்கூறுதல் என்ற பொருள் பொதிந்த சொல் அமைவுகளைக் காணலாம்.

Crossip and idle conversation- Abusive and unkind speech Levity or irrelevent speech captiousness or fault finding speech என்று பேச்சு பற்றிய பல்வகைப் பொருள் தரும் சொற்களைப், புறங்கூறல், பயனில சொல்லல், நிந்தித்தல், புன்மொழி பகரல், குதர்க்கம் பேசல் என வேறுபடு பொருள்நலப் புலப்பாடு தோன்ற மொழி உருவாக்கம் செய்துள்ள திறன் பாராட்டுக்குரியது.

இடையே ஆங்கிலச் சொற்களுக்கிணையான வடமொழிச் சொற்களையும் மொழி பெயர்ப்பில் கையாளுகிறார். Unselfish Performance of duty என்பதை நிஷ்காமிய கருமம் என மொழி பெயர்ப்பார்.

| **பிசகான மனோநிலைமைகள்** | **அவற்றின் காரியங்கள்** |
|---|---|
| Hatred — வெறுப்பு — | நோ (injury), இம்சை—(Violence), கேடு (disaster) துன்பம் (Suffering) |
| Desire or Self — Slavery அவா அல்லது தனக்கடிமை — | வியஸனம் (grief) மடமை (folly) துக்கம் (sorrow) உறுதியின்மை(uncertainty) தனிமை (lonliness) |

என்பது போன்ற தெளிவான சொல்லாட்சிகளைக் காணலாம். Selflessness என்பதைச் 'சுயநலமின்மை' என மொழி பெயர்ப்பார்.

'வலிமைக்கு மார்க்கத்தில்' 'எஃது' என்ற புதிய சொல்லைப் படைத்துள்ளதாகக் குறிக்கிறார். ''எஃதனை நீ வேண்டினையோ, எஃதிற்கு வேண்டுவதோ அஃதனையே நீயீவாய் ஆருயிர்கட் — கஃதுநின'' என்று மூலச் செய்யுள் ஒன்றனைத் தமிழ்ப்படுத்துகையில் 'எது' என்பதனை 'எஃது' என்று வழங்கும் புதுமையைக் காண்கிறோம்.[8]

இனி, மேற்படி நூலில் தாம் பயன்படுத்தியுள்ள சில வட சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களையும் பொருள் விரிவு களையும், தனித்துக் குறிப்பிடுகின்றார்.

ஆன்மா — பேரறிவு ('யான்' 'எனது' எனக் கருதாது உலக நன்மையைக் கருதுவது)
ஜீவன் — சிற்றறிவு ('யான்' 'எனது' எனக் கருதித் தனது நன்மையைக் கருதுவது)
பரோக்ஷ ஞானம் — கேள்வி அல்லது கல்வி வழி அடையும் அறிவு

---

8. வ. உ. சி வலிமைக்கு மார்க்கம், ப. 81.

| | |
|---|---|
| அபரோக்ஷ ஞானம் | மனம் அல்லது பொறிவழி காணப்படும் அறிவு |
| துன்பம் | —பொறியால் வரும் வருத்தம் |
| துக்கம் | —மனவருத்தம் |
| இன்பம் | —பொறிக் களிப்பு |
| சுகம் | —மனக்களிப்பு |

வ. உ. சி. யின் சொல்வளம், சொல்லாக்கத்திறன், பொருள் வேறுபாடு அறிந்து சொற்களைப் பயன்படுத்தும் திறம், சொற் பொருளை உணர்த்தும் ஆற்றல் ஆகிய சொல்லாட்சித் திறன் களுக்கு மேற்காட்டிய சொற்பட்டியல் சிறந்த சான்றாக அமை கிறது. 'இன்பம்—பொறிக்களிப்பு. சுகம்—மனக்களிப்பு' என்று பொருள் வேறுபாடு உணர்த்தும் வழி உருவாக்கியுள்ள சொல்லாக் கங்கள் நினைந்து இன்புறுதற்குரியன.

வ. உ. சி.யின் மொழிக் கொள்கையில் ஒன்று பிறமொழிச் சொற்களுக்கேற்ற 'தமிழ்ப்பதங்களை' உருவாக்குதல் ஆகும். இம்முயற்சியில் அவரே ஈடுபட்டிருந்த திறத்தை மேற்குறித்த சொல்லாக்கங்கள் சான்று காட்டி நிறுவுகின்றன.

வடமொழிச் சொற்கள் பயில வழங்கிவந்த காலம் வ. உ. சி. தமிழ் வளர்த்த காலம் எனக் கண்டோம். அவர் உரைப்படைப்பு களில் மக்கள் புரிந்து கொள்ளுதற்காகவே, வழக்கிலுள்ள வட சொற்களைக் கையாளுவதாகவும் குறிப்பது முன்னர்ச் சுட்டப்பட் டது. பாஷை, தேசாபிமானிகள், ஆலோசனை, பிரத்தியேகம், காங்கிரஸ் மஹாசபை, பிரேரேபணை, அபிப்பிராயம், தமாஷ், பிரசங்கம், ராஜதுவேஷ வழக்கு, சந்தானம் என்பன போன்ற வற்றைச் சான்றுகளாகக் கொள்ளலாம். அவர் மொழி நடையில் இவை போன்ற சொற்கள் தமிழோடு இடைமிடைந்து இயல்பாக அமையும் போக்கினைக் காணலாம்.

### நடைக் கூறுகள்

வ. உ. சி. பொதுமக்களுக்கு விளங்கவேண்டும் என்ற நோக்கில் அவர்காலத் தமிழ் அமைப்பு முறைகளைக் கருத்திற் கொண்டு பொருள் புலப்பாட்டு நடை ஒன்றைக் கைவரப் பெற்றார்.

ரஸ்கின் சொல்வார், ''என்னுடைய இளம்பருவத்தில் எந்தச் சிறிய விஷயத்தைப் பற்றியும் நீண்ட நீண்ட வார்த்தைகளைக் கொண்டு இல்லாத வளைவெல்லாம் வளைத்து எழுதி வந்தேன். ஜனங்கள் அதை வியக்கக்கூடச் செய்தார்கள். ஆனால் இப்பொழுதோ விஷயத்தை நேர் நேராக அப்படி அப்படியே சொல்லுவது தான் சரியான முறை என்று எனக்குத் தெரிகிறது''. [9] இதனால் சொல்லக் கருதியதைத் தெளிவுபடவும், இயல்பாகவும் புரியும் வண்ணம் எளிய முறையில் சொல்லவேண்டும் என்பதாகிறது. ஆங்கிலத்தில் சிறிய, எளிய சொற்கள் கலந்த நடை உண்டு. பிறமொழிகளிலிருந்து பெற்ற, ஆரவாரமான ஒலிப்புடைய செறிந்த பொருளுடைய கல்வியாளர்கள் மட்டுமே புரிந்து கொள்ளும் கனமான சொல்லாட்சி கொண்ட பீடுநடையும் உண்டு. முன்னது நேர்மை, சுருக்கம் தெளிவு கொண்ட இலக்கு. பின்னது சொல்லலங்காரம், ஓசைநயம், கம்பீரம் கொண்டு திகழும். தமிழில் பழகுதமிழ் நடை, பண்டிதர் நடை என்று இவற்றை இனங் காணலாம்.

படைப்பாளியின் கல்வி, அறிவு, ஆற்றல் இவற்றைக் காட்டுவது நடை. அவன் சார்ந்த இனத்தைச் சுட்டுவதும் நடையே. எனவே, மக்கள் தொண்டராய் தேசிய உணர்வினை அவர்களிடத்துப் பரப்ப, ஆங்கிலப்படிப்பில் தேர்ந்த தலைவர்களிடமிருந்து வேறுபட்டுத் தாய்மொழியைத் துணையாகக் கொண்ட வ.உ.சி., மக்கள் பேச்சு நடையினையே பெரிதும் பின்பற்றினார். பின்னர் படைப்பாளியாக மாறிய காலத்தும் தம் கல்வி, அறிவு, ஆற்றல் இவை புலப்பட எழுதுவதைக் காட்டிலும், மக்களுக்குப் புரியும் வகையால் எழுதுவதையே மிக விரும்பினார். ஆகவே இவர் உரைகளிலும், கட்டுரைகளிலும் மொழி பெயர்ப்புகளிலும் ஆரவாரமற்ற, எளிமையான, நடைப்போக்கு அமையக்காண்கிறோம்.

உயர்ந்த பொருளையும் எளிமையாகச் சொல்லிக் காட்டுவார். முன்னர்க் குறித்தது போல் சிவஞான போத உரையில் ஒவ்வோர் நூற்பாவின் பொருளையும் ஒரே வரியில் சொல்லிக்காட்டும் திறத்தை எடுத்துக்காட்டலாம். திருக்குறள் சிவஞானபோதம் ஆகிய நூல்களின் முந்தைய உரைகள் கடினமாக இருந்ததைக்

---

9. ரஸ்கின் மேற்கோள் எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழின் மறுமலர்ச்சி ப. 82.

கண்டும், இப்பெரும் நூல்கள் மக்களிடம் பரவவேண்டும் என்று கருதியும், தாம் எளிய நடையில், சிறிய அளவில் இவற்றிற் கான புத்துரைகள் வகுத்திருப்பதாக அவர் கூறுவதும் அவர் நடைப்போக்கின் நோக்கினைக் காட்டும். சிவஞான போதம் முதல் நூற்பாவின் கருத்தாகப் 'பொறிக் காட்சிக்குப் புலப்படும் உலகத் தோற்றத்திற்குக் காரணன், அக்காட்சிக்குப் புலப் படாத இறைவன்'' எனச் சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறும் உரை நினைத்து இன்புறத்தக்கது. உரைத்திறன் பற்றிய பகுதியில் முன்னரும் இது பற்றி விரிவாகப் பேசப்பட்டது.

வ. உ. சி.யின் நடைச்சிறப்புகளில் குறிக்கத்தக்கது அவர் தம் தருக்கநெறிப்பட்ட நடை. வழக்கறிஞராய் வாழ்வினைத் தொடங்கிய வ. உ. சி. அத்துறையில் பெற்ற புலமையினைத் தமிழாய்வில் பயன்படுத்தியமை கருதத்தக்கது. ஆராய்ச்சித் துறையில் வழக்கறிஞர் பரம்பரை ஒன்று உருவாகி வ. உ. சி. டாக்டர் சோமசுந்தர பாரதியார், எஸ். வையாபுரிப் பிள்ளை, டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, டாக்டர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் என்று தருக்க நெறியிலும், உண்மைத் தன்மை யிலும், அறிவியல் பார்வையிலும் இவர்கள் சிறந்த திறனாய்வு நூல்களைத் தந்ததை இங்கே நினைவு கூர்ந்து மகிழலாம். இந்த மரபின் தலைமகனாய் வ. உ, சி. தமிழ்த் தொண்டாற்ற முன் வந்தபோது, தம் வாதத் திறனை, உரைத்திறன் காணப் பயன் படுத்தியமையை இங்குக் குறிப்பிட வேண்டும்.

'திருக்குறள் பாயிர ஆராய்ச்சி' என்ற தலைப்பில் தமிழ்ப் பொழிலில் (1928-30) அவர் எழுதிய கட்டுரைகளில் செறிந்த, தருக்க நெறி சார் நடைவன்மையைக் காணலாம்.

''ஏற்புடைக் கடவுள் வாழ்த்து என்பது நூலாசிரியர் இயற றத் துணிந்த நூற்கு ஏற்புடைக் கடவுளை நூலாசிரியனே வாழ்த்தி வனங்குதல் என்று கூறலாகாதோவெனின் ஆகாது என்னை? நூலியற்றும் அறிவும் ஆற்றலுமுடையான் தான் வழிபடு கடவுளையன்றிப் பிறிதொரு கடவுள் உன்டெனக் கொள்ளான், வாழ்த்தான், வணங்கானாகலான்'' (தமிழ்ப்பொழில். ப. 333). இங்குப்பழந்தமிழ் உரையாசிரியர்கள் தம் செம்மாந்த நடைச்

சாயலைக் கண்டு வியக்கின்றோம். தர்க்க நெறியில் தம் கருத்தினை வலியுறுத்தும் துணிவு கண்டு பாராட்டுகின்றோம். இப் பகுதியில் காணலாகும் அவர் தம் ஆய்வுப்பார்வை தனித்த சிறப்புடையது. அது பற்றிப் பின்னர் விளக்கப்படும்.

தமிழ்நூல்கள் என்ற கட்டுரையில் சிறந்த தமிழ் இலக்கியங்களை அவர் அறிமுகப்படுத்திய பாங்கு முன்னர் எடுத்துக் காட்டப்பட்டது. அவர்தம் முன்னுரைகள் ஆசிரியரின் நேர்மைத்திறம், அறிவுத்தெளிவு, படைப்பு நோக்கம் ஆகியவற்றை வெளிப்படையாகப் பேசும். அவற்றுவழி அவர்தம் சொல்லாற்றலையும் 'உண்மை' நாடும் தூய உள்ளத்தையும் பணிவு நலனையும் காணமுடிகிறது.

## ஆராய்ச்சிப் பார்வை

வ. உ. சி. யின் படைப்பாற்றல் திறனில் சிறப்பாகக் குறிக்கத் தக்கது திட்ப நுட்பஞ் செறிந்த, தருக்க நெறிப் பட்ட அவர் வாதத் திறனாகும் என்று கண்டோம். தமிழ் நூல்களுள் தோய்ந்து, உண்மை நலங்காணும் வேட்கையில் ஆராய்ச்சியாளராக அவர் தம்மை வெளிப்படுத்தும் திறனை இங்குச் சுட்டிக் காட்ட வேண்டும். இவர்தம் ஆராய்ச்சி நோக்கிற்கு, திருக்குறள் பாயிரம் பற்றிய கட்டுரை ஒன்று போதும்.

தமிழ்ப் பொழில் 1929-30 இல் வெளிவந்த ஐந்தாம் துணரில் 'திருவள்ளுவர் திருக்குறள் பாயிர ஆராய்ச்சி' என்ற தலைப்பில் மூன்று கட்டுரைகள் காணப்படுகின்றன.

கடவுள் வாழ்த்து வான் சிறப்பு, நீத்தார் பெருமை மூன்றும் சிறப்புப் பாயிரம். அறன் வலியுறுத்தல் பொதுப்பாயிரம். சிறப்புப் பாயிரத்துள் காணப்படும் மூன்று அதிகாரங்களும் வள்ளுவரால் இயற்றப்பட்டன அல்ல எனக் கொள்வதே பொருந்தும். அவற்றை நீக்கினால் 133 அதிகாரங்கள் 130 ஆகக் குறையும். 130 என்று ஒரு தொகையாகக் கொள்வதும் எளிது என்று ஆய்வினைத் தொடங்குகின்றார். தம் கோள் நிறுவ அவர் காட்டும் தருக்க நெறிப்பட்ட கருத்துக்கோவை கீழ்வருமாறு அமைகிறது :

1. துறவறவியலில் மெய்யுணர்தல் வருகிறது. அப்படியாயின் பாயிரத்தில் வரும் நீத்தார் பெருமை தேவையா? மிகை எனக் கொள்ள வேண்டும். வான் சிறப்போ வழிபாட்டு நோக்கமுடையதன்று.

2. மூன்று அதிகாரங்களும் ஏனையவை போலச் சொற்சுவை பொருட்சுவை உடையன அல்ல. அவை வெள்ளைப் பாக்கள்.

3. திருவள்ளுவ மாலையை வைத்துக் கொண்டு த. கனகசுந்தரம் பிள்ளை பாயிரம் பற்றிப் பேசுகிறார். நீதிபதி கனம் சேஷகிரி அய்யர் தலைமையில் திருவள்ளுவ மாலை பாடிய புலவர்கள் வள்ளுவர் காலத்தினர் அல்லர் பிற்காலத்தினர் என மெய்ப்பித்துள்ளார் என்று சான்று காட்டி நிறுவும் வ. உ. சி. "அவ்வியாசத்தைத் தேடியெடுத்து அச்சிட்டு வெளிப்படுத்துவதற்கு யான் முயன்று கொண்டிருக்கிறேன்" என்று தம் ஆர்வத்தையும் குறிப்பிடுகின்றார். திருவள்ளுவ மாலை பற்றிய ஆய்வுக் குறிப்பு வள்ளுவர் ஆராய்ச்சியில் குறிக்கத்தக்கது என்பதை நாம் அறிவோம். அந்த ஆய்வுக் குறிப்புச் சிதம்பரனாரால் சுட்டப் படுவது நோக்கத்தக்கது.

4. "உரையாசிரியர்களிடத்துத் தமிழ்ப் புலவர்கள் கொண்டுள்ள அளவு கடந்த அன்பும் மதிப்பும் நூலாசிரியரிடத்து அவர்கள் செலுத்த வேண்டிய அன்பையும் மதிப்பையும் அவர் அறியாமலே குறைக்கின்றன. உரையின் தவறுகளைப் பொருத்தமற்ற உரையைப் பொருத்தமற்றதெனக் கூறமாட்டார்கள் புலவர்கள். இவர்கள் மூன்று அதிகாரங்களும் வள்ளுவருடையன அல்ல என்று சொல்ல விடுவார்களா?" என்று புலவர் கூட்டத்தின் மீது சிற்றங் கொண்டு துணிந்து தம் கருத்தை நிலைநாட்ட முனைகிறார்.

5. கடவுள் வாழ்த்துக் கூறுவது பிற்கால வழக்கு. கடவுள் வாழ்த்தின் கடவுள் பற்றிய இலக்கணத்திற்கும் மெய்யுணர்தலில் வரும் இறை இலக்கணத்திற்கும் கருத்துப் பொருத்தம் இல்லை. பரிமேலழகர் தம் கற்பனைத் திறத்தாலேயே பொருத்தம் காண்பார் என்கிறார்.

6. முதற் குறள் பற்றிய வ. உ. சி. கருத்து - ஆதி, பகவன் இவையிரண்டும் ஆரியச் சொற்கள்.

"ஒப்புயர்வற்றதொரு நூலைத் தமிழ் மொழியில் சொல்லப் புகுந்த தமிழ்ப் புலவனான தமிழ்மகன் ஒருவன் தன் நூலின் முதற்பாவின் கண்ணே ஆரியச் சொற்கள் இரண்டைப் புகுத்தானென்றல் சைவசமயத்தைப் போதிக்கப் புகுந்த சைவ ஒழுக்கமுடைய சைவ மகனொருவன் புலால் உண்டான் என்றலையொக்கும்" எனக் கடுமையாகத் தாக்கிவிட்டு,

'எழுத்தெல்லாம்' என்றால் தமிழா? ஆரியமா? உலக மொழிகளா? எனக் கேட்கிறார். அகரத்தை முதலாகக் கொள்ளாத மொழிகளும் உண்டு. ஆயின், ஆதியும் பகவனும் தமிழ்ச் சொற்களே என்று கூறும் வாயடிக் கையடிக்காரருடன் போர்புரிய எனக்கு ஆற்றலில்லை" எனத் தெளிவுபடுத்தி விடுகிறார்.

"ஆதி பகவன் என்று ஏற்றுக்கொண்டால், புலைச்சி அந்தணன் என்ற பொய்க்கதை மெய்க்கதை எனக் கொள்ளும் புல்லறிவாளர்க்கே சாலும்".

"இப்பா இவ்விரண்டு சொற்களைக் கொண்டிருத்தல் ஒன்றே இப்பா மேற்கூறிய பொய்க்கதையை மெய்யெனக் கொண்ட பிற்காலத்துப் புலவன் ஒருவனால் பாடப்பட்ட தென்பதற்குப் போதிய சான்றாம் என்பது என் துணிவு"

இனி உலகு என்னும் சொல்லையும் தனித்தமிழ்ச் சொல்லென்று சொல்வதற்கும் இடமில்லை. பிறப்பு என்னும் வாய்பாட்டுச் சொல் ஒன்றில்லாமல் வெண்பாவின் இறுதிச் சீராக முடிந்து வருவது வழக்காயினும் அவ்வாறு அச்சீரில் வெண்பா முடிவது அவ்வளவு சிறப்பன்று' என்று இலக்கண வழியிலும் மறுக்கின்றார்.

இறுதியில் சொல், பொருள் இழுக்குகளை வைத்து - அப்பா-வினைப் பார்க்கையில், "நம் திருவள்ளுவர் இயற்றினார் என்றல் அவரது புலமையையும் பெருமையையும் பழித்ததேயாக அப்பழிப் பினைச் செய்யத் துணிந்தாரே இப்பா அவருடையதென்பர், ஏனை யோர் இப்பாவை அவருடையதென்னார்".

இங்கு வ. உ. சி. யின் முடிவுகள் பற்றிய வன்மை, மென்மை பற்றிய கவலை நமக்கு வேண்டா. ஆயின் அக்காலத்தில் பண்டிதர்கள் மேலாண்மை செலுத்தித் தமிழ் இலக்கியங்களைத் தம் உடைமைகளாகப் போற்றி வந்த நாளில் வ.உ.சி. தம் நெஞ்சத்துணிவாலும்,நேர்மைத் திறத்தாலும், மரபு வழிப்பட்ட இலக்கிய நம்பிக்கைகளை அசைத்துப் பார்த்து, மிகவும் போற்றப்படுகின்ற பேரிலக்கியம் ஒன்றினுடைய பாக்களின் உண்மைத்தன்மையைச் சோதிக்க முன்வந்ததே மிகுந்த வியப்பிற்குரியதாம். இங்கு வ. உ. சி. யின் தருக்க நெறிப்பட்ட ஆராய்ச்சிப் போக்கினைக் கண்டு வியக்கத்தான் செய்கிறோம்.

சொல்லாராய்ச்சி, சான்றாதாரங்கள் காட்டல், சமகாலக் கோட்பாட்டினை எடுத்து நிலைநாட்டல், காரண காரியத் தொடர்புடன் கருத்துக்களை விளக்கல், முடிவுகளைத் தெளிவாகவும் உறுதியாகவும் நிலைநாட்டல், மாறுபட்ட கருத்துப் போக்குகளைக் கடுமையாக விமர்சித்தல் என்ற பல்திற ஆய்வு நெறிகளைக் கொண்ட இக்கட்டுரைகள் வ. உ. சி. யின் ஆய்வு மனப்பான்மையையும், திறனாய்வுச் சிந்தனையையும், உண்மை காணும் உயர் வேட்கையையும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

வ. உ. சி. என்ற கவிஞர், உரையாளராய் வளர்ந்து, ஆராய்ச்சியாளராய் உயர்ந்த கதை இது.

இதுவரை வ. உ. சி. என்ற படைப்பாளியின் உரைத்திறன்களைப்பல்வகை நிலைகளில் கண்டோம்.

"பொருளின் திட்பம், தெளிவு முதலியவற்றையே முக்கியமாகக் கொண்டு ஒருவன் தனது ஆத்மகுணம் தோன்றவும், தனது நோக்கம் நிரம்பவும் வசனத்தை அமைத்தலே தமிழின் மறுமலர்ச்சிக்கு அறிகுறியாகும்"[10] என்பார் எஸ். வையாபுரிப் பிள்ளை. தமிழ் உரைநடை மறுமலர்ச்சிப் பாதை வகுத்தவர்களில் வ. உ. சி. க்குத் தனியிடம் உண்டு என்று மதிப்பிடுதல் வாயிலாக அவர்தம் நடைநலச் சிறப்பினைப் புலப்படுத்தி விடலாம். முன்பு

10. மேற்படி ப. 96.

சுட்டியது போலப் பாரதி கவிதைத் தமிழுக்கு மறுமலர்ச்சி கண்டார். சுப்ரமண்ய சிவம் பத்திரிக்கைத் தமிழில் மறுமலர்ச்சியினை உருவாக்கினார். வ. உ. சி. உரைநடைத் தமிழில் புதுமைகள் கண்டு, மறுமலர்ச்சிக்கு வித்திட்டார். விடுதலைப் போர்க்காலத்துத் தமிழ் வளர்ந்த வரலாற்றில் இவர்கள் சிறந்த தமிழ்த் தொண்டு நிலைத்த புகழுக்குரியது என்பதும் பெறப்படும்.

## தமிழ் தந்த வ. உ. சி.

"எனது இருபதாவது வயது முதல் யான் கனவிற் கண்டு வந்த "நூலாசிரியன்" என்னும் பெயரினை யான் நனவிற் காணச் செய்தது". [11] தமது சிறைவாசமே என்று வ. உ. சி. குறிப்பிடுகின்றார். கவிராயர் பரம்பரையில் தோன்றிய வ. உ. சி. வாழ்விற்கு வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார். சூழல் அவரைத் தேசபக்தராய் மாற்றிப் போராட்டத்தில் ஈடுபடுத்தியது, செயற்கருஞ் செயலாய் அலைகடல் நடுவில் அந்நியரை எதிர்த்துக் கலஞ் செலுத்தி வரலாறும் படைத்தார். பொருளை இழந்தும், பொன்னை இழந்தும் மண்ணை அந்நியப் பிடியிலிருந்து நீக்கும் ஆசையினை விடவில்லை. அரசு அவரைச் சிறைப்படுத்தியது. அங்குத் தமிழ் அவரை அகப்படுத்தியது. செக்கிழுத்த சிதம்பரனாரைச் செந்தமிழ்ச் சிதம்பரனாராய் மாற்றியது. தமிழுலகின் நன்றி கொல்லும் பண்பு, ஒருவகையில் நன்மையே பயத்தது. வ. உ. சி. என்ற கர்மவீரரின் படைப்பு உள்ளம் விழித்தெழுந்து, தமிழ்த் தொண்டிற்கான புதுப்பாதையினை வகுத்தது.

தமிழுக்குப் பழந்தமிழ் நூல்களின் புதிய பதிப்புகள் கிடைத்தன. சிவஞான போதம் எளிய உரையால் மக்கள் இடையில் நடமாடத் தொடங்கியது. தொல்காப்பியம் முதன்மை பெற்றது. தமிழுக்கு ஆக்கம் தரும், மொழிபெயர்ப்புத் துறை புத்துயிர் கண்டது. உரைநடைத் தமிழ் உயர்தற்கான வழிமுறைகள் வகுத்துரைக்கப் பெற்றன.

---

11. வ. உ. சி., மெய்யறம், 1914, முதற்பதிப்பு, நன்றிகூறல்

வ. உ. சிதம்பரனாரின் செந்தமிழ்ப் பணிகள் பொருள் நோக்குடையன அல்ல. தமிழ் வாழ வேண்டும் என்ற அருள் நோக்குடையன. வறுமைப்பிடியில் அகப்பட்டு, நெய் வியாபாரமும், அரிசி வியாபாரமும் செய்து, அறிவாற்றல் மிக்க வழக்கறிஞர் அல்லற்பட்ட காலத்தில், செய்த தொண்டு அவர் தமிழ்த்தொண்டு என்பதையும் எண்ணிப் பார்த்து நெகிழ்கின்றோம்.

28-3-1935 இல் த. வேதியப்ப பிள்ளைக்கு எழுதிய கடிதத்தில் "திருவள்ளுவர் திருக்குறளுக்கு யான் இயற்றியுள்ள உரையில் அறப்பால் புத்தகம் இதனுடன் Book-post இல் வருகின்றது. இதனையும் வாங்கிப் படிப்பார் தமிழ் நாட்டில் இரார் என்றுதான் தோன்றுகிறது"[12]. என்று வ. உ. சி. குறிப்பிடுவதிலிருந்து பொருள் இழப்பை எதிர்நோக்கியே பொருளார்ந்த தமிழ்த் தொண்டாற்றியுள்ளார் எனத் தெரிகிறது.

4-6-1935 இல் வ. திருவரங்கப்பிள்ளை எழுதிய கடிதத்தில் "தங்கள் 2 ஆம் தேதிய கார்டு. "அகமே புறம்", 'மெய்யறம்' ஆகியவற்றின் விலையைப் பிரதி ஒன்றுக்கு நான்கணாவாய்க் குறைத்துள்ளேன். இருப்பினும் இந்தக் குறைந்தவிலையில் 25 சதவீதம் கமிஷன் அளிக்கிறேன்"[13]. என்று கூறுவது அவர் தம் பெருந்தன்மையைக் குறிப்பது மட்டுமன்று; பொருள் பெறும் நோக்கமின்றி அறிவுச் செல்வம் மக்கள்மன்றில் பரவ வேண்டும் என்ற அவாவினையே காட்டுவதாக அமைகின்றது.

வ. உ. சி. யின் மொழிபெயர்ப்பு நூல்கள் வெளிவரப் பெரு மக்கள்-குறிப்பாக த. வேதியப்பபிள்ளை, சேலம் ஸ்ரீ. ச. இராஜ கோபாலாச்சாரியார் நிதியுதவி செய்ததும் அவர்தம் புலமையை அன்றைய தமிழுலகம் மதித்ததற்குச் சான்றாகின்றது.

'ஞானபானு'வில் 'அகமே புறம்' விமர்சனம் செய்யப் பெற்றது. தம் காலத்திலேயே தமது நூல்கள் பெற்ற செல்வாக்கினைக் கண்டு மகிழும் பேறும் வ. உ. சி.க்குக் கிடைத்தது.

---

12. வ. உ. சி. கடிதங்கள், தொகுப்பு, ஆ. ரா. வெங்கடாசலபதி ப. 120.

13. மேற்படி ப. 122.

"அவரது நூலின் மொழிபெயர்ப்பாகிய இந்நூலின் சிறப்பு எவரும் எடுத்துக் கூறாமலே விளங்கும். இந்நூல் சுலபமான செந்தமிழில் எழுதப்பெற்று, ஜீவித கால மர்மத்தை நன்கு வெளிப்படுத்துகின்றது. துக்கமற்று வாழவிரும்பும் ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய புஸ்தகம் இது... இது உயர்ந்த காகிதத்தில் அழகாக அச்சிடப்பெற்றிருக்கின்றது. இதன் காகிதம் முதலியன சுதேசியம்".

"மெய்யறம்" என்ற நூலை மதிப்பிட்டுச் சுப்பிரமணிய சிவம் எழுதிய உரை குறிக்கத்தக்கது.

'இல்வாழ்க்கையில் உயிர்துணை கொள்ளல்' என்னும் அதிகாரத்தில் 'துணையிழந்தாரை மணப்பது புண்ணியம்' என்று பிள்ளையவர்கள் எழுதியிருக்கின்றனர். இதனால் இவர் விதவாவிவாகம் செய்யலாம் என்று தெரிகிறது. விவாகம் செய்யலாம் என்று மாத்திரம் அன்று. புண்ணியம் என்றும் கூறியிருக்கின்றனர். ஆதலால் நமது தேச நன்மைக்கு விதவா விவாகம் அவசியம் என்பது இவர் கருத்துப்போலும். 'நாம் இவ்வபிப்பிராயத்திற்கு முற்றிலும் மாறுபடுகின்றோம்,

அரசியல் ராஜாங்க விவகாரங்களில் மனத்தைச் செலுத்துகின்ற ஒவ்வொருவரும் பார்த்து மனனம் பண்த்தக் கது. நாம் பிள்ளையவர்களுடன் நெடுநாளாக நெருங்கிப் பழகியிருக்கின்றோமாயினும் அவருக்கு ராஜ தருமத்தில் இவ்வளவு அறிவிருக்குமென்று நாம் நினைக்கவில்லை. அரசியல் படிக்கப் படிக்க ஆனந்தத்தைத் தருகின்றது. அறிவைப் பெருக்குகின்றன.

சுருங்கச் சொல்லின் இப்புத்தகம் மிகச் சிறந்தது என்பதிலும் அனைவரும் படிக்க வேண்டியது என்பதிலும் சந்தேகம் இல்லை. பள்ளிக்கூடங்களில் மாணவர்கட்கு இந்நூல் பாடப் புத்தகமாக வைக்கப்படுதல் நன்று" [14] என்ற பாராட்டுரை சிதம்பரனார் நூல்களுக்கு அவர் காலத்திலேயே தகுந்த மதிப்பும் மரியாதையும் இருந்தது என்பதைக் காட்டுகின்றது.

---

14. மேற்கோள், பெ. சு. மணி, வீரமுரசு சுப்பிரமணிய சிவா, ப. 268.

ஆனாலும் அவர் வாழ்ந்த காலத்தில் அவர்தம் படைப்புகளைத் தமிழுலகம் முழுவதும் ஏற்றுப் போற்றியிருப்பின் தமிழறிஞர் வரிசையில் அவரை முன்னிறுத்தியிருப்பார்கள். தமிழ் ஆராய்ச்சி வரலாற்றில் அவர் பங்களிப்பு பற்றிப் போற்றியிருப்பார்கள். அவர்தம் அரசியல் தொண்டினை முதன்மைப் படுத்தியவர்கள் மொழித் தொண்டினைப் பெரிதெடுத்துப் பேசவில்லை. இக்குறையினைப் பெ. நா. அப்புஸ்வாமி உணர்ந்து சுட்டுகின்றார். "அந்நாளில் எல்லாம் தமிழுலகம் அவரை அவ்வளவு பாராட்டியதில்லை. ஆனால் உண்மை உழைப்பாளிகள் பாராட்டை நாடி உழைப்பதில்லை. பாராட்டை உதறித் தள்ளாவிட்டாலும் கூடப் பாராட்டின் பொருட்டாகவும் உழைப்பதில்லை. ஆயினும் தன்னோடு பழகும் மக்கள் தன்னை உணர்ந்து பாராட்டுகிறார்கள் என்று தெரிந்தால் எத்தகைய மனமும் பூரித்து மகிழும். மேன்மேலும் செயல் புரிய ஊக்கம் பெறும். பாராட்டு இல்லாமையும் பொருட்படுத்தா அத்தகையவரைப் பாராட்டுவது நமது கடமை-காலம் தாழ்த்தியதால் நிரம்பப் பாராட்டுவது தகும்".[16]

இறுதிவரை மொழியில் தோய்ந்து கிடந்தது வ.உ.சி. யின் தமிழ் உள்ளம். அவர் மறைவதற்கு இரண்டு நாட்களுக்கு முன் அவரைச் சந்தித்த கெ. அனந்தராமையங்கார் கூறுகிறார். "கைகளைக் கட்டிக் கொண்டு 'என்னை மன்னித்து விடுங்கள்! உங்களைக் கண்டால் இரண்டு குறளை உங்களுக்குச் சொல்லி, இரண்டு செய்யுள் இராமாயணத்திலிருந்து நீங்கள் சொல்லக் கேட்டு இன்பமடைவேன். அதற்கும் இனிமேல் இயலாது. என்னை மன்னித்து விடுங்கள்! என்று தழுதழுத்த குரலில் பேசிய அவர் முகத்தைப் பார்க்கக் கண்ணீர் நிறைந்த கண்கள் மறுத்தன. சொல்லும் பதிலோ தொண்டையில் விக்கிக் கொண்டது. முகத்தை மூடிக் கொண்டு வீடு திரும்பினேன். இரண்டு நாளில் விடுதலை வீரர் விடுதலையடைந்த செய்தியைக் கேள்வியுற்றேன். இப்படியும் ஒரு தமிழ்க்காதலா? என்று பெருமூச்செறிந்தேன். என் நெஞ்சு பெருமிதத்தில் விம்மியது. திருக்குறளில் தோய்ந்த வ. உ. சி. இறுதியில் பாரதி பாடலில் கலந்து,

---

16. பெ. நா. அப்புஸ்வாமி

அதனைக் கேட்டுக் கொண்டே இவ்வுலகை விட்டுப் பிரிந்தார் என்ற செய்தியும் நாம் அறிவோம். தமிழ்க் காதலும் தேசபக்திக் கனலும் ஒருங்கிணைந்து உருவாக்கப்பட்ட பேரறிவாளர் தாம் வ. உ. சி.

''கவிராசனான பாரதி 'தமிழகத்தார் மன்னன்' என்று. வ.உ.சி. யைப் போற்றுகின்றான். கவிமணி ''ஒப்பிலா செந்தமிழ்ச் செல்வன்'' என்று வ. உ. சி.யைக் கொண்டாடுகிறார். நாமக்கல் கவிஞர் வ. உ. சி. யிடம் தேசபக்தியோடி 'வேதாந்த சித்தாந்த மணமே வீசும், என்று பாடுகிறார். இந்த மூன்று ஜனநாயகப் பெரும் புலவர்களின் மதிப்பீடுகள் வ. உ. சி க்கும் பொருந்தும்' என்று பெருமிதத்துடன் பாராட்டுவார் ஜீவா.

ஆம். வ. உ. சி. விடுதலை வீரர். தமிழ்க் காதலர். தத்துவ ஞானி. தமிழ் அவரைத் தந்தது. தமிழுக்கு அவர் கவிதை, பதிப்பு, உரை, கட்டுரை, 'திறனாய்வு என்று பல்துறைச் செல்வங் களைத் தந்து உயர்ந்தார். அதனால் தமிழும் உயர்ந்தது.

---

17. ப. ஜீவானந்தம், கலையும் இலக்கியமும், (இரண்டாம் பதிப்பு, 1975,)

## வ. உ. சி. அவர்களின் தமிழ்ப்பணி

**எழுதிய நூல்கள்**

1. மெய்யறிவு
2. மெய்யறம்
3. எனது பாடல் திரட்டு
4. வ. உ. சி. கண்ட பாரதி
5. சுயசரிதை

**மொழிபெயர்ப்பு நூல்கள்**

1. மனம் போல் வாழ்வு
2. அகமே புறம்
3. வலிமைக்கு மார்க்கம்
4. சாந்திக்கு மார்க்கம்

**உரை எழுதிய நூல்கள்**

1. இன்னிலை
2. திருக்குறள்
3. சிவஞானபோதம்

**பதிப்பித்த நூல்கள்**

1. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் (இளம்பூரணர் உரை)
2. தொல்காப்பியம் - சொல்லதிகாரம் (இளம்பூரணர் உரை)
3. சிவஞான போதம்

**அச்சு வடிவில் வந்த அரசியல் சொற்பொழிவு**

எனது அரசியல் பெருஞ்செயல்

**நடத்திய ஏடுகள்**

1. விவேகபாநு
2. தமிழ் நேஷனல் பத்திரிகை
3. இந்து நேசன்

**அச்சில் வராத நூல்கள்**

1. அழகும் ஆரோக்கியமும்
2. ஆயுளை நீடிக்கும் ஆறு
3. ஊழை வெல்ல உபாயம்
4. சிவ மதம்
5. விஷ்ணு மதம்
6. புத்த மதம்
7. இஸ்லாம் மதம்
8. கிறிஸ்து மதம்
9. மனித மதம்
10. முக்தி நெறி
11. திருக்குறள் - மணக்குடவர் உரை (இன்பம்)
12. திருக்குறள் - மணக்குடவர் உரை (பொருள்)
13. திலக .மகரிஷி

ஆதாரம் "தமிழரசு" (16-11-80).

# துணை நின்ற நூல்கள்

1. சிதம்பரனார், வ. உ. **அகமே புறம்,**
பாரி நிலையம். சென்னை 1, 1966.

2. ......................, **வலிமைக்கு மார்க்கம்**
பாரி நிலையம், சென்னை 1, 1982.

3. ......................, **மனம் போல வாழ்வு,**
பாரி நிலையம், சென்னை 1 1981.

4. ......................, **மெய்யறிவு,**
அகஸ்தியர் பிரசுரம்,
அம்பாசமுத்திரம், 1929

5. ......................——, **சுய சரிதை,**
பாரி நிலையம், சென்னை 1, 1946,

6. ......................, **சாந்திக்கு மார்க்கம்,**
பாரி நிலையம், சென்னை, 1981.

7. ......................, **வ. உ. சி. கண்ட பாரதி,**
1946.

8. ............(பதி. ஆ.) **தொல்காப்பியம் - இளம்பூரணம் எழுத்ததிகாரம்.**
விக்டோரியா பிரிண்டிங் பிரஸ்,
தூத்துக்குடி, 1941.

9. ......................, **தொல்காப்பியம் - இளம்பூரணம் - பொருளதிகாரம்,**
வேலாயுதம் பிரிண்டிங் பிரஸ்.
தூத்துக்குடி, 1928.

10. ............... (உரை.) **இன்னிலை,** அகஸ்தியர் அச்சுக்கூடம், அம்பாசமுத்திரம், 1930.

11. ......................, **சிவஞான போதம்,** அண்ணார் பிரஸ், தூத்துக்குடி (தே.இ.).

12. ......................., **தமிழ் நூல்கள்**, சுதேசமித்திரன் அனுபந்தம், 1918.

1. அரசு. ம. ரா (தொ. ஆ.), வ. உ. சிதம்பரனார் ஆய்வுக் குறிப்புகள், (கை. எ. பிரதி), தொகுதி 1,2, & 3.

2. அரவிந்தன், மு. வை., **உரையாசிரியர்கள்** மணிவாசக பதிப்பகம், சென்னை, 1983.

3. அருணாசலம், மு., **தமிழ் இலக்கிய வரலாறு பத்தாம் நூற்றாண்டு**, காந்தி வித்தியாலயம், மாயூரம், 1972,

4. இளங்கோவன் ம. ரா., **முற்காலத் தமிழ் இதழ்கள்**, சேகர் பதிப்பகம், சென்னை, 1979.

5. உதயமூர்த்தி, எம். எஸ்., **மனமும் பிரார்த்தனையும்**, வானதி பதிப்பகம், சென்னை, 1980.

6. கணேசலிங்கன், செ., **கலையும் சமுதாயமும்**, பரதன் பதிப்பகம், சென்னை, 1982.

7. கார்த்திகேசு சிவத்தம்பி மார்க்ஸ், **பாரதி-மறைவு முதல் மகாகவி வரை**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1984

8. கைலாசபதி, க., **பாரதி ஆய்வுகள்**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1984.

9. ..................... **இலக்கியச் சிந்தனைகள்**, விஜயலட்சுமி புத்தக சாலை, கொழும்பு, 1983.

10. கோதண்டராமன், பொன். **தமிழ் உணர்ச்சி, தமிழ் வளர்ச்சி தமிழ் ஆட்சி**, அம்புலி வெளியீடு, சென்னை, 1986.

| | |
|---|---|
| 11. சஞ்சீவி, ந., | **தமிழாய்வு**, சென்னைப் பல்கலைக் கழகம், 1973. |
| 12. சாலை இளந்திரையன் | **புதுத்தமிழ் முதல்வர்கள்**, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1972. |
| 13. சிவஞானம், ம. பொ., | **விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு**, இன்ப நிலையம், சென்னை, 1970. |
| 14. ..................... | **கப்பலோட்டிய சிதம்பரனார்**, இன்ப நிலையம், சென்னை, 1972. |
| 15. ..................... | **கப்பலோட்டிய தமிழன்**, இன்ப நிலையம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1947. |
| 16. ..................... | **தமிழும் கலப்படமும்**, இன்ப நிலையம், சென்னை, 1970. |
| 17. சிவத்தம்பி, க., | **தனித்தமிழ் இயக்கத்தின் அரசியற் பின்னணி**, சென்னை புக் ஹவுஸ், சென்னை, 1979. |
| 18. சுப்ரமண்ய ஐயர், எம். எஸ். | **வீர சிதம்பரனார்**, ஆசிரியர் நூற் பதிப்புக் கழகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1954. |
| 19. சுப்பிரமணிய பிள்ளை, | **நெல்லைப் புலவர் பெருமக்கள்**-முதற்புத்தகம், கழக வெளியீடு, 1959. |
| 20. ஞானசம்பந்தன், அ. ச., | **தேசிய இலக்கியம்**, மணிவாசகர் நூலகம், சென்னை, 1978. |
| 21. ..................... | **இன்றும் இனியும்**, பாரி நிலையம் சென்னை, 1968. |

22. புலவர் அரசு, **நம் நாட்டுத் தலைவர்கள்**, இரண்டாம் புத்தகம், வீர சிதம்பரனார். கழகம், சென்னை. மறுபதிப்பு, 1970.

23. புலவர் மணியன், **விடுதலை வீரர் வ. உ. சி. வாழ்வும் இலக்கியமும்**, மாப்பிள்ளைப் பதிப்பகம், சென்னை, 1976.

24. மணி, பெ. சு.. **வீர முரசு சுப்பிரமணிய சிவா**,

25. மணியன், இரா., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1986

26. ரகுநாதன், **விடுதலை வீரர் வ. உ. சி. வாழ்வும் இலக்கியமும்**, மாப்பிள்ளைப் பதிப்பகம், சென்னை, 1976.

27. ராஜாஜி, **காலமும் கருத்தும்**, மீனாட்சி புத்தக நிலையம், **கட்டுரைகள்**, பாரதி பதிப்பகம், சென்னை, 1955.

28. வரதராசன், மு. **திரு. வி. க.**, பாரி நிலையம் 1983.

29. வள்ளிநாயகம், தி.நெ. **செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார்**, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1975.

30. வானமாமலை, நா., **தமிழர் பண்பாடும் தத்துவமும்**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. 1978.

31. வெங்கடாசலபதி ஆ. நா., **வ. உ. சி. கடிதங்கள்** சேகர் பதிப்பகம், சென்னை, 1984.

32. வேலுப்பிள்ளை. ஆ., **தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்**, பாரி புத்தகப்பண்ணை, சென்னை, 1978..

33. வையாபுரிப் பிள்ளை. எஸ்., **தமிழின் மறுமலர்ச்சி** பாரி நிலையம் சென்னை, 1953.

34. ......................, **தமிழ்ச்சுடர்மணிகள்**, பாரி நிலையம், சென்னை, 1962

35. ஜான் சாமுவேல், ஜி. **இலக்கியத்தில் சமுதாயப் பார்வை**, ஐந்திணைப் பதிப்பகம் சென்னை, 1984.

36. ஜீவானந்தம், ப., **கலையும் இலக்கியமும்** 1975.

37. **மகாகவி பற்றி சோவியத் அறிஞர்கள்** சோவியத் நாடு பிரசுரங்கள், 1982.

38. **பாரதியார் கவிதைகள்**, வானவில் பிரசுரம். சென்னை, 1981

39. **பாரதியார் கட்டுரைகள்**, வானதி பதிப்பகம், டிசம்பர் 1981.

40. **மொழிபெயர்ப்பு பண்பும் பயனும்** தொகுப்பு, வளர்மதி பதிப்பகம் சென்னை, முதற்பதிப்பு, டிசம்பர் 1984.

**ஆங்கில நூல்கள்**

1. Allen James, **As a man thinketh and other books**, Kazhagam, 1967.

2. ......................, **Man : King of Mind Body and circumstance**, Kazhagam, 1968.

3. Boulton, Marjorie, **The Anatomy of Prose**, Kalyani publishers, New Delhi, 1979.

4. Feys, J (S. J.), **Sri Aurobindo : Yoga, Religion and** Mysticism, University of Madras, 1977.

5 Gopalan Nair, V. & Velayuthan, S. (Eds.) **Contemporary Prose,** Oxford University Press, Madras, 1980.

6. Kumar, Amelia, D. Poe's, **The Philosophy of Composition,** Cynthia House, 1981.

7. Sivagnanam, M. P. **The History of the growth of Tamils during the Indian war of Independence,** University of Madras, 1980.

8. ......................, **The great Patriot V. O. Chidambaram** Pillai, Inbha Nilayam, Madras, 1972.

**மலர்கள் :**

1. உலகத் தமிழ் மாநாடு, தீக்கதிர் சிறப்பு மலர், 1982.

2. விடுதலைவீரர் வ. உ. சி. நூற்றாண்டு விழா மலர், புக்ஸ் வொர்ல்டு, கோவை, 1972.

3. சுடர் - பாரதி மலர் - தில்லித் தமிழ்ச் சங்கம், 1961.

4. செந்தமிழ்ச் செல்வி, நாற்பத்தேழாம் சிலம்பு.

5. வ. உ. சிதம்பரம் பிள்ளை மலர், பம்பாய்த் தமிழ்ச் சங்கம், 1951.

6. V. O Chidambaram, Centenary Souvenir, 1972.

**இதழ்கள் :**

1. எல். ஜி. இராமானுஜலு நாயுடு (பதி.), ஆனந்த குண போதினி, மாதவெளியீடு, 1926 (அக்டோபர்).

2. 'குறளியம்' - திங்களிதழ் - 15-8-1980.

அஞ்சாமை-40
அண்ணாத்துரை-18
அந்நியமொழி ஆர்வம்-11
அநந்தராம அய்யர்-38
அப்புசாமி பெ. நா. -68, 104
அமிர்தகுணபோதினி-7
அரசியல் பூசல்-24
அரவிந்தர்-14
அருமைப்பாடு-36
அலிப்பூர் வெடிகுண்டு-68
அறப்பால்-47
அறம்வளர்த்தநாதன்-49
அறவாணன் க. ப. -23
அறிவியல் முறை-34
அனந்தராமையங்கார்-104
ஆங்கிலமோகம்-1
ஆத்திசூடி-12
ஆந்திரர்-9
ஆநந்தகுணபோதினி-8
ஆய்வுநாட்டம்-40
ஆழ்வார்களாதியோர்-39
ஆன்மஈடேற்றம்-65
ஆன்மநலம்-65
ஆன்மா-93
ஆனந்த குணபோதினி-85
இடைச் செருகல்-38, 43
இடையர்-29
இராமச்சந்திரன் சி. ஈ. 19
இராமநாதன் ப-46
இராஜகோபாலாச்சாரியார் ச-109
இராஜாக்கள் 5
இலக்கண நுட்பங்கள்-39
இலக்கிய வரலாறு-52
இளம்பூரணர் உரை-28, 56
இன்னிலை-35, 37
ஈசுவரகீதை-55
உணர்ச்சி வேகம்-35

உதயணகுமார காவியம்-54
உயிர்நாடி-41
உரைஞன்-91
உரைத்திரன்-40
உரைவிளக்கப்பகுதி-24
உலகநீதி-12
எட்டுத்தொகை-54
எழில்முதல்வன்-26
ஏட்டுப்பிரதி-39
ஒத்துழையாமை-20
ஓர்ட்ஸ் ஓர்த் -65
ஓலைச்சுவடி, 48
ஔவை சு. துரைசாமிப்பிள்ளை -46
கண்ணனூர் 20
கந்தழி 39
கம்பன் 58
கம்பன் கழகம் 16
கர்நாடக சங்கீதம் 6
கரந்தைத் தமிழ்ச் சங்கம் 34
கருத்துப் புரட்சி 73
கல்கத்தா காங்கிரஸ் 17
கல்லாடர் 33
கல்வெட்டுப் புலவர்கள் 39
கவிராயர் 70, 101
கன்னியப்ப முதலியார் -31
கனக சுந்தரம். த -31, 98
கஸ்தூரி -13
காந்தி -11
காப்பியங்கள் -54
காரனேடின் ஹைஸ்கூல் 28
கீழை நாட்டுத் தத்துவஞானி 65
குமாஸ்தா -13
குறுக்குச் சாலை 44
குஜராத்தியர் -9
கைந்நிலை 37
கொன்றை வேந்தன் -12
கோயம்புத்தூர்-66

கோரல் மில்தொழிலாளர் 19
கோவேந்தன்-79
சகசானந்தர்-29, 69
சங்க நாதம்-20
சட்டப் படிப்பு-40
சண்முக சுந்தரம். ஆ-1
சமரச ஞான உணர்வு-47
சரீர உடைவு-76
சரோஜினி தேவி-11
சாமிநாதையர். உ, வே-27
சாமுவேல் பிள்ளை-31
சாலை இளந்திரையன்-27
சித்தாந்த சாத்திரப் பொருண்மை-45
சித்தாந்தப் பேருண்மை-40
சிதம்பரநாத செட்டியார்-28
சிவஞான போதம்-21, 40, 41, 95
சிவஞானம். ம. பொ-90
சிவத்தம்பி. கா-83
சிற்பி-77
சிறைவாசம்-101
சீனிவாசராகவன். அ.-21
சுதந்திரப் போராட்டம்-14
சுதேசமித்திரன்-2, 35, 86
சுப்பிரமணிய சிவா-10, 82, 66, 101
சுப்பிரமணிய பிள்ளை-இ. மு. 28
சுப்பிரமணியம் வ. உ. சி.-57
சுயசரிதை-13
சூத்திரசாரம்-44
சூரத் நகர்-18
செக்கு-19
செந்தமிழ்ப்பண்-38
செய்வினை-84
சேதுப்பிள்ளை. ரா. பி-86
சேனாவரையர்-84
சேஷகிரி அய்யர்-98
சொர்ணம் பிள்ளை. த. மு-33,32
சோமசுந்தர சுவாமிகள்-44

சோம சுந்தர பாரதியார்-96
சோழன்-58
ஞானபானு-51. 83, 87
ஞானவாழ்வு-41
தத்துவங்கள்-40
தமிழ் உலகம்-35
தமிழ்க் கவிதை-74
தமிழ்க் கீர்த்தனை-6
தமிழ்த்தொண்டு-35
தர்ம சாஸ்திரம்-17
தருக்கநெறி-97
தறுகண்மை-40
தாந்தே-65
தாமோதரம் பிள்ளை. சி. வை-8, 27
திருக்கண்ணபுரம் சௌரிப்
பெருமானரங்கன்-54
திருச்சி நேசன்-8
திருச்செந்தூர் முருகன்-48
திருநெல்வேலி-12
திருவரங்கப் பிள்ளை. வ-102
திருவள்ளுவமாலை-98
திரு. வி. க.-29
தில்லையாடி வேதியப்ப பிள்ளை-36
திலகர்-11
திறனாய்வாளர்-25
தினமணி-41
தீவிரவாதி-18
துக்கப்புகை-73
துணிகரம்-35
துன்பநெருப்பு 73
தூத்துக்குடி-16, 31
தெய்வ வாழ்வு-78
தென்னாட்டுத் திலகர்-17
தேசபக்தி-81
தேசாபிமானிகள் சங்கம்-19
தேசியத் தலைமை-17
தேவாரம்-54

தொல்காப்பியம்-27
நச்சினார்க்கினியம்-31
நன்னூல்-30
நாலடியார்-39
நாவல்கள்-8
நான்மணிக்கடிகை-39
நிதிஉதவி 34
நிஷ்காமிய கருமம்-93
நீறுபூத்த நெருப்பு-64
நேரு-11
பகவத்கீதை-55
படைப்பிலக்கியப் பதிப்புப்பணி-24
பண்டிதர்-36
பதிப்பாசிரியன்-32
பதிப்புத்தொழில்-34
பதினெண் கீழ்க்கணக்கு-35
பாலி. சு. சண்முகசுந்தரம்-47
பரிமேலழகர்-29
பருந்துப் பார்வை-53
பரோக்ஷஞானம்-93
பலமதக் கோட்பாடு-43
பழகுதமிழ்-91
பழமொழி-75
பன்மொழிப் புலவர்-17
பாண்டித்துரைத்தேவர்-15
பாரத புத்ரன்-87
பாரதி-4,82
பால்நாடார் ஏ. சி. - 21, 84
பாலசுப்பிரமணியம் சி. -26
பிபின் சந்திரபாலர் 19, 63
பிரபஞ்சம்-75
பிரபுலிங்கலீலை-54
பிராமணரல்லாதார்-28
பிளேடோ-65
பி. ஸ்ரீ - 22
புத்தர் கோட்பாடு-65
புத்துரை-80

புல்லறிவாளர்-40
புறப்பொருள்-75
பூதத்தார் அவையடக்கு-37
பெரம்பூர் - 29, 60
பெரியபுராணம்-54
பெரியார்-10
பெருந்தேவனார்-37
பெருமாள். சி. அ-13
பென்ஸன். ஏ. வி-51
பேச்சுத்தமிழ்-24
பேராசிரியர்-54
பொதுமக்கள்-9
பொய்கையார்-39
போலிநூல்-40
மகாகவி பாரதி-61
மகா பாரதம்-21
மகுடம்-4
மஹாராஷ்டிரர்கள்-9
மடாதிபதிகள்-4
மணி பெ. சு. 52, 89
மாடர்ன் ரெவியூ-2
மாம்பழம்-75
மாஜினி-58
மீனாட்சி சுந்தரனார், ி ; பா. 96
மு. வ. 23.
மூத்ததலை முறை-80
மூலாதார வொழுக்கம்-77
மூலிகை-73
மெய்ஞ்ஞானம்-79
மொழிபெயர்ப்பு-42
மொழிபெயர்ப்புத்துறை-101
மொழிபெயர்ப்புப்பணி
மோட்ச ராஜ்யம்-14
யாப்பருங்கலம்-56
யாப்பருங்கல விருத்தி-37
யாப்பு அமைப்பு-39
யோகப் பயிற்சி-63

ரவீந்தரநாத் தாகூர்-2
ரஸ்கின்-95
ராமமூர்த்தி. பி-2
ராஜாஜி 10, 91
ராஜமையர்-4
லோகோபகாரி-7
வங்காளிகள் 9
வடமொழிக் கலப்பு-3
வ.வே.சு. ஐயர்-36, 81
வரம்பிகந்த ஆர்வம்-35
வழக்கறிஞர்-72
விக்டோரியா காலம்-65
விசுவாமித்திரசிருஷ்டி-36
விடுதலைப்போராட்ட வீரர்கள்-10
விவேகபானு-16
விழலுக்கு இறைத்தநீர்-38
வீரசோழியம்-55
வெற்றிவேற்கை-12
வேதியப்பிள்ளை. த-102
வையாபுரிப்பிள்ளை-15, 21. 96, 100
ஸமஸ்கிருதச் சொற்கள்-88
ஜகந்நாத ராஜா-69
ஜமீன்தார்கள்-5
ஜீவன்-98
ஜீவித காலமர்மம்-108
ஜெர்மன் பாஷை-2
ஜேம்ஸ் ஆலன்-62, 92
ஜைனர்-54
ஹிந்து-3
ஸ்ரீ அரவிந்தர்-59
ஸ்ரீ வைகுண்டம்-28
ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார்-4
ஸ்ரீனிவாச சாஸ்திரி. வி. எஸ் 2

## பிழை திருத்தப் பட்டி

| பக் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 5 | 22 | சொல்லாகப்பணி | சொல்லாக்கப்பணி |
| 24 | 35 | பனிகளாக | பணிக்ளாக |
| 28 | 30 | பாடி | படி |
| 37 | 12 | சிலவற்றிக்கு | சிலவற்றுக்கு |
| 108 | 19 | பண்த்தக்கது | பண்ணத்தக்கது |
| 108 | 24 | கிறந்தது | சிறந்தது |

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

1. தமிழில் விடுகதைகள் ... ரூ. 12-00
2. உலகத் தமிழ் எழுத்தாளர் யார் ? எவர் ? ... ரூ. 6-00
3. தமிழர் தோற்கருவிகள் .. ரூ. 10-00
4. தமிழும் தமிழரும் ... ரூ. 5-00
5. தமிழர் இசை ... ரூ. 70-00
6. ம.பொ.சி.யின் இலக்கிய நூல்கள்-ஓர் மதிப்பீடு... ரூ. 20-00
7. இளங்கோவின் இலக்கிய உத்திகள் ... ரூ. 12-00
8. திராவிட மொழி இலக்கியங்கள் ... ரூ. 35-00
9. உ. வே. சா. இலக்கணப் பதிப்புகள் ... ரூ. 12-00
10. தமிழ் இலக்கியக் கொள்கை - 9 ... ரூ. 20-00
11. தொல்காப்பியம் புணரியல் ... ரூ. 10-20
12. தொல்காப்பியம் வேற்றுமை மயங்கியல் ... ரூ. 12-00
13. தொல்காப்பியம் - விளிமரபு ... ரூ. 6-00
14. தொல்காப்பியம் - பெயரியல் ... ரூ. 12-00
15. தொல்காப்பியம் - வினையியல் ... ரூ. 20-00
16. பிரபந்த தீபிகை ... ரூ. 12-00
17. கண் மருத்துவம் ... ரூ. 50-00
18. வர்ம சூத்திரம் ... ரூ. 10-00
19. தன்வந்திரி குழந்தை வாகடம் ... ரூ. 14-00
20. வெள்ளைக்காரன் கதை ... ரூ. 7-00
21. மெய்க்கீர்த்திகள் ... ரூ. 20-00
22. சிந்து இலக்கியம் ... ரூ. 8-00
23. தமிழ்ச் சுவடிகள் அட்டவணை ... ரூ. 6-00
24. தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள் ... ரூ. 12-00
25. இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் - 1 ... ரூ. 12-00
26. இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் - 2 ... ரூ. 22-00
27. இஸ்லாம் வளர்த்த தமிழ் ... ரூ. 15-00
28. உ. வே. சா. சங்க இலக்கியப் பதிப்புகள் ... ரூ. 10-00
29. டாக்டர் உ. வே. சா. காப்பியப் பதிப்புகள் ... ரூ. 10-00
30. தமிழரின் தாயகம் ... ரூ. 10-00
31. பாவாணரும் தனித்தமிழும் ... ரூ. 12-00
32. தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வு ... ரூ. 10-00
33. செங்கை மாவட்ட ஊர்ப் பெயர்கள் ... ரூ. 25-00
34. மொழி பெயர்ப்பியல் ... ரூ. 10-00
35. தமிழர் திருமணம் ... ரூ. 25-00
36. தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் ... ரூ. 35-00
37. தமிழ் நாவல்கள் (அகர வரிசை) ... ரூ. 40-00
38. எண்பத்திரண்டில் தமிழ் ... ரூ. 90-00
39. மகாமதிப்பாவலர் ... ரூ. 11-00
40. உலக முதன் மொழி தமிழ் ... ரூ. 12-00
41. Siddha Medicine (Heritage of the Tamils) ... Rs. 45-00
42. Cultural Heritage of the Tamils ... Rs. 20-00
43. Literary Heritage of the Tamils ... Rs. 50-00
44. Tamil Drama ... Rs. 20-00
45. Dr. Mu. Va ... Rs. 20-00
46. Thiru Murugan ... Rs. 5-00
47. A Study of the Perunkatai ... Rs. 12-00
48. Tamil Writers Directory ... Rs. 10-00
49. Dissertations on Tamilology ... Rs. 10-00
50. Tamil - Text (An-Auto Instructional Course)... Rs. 25-00
51. Siddha Medical Manuscripts in Tamil ... Rs. 8-00
52. Karaikkal Ammaiyar ... Rs. 6-00
53. Heritage of the Tamils-Temple Arts ... Rs. 50-00
54. Tolkappiyam (An English Translation) ... Rs. 25-00
55. Heritage of the Tamils Education & Vocation... Rs. 50-00